

KALKI 6.2.2005 ரூ.6.00
கல்கி
ஹெல்த்
ஸ்பெஷல்!
வலிக்கு இருக்குது வழி!
தட்டு நிறைய சத்து!
நீ நடந்தால் நடையழகு!
அஜீரணம் ஒழிக!


Butterfly®
Blue line
Stainless Steel Pressure Cooker
with Aluminium Thermal Base
ALUMINIUM THERMAL BASE
Ensures uniform heat distribution
& heat retention, reducing cooking time
and preventing charring !
Steel the show
Butterfly®
Good for a lifetime
Exchange your old cooker any Brand,any condition for New Butterfly Stainless Steel Cooker at an attractive exchange rate.
Available at all leading shops &Butterfly Home Appliances (Near Vaanavil),337,Mount Road,Teynampet,Chennai-18.Ph:2434519,2434612,Fax2434352

4, 5, 6, 18, 24,
25, 33, 34,
40, 41, 42, 43,
48, 49, 50, 51,
55, 56, 57,
82, 83

எல்லாமே

ஹெல்த்


ஸ்பெஷல் பக்கங்கள்...

கல்கி
6.2.2005



கொடி காத்த குமார்!

தமது படங்களில் முடிந்த அளவுக்கு ரசிகர் மன்றக் கொடியைப் படம் முழுவதும் பயன்படுத்த முயலுகிறாராம். முன்பெல்லாம் கட்சியில் இருந்த எம்.ஜி.ஆர், ராஜேந்தர் போன்ற நடிகர்கள் தமது திரைப்படங்களில் தி.மு.க.





கொடியைப் பயன்படுத்தி விசுவாசம் காட்டினார்கள். ஆனால் இப்போதுள்ள நடிகர்களோ கட்சிக் கொடியைக் காட்டாவிட்டாலும் பரவாயில்லை · அதை மறைத்து விட்டு மன்றக் கொடியை காட்டுவது மூத்த தொண்டர்களை வருத்தமடையச் செய்துள்ளதாம்.

● தமிழக அரசு டாஸ்மாக் கடைகளுக்கான பார்களை தனியாருக்கு விட திட்டமிட்டது முதலில் ரத்தங்களை குஷிப்படுத்தினாலும், பின்னர் அதிலுள்ள நிபந்தனைகள், குறிப்பாக பாரிலேயே அசைவ உணவுகளைச் சமைப்பதற்குத் தடா போட்டிருப்பது அதிர்ச்சி அளித்துள்ளதாம். வெளியில் வைத்துச் சமைப்பதால் இரட்டைச் செலவு ஆகும்; லாபம் அதிகம் பார்க்க முடியாது என்பதுதான் பெரிய வருத்தம். வரும் வாய்ப்பை விடுவதா, ஏற்பதா என்ற குழப்பத்தில் ஆழ்ந்துள்ளார்களாம் ரத்தங்கள்.

● கேப்டன் பாணியில் சுப்ரீமும்

● சுனாமி பீதியில் கடற்கரையோரப் பகுதிகளை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு மீனவர்கள் செல்வதை, பொன்னான வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள ஒரு திட்டம் கமுக்கமாகத் தயாராகி வருகிறதாம். மெரீனாவில் ஏற்கெனவே (மீனவர்களின் எதிர்ப்பினால்) நின்றுபோன அந்த 'மெகா' புராஜெக்டை மீண்டும் செயல் வடிவத்துக்குக் கொண்டு வருவதுதான் அந்தத் திட்டமாம். இதைப் புரிந்துகொண்ட தோழர்கள் இந்த ரகசியத்தை அம்பலப்படுத்தி, இதைத் தடுத்தே தீருவோம் என்று கோஷமிடத்

திட்டமிட்டுள்ளார்களாம்.

● கலைஞருக்கு எதிராக போஸ்டர் ஒட்டி டாக்டர் கிருஷ்ணசாமி பரபரப்பை ஏற்படுத்தியது சிறுத்தைகளுக்கு அளவுகடந்த சந்தோஷத்தை ஏற்படுத்தியுள்ளதாம். டாக்டரின் இந்த திடீர் நடவடிக்கை ஏற்படுத்தும் அதிருப்தி தங்களுக்கு சாதகமாகத் திரும்பும், அதன் மூலம் தங்களது கணக்கு உயர்ந்து பெரும்பாலான 'ரிசர்வ்' தொகுதிகளை அள்ள வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக பெருமை பொங்குகின்றனராம் சிறுத்தைகள்.

● இடுப்பு வலிக்காகவும் குடல் சம்பந்தப்பட்ட பிரச்னைக்காகவும் கலைஞருக்கு ஆபரேஷன் செய்வதாய் டாக்டர்கள் முடிவு செய்திருக்கிறார்களாம். விரைவில் அப்பல்லோவில் அவர் அட்மிட் ஆகக் கூடும்.

● முத்தமிழ்ப் பேரவையின் ஆண்டு விழாவில் பேசிய கலைஞர், பெரும்பாலான இசை விழாக்களில் தமிழிசை பாடப்படுவதில்லை என்று குறைபட்டுக் கொண்டார். அப்போது பா.ம.கவின் பொங்கு தமிழ்ப் பண்ணிசைப் பெருவிழாவில் தமிழிசைப் பாடப்படுவதைப் பற்றி குறிப்பிடாமல் விட்டு விட்டார் கலைஞர். இது பாட்டாளிகள் மத்தியில் இலேசான வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளதாம்.

- கலை



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
கி. ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

வைட்டமின்கள் வேஸ்டா?



சில வருடங்களுக்கு முன்பு வரை சிறு குழந்தைகளுக்கு வைட்டமின் மருந்துகளை (டெக்ஸா-ஆரஞ்சு போன்றவை) அளிப்பது வழக்கம். இப்போதெல்லாம் அப்படி அளிப்பதில்லேயே! என்ன காரணம்?

குழந்தை நல மருத்துவர் டாக்டர் கே.எம்.மனோகரனிடம் விளக்கம் கேட்டோம்.

"மூன்று, வருடங்களுக்கு முன் உலக சுகாதார நிறுவனம் எடுத்த தீர்மானத்தின் எதிரொலி இது.

குழந்தைக்கு ஆறுமாதம் ஆகும்வரை தாய்ப்பால் மட்டுமே அளிக்கப்பட வேண்டும் என்பதில் தீர்மானமாக இருக்கிறது உலக சுகாதார நிறுவனம்.



குழந்தைக்கு தாய்ப் பாலைத் தவிர வேறு எதை வாய்வழியாக அளித்தாலும், அதனால் தொற்றுநோய் உண்டாகலாம். வயிற்றுவலி, வயிற்றுப் போக்கு ஆகியவை ஏற்படலாம்.

தவிர தாய்ப்பாலிலேயே பலவித நோய்த்தடுப்பு சக்திகள் உள்ளன. வேறு மருந்துகளைக் கொடுப்பதன் மூலம், தாய்ப்பாலின் சக்தி முழு அளவில் கிடைக்காமல் முடங்கிப்போக வாய்ப்பு இருக்கிறது.

என்றாலும் தாய்ப்பாலில் இல்லாத ஒரு சில சத்துக்களும் உண்டு. வைட்டமின் கே தாய்ப்பாலில் கிடையாது. தேவைப்படும் குழந்தைகளுக்கு இதைத் தரலாம்.

மற்றபடி குறிப்பிடத்தக்க ஆரோக்கியக் குறைவு கொண்ட குழந்தைகளுக்கு மட்டும் வைட்டமின்கள் உட்பட வேறு மருந்துகள் அளிக்கப்படுகின்றன. இவையெல்லாம் விதிவிலக்குகள்தான்."

"சரி, பெரியவங்க கலர் கலரா வைட்டமின் மாத்திரைகளை விழுங்கறாங்களே.. இந்தப் பழக்கம் நல்லதுதானா?"

"உடல் ரீதியா ஏதாவது சத்துக் குறைபாடு இருந்து, மருத்துவர்களே பரிந்துரை செய்தால், இரும்பு, கால்ஷியம்னு வைட்டமின் மாத்திரைகளைச் சாப்பிடலாம். அதுவும் அவர் குறிப்பிடும் காலக் கட்டம் வரை மட்டுமே! நாமாக, சாப்பிடுவது தப்பு. பிகாம்ப்ளெக்ஸ் போன்ற சத்துகள் அதிகமானால், அது சிறுநீரில் வெளியாகிவிடும். ஆனால் வைட்டமின் ஏ, டி, ஈ, கே போன்றவை கொழுப்பில் கறையக் கூடியவை என்பதால், உபரி சத்துகள் உடலில் தங்கிவிடும் ஆபத்துண்டு. ஓவர் டோஸாக மாறும் வைட்டமின்கள் கல்லீரலைப் பெரிதும் பாதிக்கும்.

வைட்டமின் மாத்திரைகளைப் பற்றிய பிரசாரம் எல்லாம் மருந்து கம்பெனிகளால் மிகைப்படுத்தப்படுபவையே! காய், கனி, தானிய, கிரை வகையில் கிடைக்கும் இயற்கையான வைட்டமின்களே மிகச் சிறந்தவை.



• கே.எம்.மனோகரன்

- ஜி.எஸ்.எஸ்.

படம்: ஸ்ரீஹரி, படத்தில் : குழந்தை ஈஷ்வருடன் அஞ்சலி

லவ் ஆல் ரகசியம்!

ஆஸ்திரேலியன் கிராண்ட் ஸ்லாம் போட்டியில் மூன்றாவது சுற்றுவரை முன்னேறி, செரீனா வில்லியம்ஸ் என்கிற மலையோடு மோதிய ஹைதராபாத் மயிலான சானியா மிர்சா, தமது வெற்றியின் ரகசியமாகக் கூறுவது தனது ஃபிட்னஸைத்தான். இதோ வெற்றி மங்கையின் ஃபிட்னெஸ் இரகசியங்கள்.

"டென்னிஸ் அரங்கில் ரஷ்யர்கள், ஐரோப்பியர்கள் பெரும் பலம் கொண்டவர்கள். இவர்களோடு மோதுவதென்றால் ஸ்டாமினாவும், வில்பவரும் நிச்சயம் இருக்க வேண்டும். அது என்னிடம் தேவையான அளவு உள்ளது.

தினமும் காலை ஐந்தரை மணிக்கு எழுந்து விடுவேன். ஒன்றரை மணி நேரம் ஜிம்மில் உடற் பயிற்சி, ரன்னிங். காலை உணவு முடித்தபின்பு இரண்டரை மணி நேரம் வேர்க்க விறுவிறுக்க டென்னிஸ் பயிற்சி. மீண்டும் மதியம் இரண்டு மணியிலிருந்து நாலரை வரை இதே 'லவ் ஆல்' கேம். சிறிது ஓய்வுக்குப் பிறகு, இரண்டு மணி நேரம் உடற்பயிற்சி செய்வேன்.

இக்காலப் பெண்கள் போல் டயட்டில் இருப்பது அறவே பிடிக்காது. பச்சைக் காய்கறி, அரிசி உணவை விட, இறைச்சியை அதிகமாக உண்பேன். இதன் மூலம் எடை போட்டுவிட்டாலும், கடுமையான பயிற்சியின் மூலம் தேவையற்ற கொழுப்பு கரைந்து விடும். நிறைய பழச்சாறு சாப்பிடுவேன்.



ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குப் பிறகு வேகம் குறைந்து டயர்ட் ஆகிவிடுகிறேன். முன்பு ஸ்பெயினில் ட்ரெய்னிங் எடுத்தது போல், மீண்டும் உடற்பயிற்சிக்காகவும் ஃபிட்னஸுக்குத் தேவையான இதர விஷயங்களுக்காகவும் கூடுதல் கவனம் செலுத்தி, என்னை சர்வதேசப் போட்டிகளுக்கு ஏற்றாற்போல் தகுதியாக்கிக் கொள்ளப் போகிறேன்.

ஒரு நாளைக்கு ஐந்து முறை கடவுளைத் தொழுவேன். இது தியானத்திற்குரிய பலனை எனக்கு அளிக்கிறது. எல்லோரிடமும் அன்பாக இருப்பேன். அந்தப் பண்புதான் என்னுடைய ஆரோக்கிய ரகசியம். செரீனா வில்லியம்ஸுடன் ஆடும்பொழுது நிஜமாகவே வயிற்றில் பட்டாம்பூச்சி பறந்து என்னைக் கலக்க வைத்ததென்னவோ உண்மைதான். இனி வரும் காலங்களில் எனக்குள் சாந்தமாக இருக்கவும் பழகிக் கொள்ளப் போகிறேன்."

- செந்தில்



தகுதியுள்ள

கல்கி இதழ் ஆரம்பித்த புதிதில், அதன் ஆசிரியர் கல்கி கிருஷ்ணமூர்த்திக்கு ஒரு பெண் கடிதம் எழுதினார் :

'ஐயா!

'கல்கி'யில் ஸ்த்ரீகளுக்குப் பிரத்யேகப் பகுதி இல்லாதது எனக்கு மிக்கக் குறையாயிருக்கிறது. அது ஒன்று சேர்க்கக் கூடாதா? 'கல்கி' தினே தினே வளர இறைவனை வேண்டும்...

ஆர். சுந்தரி
கோம்பூர்
(4.10.41)

இதனை நவம்பர் 1, 1941 'கல்கி' இதழில் வெளியிட்டு பதிலும் தந்தார் ஆசிரியர் :

'கல்கி'யில் வரும் ஒவ்வொரு பகுதியும் ஸ்த்ரீகளுக்கும் உரியதுதான். ஸ்த்ரீகளுக்கென்று தனிப் பகுதி ஒதுக்கி, அவர்களை அப்படித் தனியாக ஒதுக்கி வைக்க விரும்பவில்லை. மன்னிக்கவும்.

இந்த விளக்கத்துக்கு இரண்டு அர்த்தங்கள். ஒன்று : பெண்கள் அனைத்து விஷயங்களையும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும்; சிந்தனையாளர்களாக, சாதனையாளர்களாக வளர வேண்டும் என்பது கல்கி கிருஷ்ணமூர்த்தியின் ஆவல். இரண்டு : கல்கி இதழின் ஒவ்வொரு பக்கமும் பெண்களின் உணர்வுகளை மதித்துப் போற்றும் வகையில் அமைந்திருக்கும் என்கிற உத்தரவாதம்.

நாற்பதுகளில் ஒதுங்கியிருந்து தனிப் பகுதி கேட்ட தமிழ்நாட்டுப் பெண்களைச் சமையல்கட்டிலிருந்து வெளிவந்து சரித்திர நாவல்களையும் அரசியல் விமர்சனங்களையும் சப்புக்கொட்டி ரசிக்க வைத்த பெருமை கல்கி கிருஷ்ணமூர்த்தியின் எழுத்துக்களுக்கு உண்டு; கல்கி பத்திரிகைக்கும் உண்டு.

எண்பதுகளை நெருங்கிய காலகட்டத்தில் தமிழகத்தில் பெண்கள் 'வீடு, வாசல், சமையல்' என்கிற சின்ன வட்டத்தைத் தாண்டி வெளியே வர ஆரம்பித்துவிட்டார்கள். அரசாங்கப் பணி, அலுவலகப் பணி, சுய தொழில், என்று தேடிக் கொண்டு, வீட்டுக்கும் நாட்டுக்கும் வளம் சேர்க்க முனைந்தார்கள். இந்தக் கால கட்டத்தில் அவர்களுக்கான ஆதரவுத்தளமாக பூத்ததுதான் மங்கையர் மலர் பத்திரிகை. 1981ல் கல்கி நிறுவனம் அதனை வாங்கி வெளியிட ஆரம்பித்தது. முதல் இதழ் 12,000 பிரதிகள் அச்சாயின. துணை ஆசிரியராகப் பணியில் சேர்ந்து தன் மகளைப் போல் மங்கையர் மலரை வளர்த்தார் மஞ்சுளா ரமேஷ். வாசகிகளின் தேவை அறிந்து அவர் வழங்க, அவர்களும் விச்வாசம் மிகுந்த ஆதரவாளர்களாக மங்கையர் மலருடன் வளர்ந்தார்கள். மஞ்சுளா ரமேஷும் ஆசிரியர் பொறுப்புக்கு உயர்ந்தார்.

இந்த பிப்ரவரி 2005ல் மங்கையர் மலர் லட்சக்கணக்கான வாசகிகளுடன் வெள்ளிவிழா ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இத்தருணத்தில் மஞ்சுளா ரமேஷ் தனியொரு பெண்கள் இதழுக்கு ஆசிரியராகி நடத்திவருவதும், சகோதர பத்திரிகை நிறுவனங்கள் அனைத்தும்







• முதல் இதழ்

பெண்களுக்கான இதழை வெளியிட்டு வருவதும்கூட மங்கையர் மலரின் மகத்தான வெற்றியே.

மஞ்களா ரமேஷின் இடத்தில் எல்லோருக்கும் அறிமுகமான ஒரு மூத்த பெண்மணி பொறுப்பேற்க வேண்டும் என விரும்பி ரேவதி சங்கரனை கல்கி நிர்வாகம் அணுகியபோது, முடிவெடுக்க அவர் எடுத்துக் கொண்ட நேரம் பதினைந்தே நிமிடங்கள்தான்! இத்தனைக்கும் அவருக்குப் பத்திரிகைத் துறையில் முன் அனுபவம் இல்லை. மீடியாவின் பல கிளைகளில் ஏற்கெனவே நிகழ்ச்சிகளுக்கான ஒப்பந்தம் வேறு இருந்தது. சென்ற ஆண்டு வரலக்ஷ்மி நோன்புக்கு முந்தைய தினம் அவரைச் சந்தித்துக் கேட்டோம்.

"குருவித் தலையில் பனங்காயை வைக்கிறீர்களே!" என்றார்.

"தகுதியுள்ள குருவிதான்!" என்றோம். தமது வீட்டுப் பூஜை அறையில் ஒரு நிமிடம் நின்றார். திரும்பி வந்து, "புவனேசுவரி உத்தரவு கிடைச்சுடுத்து" என்றார்.

"வீட்டில் வேறு யாரையேனும் கலந்தாலோசிக்க வேண்டாமா...?" என்று நாங்கள் இழுத்தோம். (அவரது கணவர் சங்கரன் உறங்கிக் கொண்டிருந்தார்)

"முடிவெடுத்தாச்சு" என்றார் ரேவதி, சிரிப்புடன்.


குருவி!

அந்த மலர்ந்த சிரிப்புக்குப் பின்னால் உள்ள பலம் என்ன என்பது பிறகு புரிந்தது. அவர்கள் இல்லத்தில் வீட்டு வேலைகளைக் கணவனும் மனைவியும் சரிபாதியாகப் பகிர்ந்து கொண்டு செய்கிறார்கள்! வீட்டுப் பணிக்கு ஆளில்லை. ஒருத்தர் பெருக்கினால் மற்றவர் துடைக்கிறார். சங்கரன் காய்கறி நறுக்கித் தந்தால் ரேவதி சமைக்கிறார். இன்றைய தலைமுறையின் இளம்பதி தம்பதிகளுக்கு இதை விடச் சிறந்த முன்னுதாரணம் இருக்குமா!

புத்தம்புது பகுதிகள், போட்டிகள், மேலும் மேலும் வாசகர் பங்கேற்பு என்று மங்கையர் மலர் வெள்ளிவிழா ஆண்டு தொடங்கிவிட்டது. வாழ்த்தும் வாசகர்களின் நல்லெண்ணத்தில் நீச்சலடித்தபடி புன்னகையும் சிந்தனையுமாக ரேவதி சங்கரன் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

'ம்' என்றால் கவிதை எழுதுகிறார்; 'உம்' என்றால் பாடல் பிறந்துவிடுகிறது! சித்திரக் கலையிலும் வல்லவர்; பிறர் திறமைகளைச் செதுக்கி வடிவமைக்கக்கூடிய சிற்பி! குன்றாத அவருடைய உற்சாகம் அனைவரையும் பற்றிக் கொள்கிறது.

மங்கையர் மலர் வாசகிகளின் இல்லத் திருவிழாவான இந்த வெள்ளிவிழாவில் அனைவரும் பங்கேற்போம். ரேவதி சங்கரனின் தலைமையில் மங்கையர் மலர் திருவிழாக்கள் தொடரவும் உலகம் பயனுறவும் வாழ்த்துவோம்.





• வெள்ளி விழா இரட்டைச் சிறப்பிதழ்

பழிவாங்கும் வெறி... பரிதவிக்கும் ராயலசீமா!

ராயலசீமா பகுதியைச் சேர்ந்த அனந்தபூர் மாவட்டத்தில் மட்டும், கடந்த சில மாதங்களில் நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இதைத் தொடர்ந்து உச்ச கட்டமாக நடந்திருக்கிறது பெனுகொண்டா தொகுதி தெலுங்கு தேச சட்டமன்ற உறுப்பினரான பரிதாலா ரவி கொலை. ஆனால் இது முற்றுப் புள்ளியல்ல. ராயலசீமா பகுதியில் ஒரு வாழ்க்கை முறையாகவே கையாளப்பட்டு வரும் வெடிகுண்டு - துப்பாக்கி கலாசாரம், மேலும் பல உயிர்களை பலி வாங்கிக்கொண்டே இருக்கும் என்கிறார்கள். இந்தத் தொடர் கொலைகளுக்குக் காரணம் அரசியலிலும் சமூக அந்தஸ்திலும் நிலவும் நீயா - நானா போட்டிதான். கடந்த பத்தாண்டுகளில் நிகழ்ந்துள்ள அரசியல் கொலைகளைப் பற்றி விசாரிக்க ஒய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி கோபாலராவைக் கொண்டு விசாரிக்க ஒரு கமிஷனே அமைக்கப் பட்டிருக்கிறது.



• எரிந்து...



• ...உருக்குலைந்து

ரவியின் அப்பா ஏழைப் பங்காளர். அப்பாவி மக்கள், பண்ணையார்களிடம் மாட்டிக் கொண்டு படும் அவஸ்தைகளுக்கு முடிவு கட்ட எண்ணினார் அவர். சூரி என்பவரின் அப்பா பெரிய மிராசுதார். அவரது கொலைக்குக் காரணம் ரவியின் அப்பா தான் என்பது ஊரெங்கும் பேச்சு. அங்கே தொடங்கியது பழிவாங்கும் வெறி. அப்பா இறந்த பின் பழிவாங்கும் எண்ணத்துடன் சூரி அலைந்தார். ஆனால் இடையில் ரவி நக்ஸலைட் இயக்கத்தில் சேர்ந்து விட்டார். பின்பு வெளிவந்து 1992ம் வருடம் தெலுங்கு தேசத்தில் சேர்ந்து விட்டார். சூரி காங்கிரஸில் இருந்தார். கேட்க வேண்டுமா! விரோதம் இப்போது அரசியல் ரீதியாகவும் வளர்ந்து விட்டது. 1997ல் ஹைதராபாத் நகரில் ரவியைக் கொல்ல காரில் வெடிகுண்டு வைத்தார் சூரி. ஆனால் ரவி தப்பித்து விட்டார். இருபத்தாறு அப்பாவிகள் இறந்து போனார்கள். இந்தத் தாக்குதலுக்கு ஏற்பாடு செய்த சூரி, இப்போது ஜெயிலில். சென்ற சட்டசபைத் தேர்தலில் ரவியை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டார் சூரியின் மனைவி பானுமதி! ஆனால் தோற்றுப் போய்விட்டார்.

இந்த அரசியல் விரோதம் இப்படி இருக்க, அனந்தபூர் மாவட்டத்தில் தெலுங்கு தேசக் கட்சியிலும் கோஷ்டிப் பூசல். வெட்டி மாய்ந்துக் கொள்ளும் அளவுக்கு அங்கே வளர்ந்து விட்டன

கோஷ்டித் தகராறுகள். ரவி கொல்லப்படும் போது பத்துப் பாதுகாவலர்கள் இருந்தும் கொலையாளிகள் தங்கள் காரியத்தைச் சிக்கென முடித்து விட்டுச் சென்று விட்டார்கள்! ரவியின் மீது நாற்பதுக்கும் மேற்பட்ட கிரிமினல் வழக்குகள் நிலுவையில் இருந்தனவாம்.

ரவியின் வரலாறு இப்படியிருக்க, முதல்வர் ராஜசேகர ரெட்டியும்



• நாயுடு

கதிகலங்கி நிற்கிறது. ரவியின் கொலை தொடர்பாக ராஜசேகர ரெட்டி மகன் ஜெகன் மோகன் ரெட்டியும், ராயலசீமா பகுதி சட்டம் - ஒழுங்கு போலீஸ் அதிகாரியான மீனாவும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக, ஐ.ஜி.யாக இருக்கும் மீனா, 'தனக்குக் கூடுதல் பாதுகாப்பு



• பரிதாலாரவி



• ராஜசேகர ரெட்டி



• போராட்டம்...


வன்முறை அரசியல் சூழலில் வளர்ந்தவர்தான். கடப்பா மாவட்டம் புலிவந்தயா பகுதியைச் சேர்ந்த இவருக்கு 'கடப்பா புலி' என்ற செல்லப் பெயரும் உண்டு. இவரது தந்தை அரசியல் எதிரிகளால் கொலை செய்யப்பட்டார். ஆனால் அப்பா கொலையைத் தொடர்ந்து பழி வாங்கும் போக்கைக் கையாளாமல் ஒதுங்கிக் கொண்டார் ரெட்டி என்கிறார்கள். சித்தூர் மாவட்டம் திருப்பதியில் முதல்வர் நாயுடுவைக் கண்ணிவெடி வைத்துக் கொல்ல முயன்ற நக்ஸலைட்டுகளின் வன்முறை மறக்க முடியாதது. சித்தூர் பகுதியில் சி.கே.பாபு என்ற தாதா நடத்தும் ரவுடிகள் ராஜ்யத்தில் பல கொலைகள் நடந்திருக்கின்றன. இப்போது இந்த பாபு, காங்கிரஸ் கட்சியை விட்டு நீக்கப்பட்டிருக்கிறார்.

இந்தப் பகுதியில் காவல்துறை

வேண்டும்' என்று கேட்டிருக்கிறார். இதிலிருந்தே அந்தப் பகுதியில் நிலவும் பழிவாங்கும் போக்கு புரியும்.

ராயலசீமாவின் கொலை மற்றும் வன்முறை பின்னணியைக் கொண்டு சமீப காலங்களில் 'இந்திரா', 'சம்பா', 'யக்னம்' என்கிற மூன்று தெலுங்குப் படங்கள் வெளிவந்து சக்கைப் போடு போட்டன. அரசியலை சுத்தமாக்க வேண்டும் என்று 'லோக்சத்தா' அமைப்பு வைத்துப் போராடும் ஓய்வுபெற்ற அதிகாரி ஜெயபிரகாஷ் நாராயணன், 'ரவி போன்றவர்களுக்குக் கட்சி டிக்கெட் கொடுக்கக் கூடாது' என்று வெளிப்படையாகவே சொன்னார். ஆனால் 'சுத்தமான' அரசியல்வாதியான சந்திரபாபு நாயுடு, அவரது யோசனையை ஒதுக்கி விட்டார். ஆந்திராவில் வன்முறை மாவட்டமான ராயலசீமாவில்தான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அன்புவழி காட்டும் ஆசிரமும் இருக்கிறது என்பது வியப்புக்குரிய உண்மை!

- ப்ரியன்



மிதிபடும் மனிதநேயம்!

குடியரசு தின விழாவில், குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் எழுதிய கவிதை, இசைப் பாடலாக ஒலித்திருக்கிறது. நாட்டைக் காக்கும் ஜவான்களைப் போற்றி அவர் எழுதிய தமிழ்க் கவிதை, ஹிந்தியில் மொழிபெயர்க்கப்பட்டு, அகில இந்திய வானொலியின் இசைக் குழுவினரால் பாடப்பட்டிருக்கிறது.


ஆனால், குடியரசு தினத்துக்கு இரண்டு நாள் முன்னதாக நடந்தது என்ன..? ஜவான்கள் சிலர் பயணம் செய்த ரயில் பெட்டியில் ஐந்து பேர் ரிசர்வேஷன் இல்லாமல் ஏறியிருக்கிறார்கள். இந்த ஐந்து பேரையும் ரயிலிலிருந்து பலவந்தமாக வெளியே தள்ளியிருக்கிறார்கள் அந்த ஜவான்கள். பக்கத்தில் ஓடிய தண்டவாளத்தில் அவர்கள் விழ, விரைந்து வந்துகொண்டிருந்த மற்றொரு ரயில் அவர்களை அரைத்துக் கொன்றுவிட்டது!

குடிமக்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டிய ராணுவ வீரர்கள்தான் இவ்வாறு அரக்கத்தனமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். பிளாட்ஃபாரத்திலாவது அந்தப் பயணிகளை இறக்கி விட்டிருக்கக் கூடாதா?

ராணுவச் சீருடை அணிந்தால் மிடுக்கும் வீரமும் தோன்ற வேண்டும். அதற்காகத்தான் சீருடையே ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில், காக்கிச் சீருடை என்பது மக்களின் பாதுகாப்புக்காகவும் ஏற்பட்டது. பாதுகாப்புக் கோரி தயங்காது மக்கள் அணுக வசதி




கல்கி



2005 பிப்ரவரி 6
தாரண தை 24
மலர் : 63
இதழ் : 28


தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



செய்து தருவது. அதனால்தான் போலீஸும், சாரணர்களும்கூட அந்த நிறச் சீருடை அணிகிறார்கள். ஆனால், நவீன கால யுத்த முறைகளும் போர்த் தளவாடங்களும் குரூரங்களுக்கு இடங்கொடுப்பதால், பல வீரர்களுக்குச் சீருடை அணிந்ததுமே வீரத்துக்குப் பதிலாக வக்கிரம் பொங்கி எழுகிறது. இதன் விளைவுதான் எதிரிநாட்டுப் பெண்களுக்கும் குடிமக்களுக்கும் ராணுவக் கைதிகளுக்கும் இழைக்கப்படும் கொடுமைகள். ஈராக்கை ஆக்கிரமித்த அமெரிக்க ராணுவம், கைதிகளிடம் நம்பமுடியாத அளவுக்குக் கேவலமாக நடந்து கொண்டதைப் பார்த்தோம். தற்போது பிரிட்டிஷ் ராணுவமும் அவ்வாறு நடந்து கொண்டதாகத் தெரிய வந்துள்ளது. இலங்கையில் இந்திய அமைதிப்படை இழைத்த கொடுமைகள் இன்னமும் மறக்கப்படவில்லை.

உலகம் எவ்வளவோ முன்னேறிவிட்டது. விஞ்ஞானம், சிந்தனை, நாகரிகம் என்று யாவும் வளர்ந்துவிட்டன. ஆனால், மனித நேயம் மட்டும் வளர்வதற்குப் பதிலாகக் குறைந்து கொண்டே வருகிறது.

மஹாராஷ்டிராவின் சதாரா மாவட்டத்தில் வாய் என்ற நகரிலுள்ள கலுபாய் ஆலயத்தில், பௌர்ணமி அன்று லட்சக் கணக்கான மக்கள் பிரார்த்தனை செலுத்த வருவார்கள் என்பது நிர்வாகிகளுக்குத் தெரியும். ஆனால், அன்றைய தினம் வந்து குவிந்த ஏராளமான பக்தர்களைச் சமாளிக்க அந்த ஆலயம் எவ்வகையிலும் தயாராயில்லை; காவல்துறையும் உரிய ஏற்பாடுகளைச் செய்யவில்லை. மூன்று லட்சம் பேர் திரண்ட இடத்தில் இருநூறு காவல்துறையினர் தான் இருந்திருக்கிறார்கள். படிகளில் தேங்காய் உடைத்தபடி ஏறும் பிரார்த்தனைக்கான பாதை மிகக் குறுகலானது. ஒரு சமயத்தில் ஒருவர் மட்டுமே செல்லக் கூடிய ஒற்றையடிப் பாதை அளவுக்குத்தான் இருந்திருக்கிறது. உடைக்கப்பட்ட தேங்காய்கள் அப்புறப்படுத்தப்படாமல் அப்படியே இருந்திருக்கின்றன. போதாக்குறைக்கு, பாதையின் இருபுறமும் பெட்டிக்கடைகள் வேறு! கீற்றுக் கொட்டகைகளின் கீழ் கேஸ் சிலிண்டர்கள் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறது. கூட்டத்தை நெறிப்படுத்தவோ கட்டுப்படுத்தவோ எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. படிக்கட்டுகளின் மேல் பகுதியிலிருந்த கடைகளில்



முதலில் தீப்பற்றிக் கொள்ள, கீழ்ப்பகுதியில் இருந்தவர்கள், மேலே இருந்த தங்கள் உறவினர்களைக் காப்பாற்ற மீண்டும் படியேற முயன்றிருக்கிறார்கள். பெரிய தள்ளுமுள்ளு உருவாகி குறைந்தபட்சம் முந்நூறு பேர் இறந்திருக்கிறார்கள்!

மஹாராஷ்டிராவில் இந்தத் துயரகரமான நிகழ்வு; தமிழகத்தில் ஆலடி அருணா வெட்டிக் கொலை; ஆந்திராவில் தெலுங்கு தேசம் எம்.எல்.ஏ. பரிதாலா சுட்டுக் கொலை; அதைத் தொடர்ந்து ஆந்திராவின் பல பகுதிகளில் கலவரம் வெடித்திருக்கிறது!

மொத்தத்தில் இந்தியா ஒரு ருத்ர பூமியாக மாறி வருகிறது! மனித உயிர்களைத் துச்சமாக மதிக்கும் போக்கு அதிகரித்துவிட்டது! ஆந்திராவில் ஆட்சியிலிருக்கும் காங்கிரஸ் முதல்வர், காவல் துறையில் பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையில் தமது மகனின் பெயர் இடம் பெற்றிருக்கிறது என்று தெரிந்ததும் வழக்கை சி.பி.ஐ.க்கு மாற்ற சம் மதித்திருக்கிறார். இந்தச் செயலை நாம் வரவேற்கலாம். ஆனால், ராயலசீமா மாவட்டம் நக்ஸல் வன்முறையின் உறைவிடமாகத் தொடர்ந்து இருந்து வருகிறது என்பதை மறந்துவிட முடியாது. அடுத்தடுத்து வந்த ஆந்திர அரசுகளோ மத்திய அரசோ இதற்காக என்ன செய்தன?

கொலையுண்ட பரிதாலா ரவி என்ற எம்.எல்.ஏ., நக்ஸல் இயக்கத்தில் இருந்தவர். வன்முறையாளர். வன்முறைப் பாதையைக் கைவிட விரும்பி அவர் தெலுங்கு தேச கட்சிக்கு வந்திருக்கலாம். ஆனால், வன்முறை அவரைத் தொடர்ந்து துரத்தி வந்து கொன்று போட்டுவிட்டது.

வழிகாட்ட வேண்டிய அரசியல் தலைவர்கள், தவறான முன்னுதாரணமாக இருக்கிறார்கள்.

ஆதரித்துக் காக்க வேண்டிய ராணுவம் குரூரமாய்ப் பொதுமக்களைக் கொல்கிறது.

ஆலயத் திருவிழாக்களில் கூட்டம் நெரியும் என்று தெரிந்தும் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யாமல் அரசு இயந்திரமும் போலீஸ் துறையும் மெத்தனமாக இருக்கிறது.

சராசரி இந்திய உயிருக்கான மதிப்பு குறைந்து கொண்டே வருகிறது.

மனித நேயம் மதிக்கப்படாத நாடு எவ்வாறு முன்னேறும்! ●

திருப்பாச்சி



கொஞ்சம் காதல், கொஞ்சம் சென்டிமெண்ட், நிறைய ஆக்ஷன், இதுதான் விஜய். திருப்பாச்சியும் இதே ஃபார்முலாவுக்குள் அடங்கி விடுகிற கதைதான். ஆனால் மாநகர மனித வாழ்வின் நெருக்கடிகள் நிறைந்த யதார்த்தம், மிகைப்படுத்தப்பட்டிருந்தாலும் உயிர்த் துடிப்போடு அதற்குள் ஒளிந்து கொண்டிருக் கிறது.

எல்லா அடிப்படை வசதிகளும் உள்ள ஊரில்தான் தங்கைக்கு மணம் முடிக்க வேண்டும் என்று காத்திருக் கிறார் கிராமத்து இளைஞர் விஜய். அவர் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வது போல சென்னை மாப்பிள்ளை கிடைத்து திருமணமாகிச் சென்றுவிடும் தங்கையைக் காண, ஓர் இடைவெளிக்குப் பிறகு தலை நகருக்கு வருகிறார். ஆனால் வந்த இடத்தில் 'கெட்டும் பட்டணம் போ' என்ற அனுபவ மொழிக்கு முரணாக, கத்தியெடுத்து லோக்கல் தாதாக்களை வெட்டித் தள்ளும் கெட்டப் பையனாக மாற வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளுகிறது சென்னை.

கதைக்களம் கிராமத்திலிருந்து மாநகருக்கு இடம் பெயர்ந்த பிறகு மேலும் வேகமெடுப்பதில், இயக்குனரின் திரைக்கதை திறமை பளிச். அதே நேரம் அரிவாளுக்குப் புகழ்பெற்ற ஊரின் பெயரை தலைப்பாக வைத்துவிட்டு, படத்தில் வன்முறையை அறவே தவிர்த்திருந்தால் பாராட்டியிருக்கலாம். தவறி விட்டார். கண்முன்னே கணவனை நையப் புடைத்த ரவுடிகள், எங்கே திரும்ப வந்துவிடுவார்களோ என, பூட்டிய வீட்டுக்குள் நடுங்கிக் கிடக்கும் கர்ப்பிணித் தங்கை, தைரியத்தை வரவழைத்துக் கொள்ள அண் ணனின் சட்டையை அணிந்து கொள்ளும் அந்த ஒரு காட்சியிலேயே அண்ணன் - தங்கை பாசத்தின் அளவுகோலை நிலை நிறுத்தி விடு கிறார்கள்.

விஜய்க்கு ஆக்ஷன் நன்றாகவே பொருந்து கிறது. கிராஃபிக்ஸ் மிகைப்படுத்தல்கள் நிறைந்த ஆக்ஷன், அவரது இமேஜுக்குத் தேவையில் லாத ஒட்டு வேலை. கோயில் வளாகத்தில் அருள் வந்து விடும் பக்தையை 'குத்து நடனம்' ஆட விடுகிறேன் பேர்வழி என்று ஒரு பாடலைப் புகுத்தியிருப்பது, பக்தர் கள் மனத்தைப் புண்படுத்தும் அபத் தம். இதற்கு எதிர்மாறாக "என்ன தவம் செஞ்சிப்புட்டோம்" பாடல். உருகி ஓடும் பனிக்கட்டிபோல இதற்கு இசையமைத்திருக்கும் தினாவுக்குள் ஒரு மென்மையான இசைஞர் இருப்பது கண்கூடு.

திருப்பாச்சி - கோபக்கார அண்ணன் மட்டுமல்ல, மசாலா மன்னனும் கூடத்தான்!

- விஷுவல்தாசன்

● அபல் அவரெஜ்

வெள்ளி விழா



இரட்டைச் சிறப்பிதழ்

பிப்ரவரி 2005

இளையோர் மலர்

மெகா மெகா போட்டிகள், பரிசுகள்!

இளையோருக்கு 'கம்ப்யூட்டர்' பரிசு!

வருட கால வாசகியருக்குத்
தங்க நகை பரிசு!

மாணவர்களுக்கு எழுச்சியூட்டும்
கட்டுரைகள் கவிதைகள் பொக்கிஷமாக...

திருச்சியில் பிரமாண்டமான
வெள்ளிவிழா கொண்டாட்டம்

மங்கையர் மலர்



• ஸ்ரீ தன்வந்திரி பகவான்



• முரளிதர சுவாமிகளுடன் கணபதி ஸ்தபதி...

மந்திரங்களே எந்திரம்!

பொதுவாக ஒரு கோயிலை நிர்மாணிக்கும்போது, மூலவர் சிலையின் கீழ், உலோகத்தாலான எந்திரங்களை நிறுவுவது வழக்கம். இதற்கு மாறாக, காகிதத்தில் எழுதப்பட்ட மந்திரங்களை எந்திரமாகக் கொண்டு, மருத்துவக் கடவுளான ஸ்ரீ தன்வந்திரி பகவானுக்கு ஆலயம் அமைக்கும் பணி, வேலூர் வாலாஜா பேட்டையில் நடைபெற்று வருகிறது. மூன்று வயதுக் குழந்தை முதல் தொண்ணூறு வயது பாட்டி வரை 'ஓம் நமோ பகவதே வாசுதேவாய, தன்வந்த்ரயே அம்ருதகலச ஹஸ்தாய, சர்வ ஆமய விநாசநாய, த்ரைலோக்ய நாதாய, ஸ்ரீ மகா விஷ்ணுவே நமஹ' என்ற மந்திரத்தை எழுதி அனுப்பி உள்ளனர்.

மூலவர் சிலை ஏழடி உயரமுள்ளது. மேலிரு கைகளில் சங்கு சக்கரமும், கீழிரு கைகளில் அமிர்த கலசத்தையும், சீந்தல் கொடியையும் கொண்டு, சதுர்புஜராய் காட்சி தருகிறார். இவரது வலது மார்பில் மகாலட்சுமி குடி கொண்டுள்ளார். வலது தொடையில், ஆயுர்வேதத்தின் இன்றியமையாத கூறான அட்டைப்பூச்சி வடிவமைக்கப்பட்டுள்ளது. தாமரைப் பீடத்தில் அமர்ந்துள்ள இம்மூலவர், இதுவரை ஏறக்குறைய இரண்டு லட்சம் கி.மீ. தூரம் பயணம் செய்து, அறுபத்தி ஐந்து புண்ணியத் தலங்களுக்குச் சென்று, 135 ஹோமங்களும், 300க்கும் மேற்பட்ட திருமஞ்சனமும் கண்டுள்ளார்.

இந்த ஆலயத்தை, "ஸ்ரீ மாருதியின் உதவிக்கரங்கள்' என்ற அறக்கட்டளையின் கீழ் முரளிதரசுவாமிகள் நிர்மாணித்து வருகின்றார்.

"மேட்டுப் பாளையத்தைச் சேர்ந்த ஓர் அண்ணன் - தங்கை எழுதி அனுப்பியதைப் பற்றிச் சொல்ல வேண்டும். உலகில் எவரும் பார்வையற்றவராக இருக்கக் கூடாது என வேண்டிக் கொண்ட இவ்விருவருக்குமே பார்வை கிடையாது. மந்திரங்களை பிரெயில் முறையில் எழுதி அனுப்பியுள்ளனர். பெற்றோரை இழந்த ஐந்து வயதுச் சிறுமி, தனது தாத்தாவுக்கு நீரிழிவு வியாதி குணமாக வேண்டும் எனவும், தாத்தாவும் போய்விட்டால் தான் அனாதையாக நேரிடும் என்றும் கூறி மந்திரங்களை எழுதி அனுப்பியுள்ளாள்" என் உணர்ச்சிப் பெருக்குடன் கூறினார் சுவாமிகள்.

- ந.ச.நடராசன்

பளீர் இளமைத் தொடர் - 4



மறுதினமே நாகரத்தினம் சென்னைக்கு வந்துவிட்டார். பரமேஸ்வரனுக்கு போன் செய்தார்.

"முதலாளி வெளிநாடு போயிருக்கார்" என்றார் பரமேஸ்வரன், நெற்றியைச் சுருக்கிக்கொண்டு. அவருக்கும் நாகரத்தினத்துக்கும் எப்போதுமே சமன்பாடுகள் சரியில்லை. 'நீ வேலைக்காரன் நான் முதலாளி' என்கிற தோரணை, நாகரத்தினத்தின் நடையுடை பாவனைகளில் தொனிக்கும். ராகவேந்தரே அவர் முன் செய்யாத காரியங்களை, நாகரத்தினம் செய்வார். காலை மேஜைமேல் வைப்பார். குண்டூசியை எடுத்து பல் குத்துவார். மேஜையில் உள்ள அலுவலகக் கடிதங்களையெல்லாம் படிப்பார். அவர் வருகிறார் என்றாலே பரமேஸ்வரனுக்கு டென்ஷன்.

"ஐயர், என் ப்ரபோசலைப் பத்தி பெரியவர் ஏதாவது சொன்னாரா?" என்றார் போனில்.

"ஒரு கோடி ரூபாய்க்கு செக் கொடுக்கச் சொன்னார்."

"ப்ரபோசலைப் பத்தி எதும் சொல்லலியா?"

"எங்கிட்ட டிஸ்கஸ் பண்ணலை. உங்களுக்கு செக் அனுப்பச் சொன்னார். நீங்களே வந்துட்டீங்க. வீட்டுக்கு கார் அனுப்பட்டுமா?"

"பார்க் ஷெராட்டனுக்கு அனுப்பு. அங்கதான் தங்கியிருக்கேன். வீட்டு பத்திய சாப்பாடு எனக்கு சரிப்பட்டு வராது."

நுங்கம்பாக்கம் ஆபீசுக்கு வந்து அட்டகாசமாக போர்டு ரூமில் போய் உட்கார்ந்தார். சிகரெட் பற்ற வைத்துக்கொண்டார். அந்தக் கட்டடத்திலேயே புகை பிடிப்பதற்குக் தடை.

"எப்ப திரும்பி வரார்?"

"ஏன்?"

"அந்த கால்குலேஷன்ல ஒரு தப்பு இருந்தது. நீங்க பாக்கலியா ஐயர்?"

"பாத்தேன். ஸ்டீல் ப்ரைஸ் தப்பா இருந்தது."

"பெரியவர் இதை கவனிச்சாரா?"

"அவருக்கும் இது தெரியும்."

"வத்தி வெச்சிருப்பியே? அதனால இன்வெஸ்ட்மெண்ட் அதிகமாக்கணும். ப்ராஃபிட் லேசா குறையும்."

"இன்னும் எவ்வளவு வேணும்?"

"ஒரு கோடி."

"அது அவர் வந்தப்புறம்தான் தீர்மானிக்க முடியும். எனக்கு இன்ஸ்ட்ரக்ஷன் ஒரு கோடி வரைக்கும் தான்."

"ஐயர், இது உன் அப்பன் வீட்டுச் சொத்தா?"

"இல்லை."

"இல்லை கேட்டு வச்சுக்கறேன். அவருக்கு போன் போட்டு சொல்லிட்டு ரெண்டு கோடியா குடுத்துடு ஐயர்."

"முயற்சி பண்றேன்."

"ரோமிங் நம்பர் சொல்லும்."

"அதைக் கொடுக்க வேணாம்னு சொல்லியிருக்கார்."

"சொந்த மாப்பிள்ளைக்குக் கூட?"

உள்ளம் துறந்தவன்

சுஜாதா



"மெய்ல் அனுப்பறேன். நீங்களே அனுப்பலாமே."

"அட எதாவது... அனுப்புய்யா."

'nagaratnam wants one c more' என்று மெயில் அனுப்பினார். அதற்கு ராகவேந்தரின் சுருக்கமான பதில் NO!!!

அதை அவரிடம் காட்டினார்.

"நீ என்ன எழுதினே?"

"பாருங்க நாகரத்னம் சார், நீங்களே ஸிஎம்டி அட் இன்சாஃப் டாட்காம்க்கு ஒரு விவரமான மெயில் அனுப்பிடுங்க. உங்க குடும்பத்துக்குள்ள சமரசம் பண்றது என் வேலை இல்லை."

"உனக்குத் திமிர் ஜாஸ்தி ஐயர்."

"அப்படியே இருக்கட்டும்."

"சரி, ஒரு கோடி கொடு."

"அதுக்கு மிஸஸ் மரகதவல்லி கிட்ட கையெழுத்து வாங்கணும். ஒரு நாள் ஆகும்."

"புரியல."

"அவங்க பேர்ல இருக்கற ஷேர்ல ரெண்டாயிரத்தை விக்கச் சொன்னார்."

"வேண்டாம். அதை எம்பேர்ல மாத்திரு."

"சரி, அவர்கிட்ட சொல்லிட்டு."

"அடாடாடா, இதெல்லாம் அவர் கிட்ட சொல்ல வேண்டாம்."

"நாகரத்னம் சார், பெரியவரை உங்க கூட உடனே பேசச் சொல்லிர்றேன்."

"தேவையில்லை. சரி, நாளை டேட் போட்டு எம்பேர்ல செக்கா கொடு."

"புதுக் கம்பெனி 'கோவை மெட்டல்ஸ்' பேர்ல கொடுக்கச் சொன்னார்."

"அந்தக் கம்பெனி இன்னும் ரிஜிஸ்டர் ஆகலை."

"ஆய்ட்டதா ப்ராஜெக்ட் ப்ரபோசல்ல எழுதிருக்கு. அப்படி ஒரு கம்பெனி

இல்லையா?"

"இல்லை, இன்னும் இல்லை" ஏசி இருந்தும், அவர்களிடையே உஷ்ணம் பரவுவதை உணர முடிந்தது.

"திஸ் இஸ் ஹைலி இர்ரெகுலர். நல்ல வேளை போர்ட் பேப்பர்ஸ்ல சேர்க்கலை, இதை நான் பெரியவர்கிட்ட சொல்லியே ஆகணும்."

"அதெல்லாம் வேண்டாம். எம்பேர்ல செக் கொடு போதும்." சிகரெட்டை நசுக்கிவிட்டு, மற்றொன்றைப் பற்ற வைத்தார்.

"இல்லை, அப்படி அவர் சொல்லலை."

போர்டு ரூமில் நாகரத்தினமும் பரமேஸ்வரனும் மட்டும் இருந்தனர். நாகரத்தினம் முகம் சிவந்து, மேஜைக்கு குறுக்கே கடந்து பரமேஸ்வரனை கன்னத்தில் அறைந்தார், பிடித்துத் தள்ளினார்.

திடுக்கிட்டு கன்னத்தைத் தொட்டுக் கொண்டு பரமேஸ்வரன் கதவைத் திறந்து,

"பாகீரதி, ரமேஷ், கொஞ்சம் உள்ள வாங்க" என்றார்.

"நாகரத்தினம், இப்ப அடிங்க. சாட்சிங்க இருக்காங்க I need witnesses"

"எக்கேடு கெட்டுப் போ" என்று புறப்பட்டார் நாகரத்தினம்.

மாமனார் வீட்டுக்குப் போய் அங்கு தங்கியிருந்த கல்யாணியை 'புறப்படு' என்றார்.

"என்ன ஆச்சு மாப்பிள" என்றாள் மரகதவல்லி.

"உங்க வீட்டுக்காரருடைய காரியஸ்தன் ரொம்ப லொள்ளு புடிச்ச ஆசாமி. என்னமோ தன் சொத்தை எடுத்துக் கொடுக்கற மாதிரி. அவர்தான் இருக்கட்டும், மாப்பிள்ளை மேல நம்பிக்கை இல்லையாம். பணத்தை எம்பேர்ல தரமாட்டாராம்."

"எனக்கு ஒண்ணுமே புரியலை மாப்பிள்ளை."

"அதும் தன் பணத்தை கொடுக்க மாட்டாராம், உங்க பேர்ல இருக்கற ஷேர்களை வித்து புதுக் கம்பெனி பேர்லதான் தருவாராம். நான் என்ன பிச்சையா கேக்கறேன். ஒரு கோடியை ரெண்டு கோடியா பண்றதுக்கு, அயனா ஒரு திட்டம். உங்க வீட்டில் எனக்கு மரியாதையே கிடையாது. இங்க வந்ததே தப்பு. வாடி கழுதை போகலாம். அந்த வீட்டில் பெத்தவங்களைவிட வளர்த்தவங்களுக்குத்தான் செல்வாக்கு."

"மாப்பிள்ளை, இருங்க சாப்பிட்டுப் போகலாம்."

"குப்பையல போடுங்க சாப்பாட்டை, இந்த வீட்டில பச்சைத் தண்ணி சாப்பிட மாட்டேன்."

அப்போது மஞ்சரி உள்ளே நுழைய, "அக்கா எப்ப வந்தீங்க?" என்று கல்யாணியை கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்தாள்.

"அத்தானுக்கு முத்தம் இல்லையா?"

"என்ன கோவமா இருக்கீங்க?"

"மஞ்சுவைப் பாத்ததும் கோவம்



போயிருச்சு, கோயமுத்தூர் எப்ப வரே, அங்க வந்து படியேன். நல்ல நல்ல காலேஜ் எல்லாம் இருக்கு."

கல்யாணி "மஞ்சு நீ இங்கேயே படி" என்றாள்.

பரமேஸ்வரன், நாகரத்தினம் புறப்பட்டுச் சென்ற மறுகணம் முதலாளிக்கு மெய்ல் அனுப்பினார். தன் வேலையை ராஜினாமா செய்வதாக.

அடுத்த கணம் போன் ஒலித்தது.

"என்ன பரமேஸ்வரன், என்ன நடந்தது?"

"உங்க மாப்பிள்ளை மிஸ்டர் நாகரத்தினம் என்னை கன்னத்தில் அடிச்சுட்டார் முதலாளி"

"என்னய்யா ஆச்சு?"

"நான் எதிர்பார்த்தாப்பலயே காலைலயே கோவைலேருந்து வந்துட்டார். உங்க

மகளை வீட்டுக்கு அனுப்பிச்சுட்டு பார்க் ஷெராட்டன்ல தங்கினார். பத்தரைக்கு கார் அனுப்பச் சொன்னார்.

"இத்தனை பீடிகை வேண்டாம். விஷயத்தைச் சொல்லு"

சொன்னார். "கன்னத்தில் அடியை விட உள்ளத்தில் அடி தாங்க முடியலை. உங்க கம்பெனியில ஜூன் வந்தா இருபத்தஞ்சு வருஷம் ஆறது. இது வரைக்கும் என்னை சீன்னு கூட யாரும் பேசினதில்லை..." அழுதார்.

"பரமேஸ்வரன் எனக்காக ஒரு அஞ்சு நாள் காத்திருக்க முடியுமா உங்களால?"

"முடியாது, நான் உடனே போயாகணும்"

"சரி, பொறுப்பை சி எஃப் ஓ கிட்ட



ஒப்படைச்சுட்டுப் புறப்படும்"

"சரி."

"எனக்கு யுரோ இஷ்யு டென்ஷன் பத்தாதுன்னு நீங்க வேற. நாகரத்தினம் வீட்லதான் இருக்கானா?"

'அவரு எங்க போயிருந்தாலும் ஐ டோண்ட் கேர்"

ராகவேந்தர் வீட்டுக்கே போன் செய்தார்.

"கல்யாணி, நாகரத்தினம் புறப்பட்டுட்டாரா?"

"இல்லை, இருக்கார்."

"கூப்டு"

குரலில் இருந்த அதட்டல், கல்யாணியை பயப்படுத்தியது.

நாகரத்தினம், "என்ன மாமா?" என்று குழைந்தார்.

"ஏன்யா உனக்கு அறிவிருக்கா, அந்தாளு நான் சொன்னதைச் செய்தார், அவரைப் போய் கன்னத்தில் அறைஞ்சியே, என்னை அறையறமாதிரிதானே அர்த்தம்? பரமேஸ்வரன் ரிசைன் பண்ணிட்டார், நான் நாப்பது வருஷமா பிசினஸ் பண்ணிக்கிட்டிருக்கேன். இதுவரை வேலைக்காரன் ஒருத்தனைத் தொட்டதில்ல, எதுக்காக அவரை கன்னத்தில் அறைஞ்சே?"

"அய்யோ, அபாண்டம் மாமா. நான் அப்படி எதுவுமே செய்யலை. அந்தாளு பொய் சொல்றார் மாமா. என்னை உங்களுக்குத் தெரியாதா? நான் மத்தவங்க கிட்ட அடி வாங்குவேனே தவிர, யாரையும் அடிக்கவே மாட்டேன். அவர்தான் உங்களைப் பத்தி ஏளனமா பேசினார். தரக்குறைவா திட்டினார்"

"உங்க ரெண்டு பேர்ல யார் பொய் சொல்றீங்க தெரியலை. பரமேஸ்வரனை ஏதாவது திட்டினியா?"

"இல்லவே இல்லை. அவர்தான் என்னையும் உங்களையும் மரியாதைக் குறைவா பேசினார். அவருக்கு என்னைக் கண்டா ஆகவே ஆகாது மாமா. பலமுறை நோட் பண்ணிருக்கேன். 'இவனுக்கு எதுக்கு முதலாளி பணத்தைத் தூக்கிக் கொடுக்கறாரு. எனக்கு ஒரு இன்கிரிமெண்ட் கேட்டா மூக்கால அழுவார்னு, ஓப்பனா என் காது கேக்க பேசிக்கிட்டிருந்தாரு. நான் உள்ள நுழைஞ்சப்ப"

"சே, அந்தாளு அப்படியெல்லாம் பேசியிருக்க மாட்டான். மானஸ்தன்"

"வெளுத்ததெல்லாம் பாலுன்னு நம்பறீங்க மாமா. கவலைப்படாதீங்க மாமா, இந்த ஐயர் போனா எத்தனையோ ஐயருங்க"

ராகவேந்தர் மறுபடி பரமேஸ்வரனை போனில் கூப்பிட்டார்.

"யோவ், நீ இன்னும் போகலியே?"

"இல்ல முதலாளி. எல்லா பேப்பர்ஸையும் ஸார்ட் அவுட் பண்ணிகிட்டிருக்கேன்"

"அங்க என்ன மணி இப்ப?"

"ராத்திரி பன்னண்டு"

"ஒரு காரியம் செய்யும். பாலாவை எப்படியாவது புடிச்சு, என் நம்பர் கொடுத்து பேசச் சொல்லு. வாய்ஸ் மெயில்தான் வருது."

(தொடரும்)

உணவு! இந்த மூன்றெழுத்தில்தான் நமது மொத்த நலமுமே அடங்கியுள்ளது. ஏன்னா, சாப்பாடு, நமக்கு சக்தி தருது; ஆரோக்கியம் தருது; குஷி தருது! ஆனா நிறையப் பேருக்கு, என்ன சாப்பிடணும், எப்படிச் சாப்பிடணும்னு தெரியறதில்லே. அதனாலே உணவுடன் ஒரு விதமான எதிர்மறை உறவு ஏற்பட்டு, ஆரோக்கியம் ஃபணாலாயிடுது

பாஸிடிவ்வான உறவு ஏற்பட, என்ன செய்யணும்?

★ இயற்கையோடு இணைந்த உள்ளூர் உணவா சாப்பிடுங்க.

★ சீஸனுக்கு ஏத்ததா சாப்பிடுங்க.

★ சமைக்கும் போதும்,



தட்டு நிறைய சத்து

சாப்பிடும் போதும், ஆரோக்கியமான கலவை இருக்கட்டும். குளிர்ச்சியான பொருள் சாப்பிட்டால், சூட்டைக் கிளப்பும் பொருளும் சாப்பிடணும். கடினமான உணவுப் பொருளுடன், இலகுவானப் பொருளும் சாப்பிடணும். உப்பு, காரம் சாப்பிட்டால், கசப்பும் துவர்ப்பும் கொண்ட பொருளும் இருக்கட்டும். காய்ந்த உணவுடன் நீர்ச்சத்து கொண்டதைக் கலந்துச் சாப்பிடணும். இதைத் தான் 'ஹெல்தி பிளெண்ட்' என்பார்கள்.



★ ரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி பயன்படுத்தப்பட்ட காய்கனி, தானியங்களைத் தவிர்ப்பது நல்லது.


★ டப்பாவில் அடைக்கப்பட்ட ரெடிமேட் உணவுப் பொருள் கூடவே கூடாது.

★ சிலர், கார்ப்போஹைட்ரேட் உணவுப் பொருள்களை முழுமையாகத் தவிக்கிறார்கள். இது சரியல்ல! உடம்புக்கும் மூளைக்கும் உடனடி எனர்ஜி தருவது மாவுப் பொருள்தான். எனவே காம்ப்ளெக்ஸ் கார்ப்போஹைட்ரேட் மற்றும் தாழ்ந்த கிளைசெமிக் இன்டெக்ஸ் கொண்ட மாவுப் பொருள்களைச் சாப்பிடலாம். முழு கோதுமை, தினை, மக்காச்சோளம் ராகி, வேர்க்கடலை, கீரை, கனிகளில் இவ்வகை மாவுப் பொருள் உள்ளது.

★ உடல் வளர்ச்சிக்கு மிகவும் உதவுவது புரதச் சத்து. எனவே, மிருக புரதத்தைத் தவிர்த்து, தாவரப் புரதத்தை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். தானியங்கள், பால், தயிர், மோர், வெண்ணெய், பச்சைப் பட்டாணி, முந்திரி, பாதாம், சோயாபீன்ஸ் போன்ற உணவே சிறந்தது.

★ இஞ்சி, மிளகு, பூண்டு, வெங்காயம், சீரகம், எள்ளு, கறிவேப்பிலை, புதினா, கொத்தமல்லி, நெல்லிக்காய் போன்றவற்றை, மிக்ஸ் அண்ட் மேட்ச் துவையல் அரைத்துச் சாப்பிடலாம்.

★ தினமும் எட்டுத் தம்ளர் நீர் குடிக்க வேண்டியது அவசியம். அது பால், இளநீர், பழச்சாறு, நீர் மோர், என எந்த உருவத்திலும் கலந்து இருக்கலாம்.



★ எதையும் ரசித்து, ருசித்து, உமிழ் நீருடன் சேர்த்து மென்று விழுங்க வேண்டும்.

★ தூங்குவதற்கு மூன்று மணி நேரத்துக்கு முன்பே இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு விட வேண்டும். வயிறு முட்டச் சாப்பிடுவது தப்பு; பட்டினி கிடப்பதும் தப்பு. மிதமாகச் சாப்பிடுங்க; நேரத்துக்குச் சாப்பிடுங்க! ஆரோக்கியத்துக்கு நீங்க தான் முதலாளி!

★ ஆவியில் வேக வைத்தவற்றிலிருந்து மேக்ரோ நியூட்ரியன்ட்ஸ் எனப்படும் உயிர்ச்சத்து நிறைய கிடைக்கின்றது.

★ பச்சைக் காய்கறிகள், புதிய பழங்கள், சாப்பாட்டுத் தட்டில் அதிக மிருக்கட்டும். ஆரஞ்சு, மஞ்சள், பச்சை நிறங்கள் உங்கள் தட்டில் இருக்கிறதா என்று சோதித்துக் கொள்ளவும். நார்ச் சத்து, உடலின் வேர்ச்சத்து!


— ஆதர்ஷ்



சுமை

சுனாமி நிவாரணப் பணிகள் குறித்து வரும் செய்திகளில், தொகையைக் கோடிகளில்தான் குறிப்பிடுகிறார்கள். இம்முறை சுனாமியால் பாதிக்கப்பட்டிருப்பவை வளரும் நாடுகள். இந்தப் பொருளாதாரச் சுமையை அவற்றால் தாங்க முடியுமா? எந்த அளவுக்கு? இதனால் உலக அளவில் கூட பொருளாதார மாறுதல்கள் ஏற்படுமா?

“கரையோரப் பகுதிகளில் பல தகவல் தொழில்நுட்ப மையங்கள் இருந்தன. பல நிறுவனங்களின் முக்கியமான தகவல்கள் இங்கு சேகரிக்கப்பட்டிருந்தன. இவை அழிந்து போயிருக்குமானால், பெரும் பொருளாதார பாதிப்பு இருக்கத்தான் செய்யும். ஆனால் இது போன்ற தகவல்களை - ஒரு நகரில் சேகரிக்கப்பட்ட தகவல்களை, வேறு ஒரு பெரு நகரில் பெறுவது போல் - பேக் அப் (back up) எடுத்து வைத்திருப்பார்கள். இதனால் நல்லவேளையாக சுனாமியால் நேர்ந்திருக்கக் கூடிய மிகப் பெரிய தகவல் இழப்புகள் தடுக்கப்பட்டுள்ளன” என்ற ‘எகனாமிக் டைம்ஸ்’ இதழின் உதவி ஆசிரியர் பாலசுப்ரமணியன், மேலும் சில கருத்துகளையும் பகிர்ந்து கொண்டார்.



• பாலசுப்ரமணியன்

“பொருளாதார பாதிப்பு என்பது இலங்கைக்கு அதிகம். அங்குள்ள கடல் ஓரங்களில் உள்ள விலையுயர்ந்த மீன்கள் அழிந்திருக்க வாய்ப்புண்டு. ஏற்கெனவே மீன்களின் விலை அடிமட்டத்துக்கு இறங்கிவிட்டது. தவிர, மீன் ஓர் அழுகும் பொருள் வேறு.

துறைமுகத்தில் இறக்கப்பட்டிருந்த, ஏற்றுமதிக்கான ஹுண்டாய் கார்கள் பாதிக்கப்பட்டன. இதேபோல் ஏற்றுமதிக்காக வைக்கப்பட்டிருந்த சர்க்கரையும் பெருமளவில் சேதமடைந்தது. என்றாலும், இவை எல்லாம் இன்ஷ்யூர் செய்யப்பட்டிருக்கும் என்பதால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குக் கவலையில்லை. ஈடு செய்ய வேண்டிய காப்பீட்டுத் தொகையின் அளவு பன்னிரண்டு கோடி ரூபாய் என்கிறார்கள்.

பல உலக அமைப்புகளிலிருந்து நிறைய நிதியுதவி வருவதால், அரசின் பொருளாதார பாதிப்பை சரிக்கட்டிவிட முடியும். நில நடுக்கம் அளவுக்கு சுனாமி பாதிப்பு இல்லை. குஜராத் பூகம்பத்தோடு ஒப்பிட்டால், சுனாமியின் பாதிப்பு குறைவுதான் (மனித உயிர் விலைமதிப்பில்லாதது. நாம் இங்கு குறிப்பிடுவது பொருளாதார நஷ்டத்தை.)

ஆனால் ரியல் எஸ்டேட்காரர்களுக்கு நிச்சயம் இது சோதனைக் காலம்தான். அதுவும் திருவான்மியூர், பெருங்குடி, பெசன்ட்நகர் போன்ற பகுதிகளில் வீடுகள் மற்றும் ஃப்ளாட்களை வாங்குவதில் மக்களுக்குத் தயக்கம் ஏற்பட்டிருக்கிறது.

பொருளாதாரம் ஆட்டம் கண்டு நிலைபெற்றுவிடும். இரட்டை வணிக கோபுரத்தாக்குதலுடனோ, ஈராக் போருடனோ இந்த சுனாமியின் பாதிப்பை ஒப்பிட்டுவிட முடியாது” என்றார் பாலசுப்ரமணியன்.

‘சென்னை ஆன்லைன்’ செய்திப் பிரிவுத் தலைவர் ஆர்.ரங்கராஜ் பாதிப்புகளை பட்டியலிட்டார். “தமிழ் நாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பதின்மூன்று மாவட்டங்களை எடுத்துக் கொண்டால், 7,300 ஹெக்டேர் விளை நிலங்களில் உள்ள பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. எண்ணற்ற கால்நடைகள் இறந்துவிட்டன.

பாதிக்கப்பட்டுள்ள மீனவ சமுதாயத்

துக்கு, படகுகள், வலைகள் ஆகியவை உட்பட, புனர் நிர்மாணத்திற்கே 1,054 கோடி ரூபாய் தேவைப்படும். மீனவ சமுதாயம் முன்போல் அதே நிலையில் இருக்க வேண்டும் என்றால் (சாலைகள், சமுதாய மையங்கள் உட்பட) மேலும் 709 கோடி ரூபாய் ஆகும் என்கிறார்கள்.



கூட்டுது சுனாமி!

தமிழ்நாடு கடற்கரைப் பகுதியில் சுமார் 1,000 கிலோ மீட்டர் நீளத்துக்கு மீன் பிடித்தல் பாதிக்கப்பட்டுள்ளது. இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக மீண்டும் மீன் பிடிக்கச் செல்கிறார்கள். ஆனால் பிடித்த மீன்களை, சுமாரான விலைக்குக் கூட விற்க முடியாத அவலம். காரணம், சுனாமியால் மீன்களின் உடலில் நச்சுப் பொருள்கள் கலந்திருக்குமோ என்கிற பயத்தில், மீன்களை வாங்குபவர்கள் வெகுவாகக் குறைந்து விட்டார்கள்.

வீழ்ந்த குடிசைகள், வீடுகள் ஆகியவற்றின் எண்ணிக்கை ஒன்றரை லட்சம். எழுபத்தியாறு கிராமங்களில் மிகப் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். முகாமில் மட்டும் ஒன்றரை லட்சம் பேர் தங்கியிருக்கிறார்கள். இவர்கள் வேலைக்குச் சென்று சம்பாதிக்க முடியவில்லை என்பதே பொருளாதார பாதிப்புதான்.

சுனாமியின் எதிரொலியாக அந்தமான் நிக்கோபார், கன்னியாகுமரி, சென்னை, கோவா ஆகிய பகுதிகளுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்திருக்கிறது. முக்கியமாக பாண்டிச்சேரியில் உள்ள பிரபல ஹோட்டல்களுக்குள் சுனாமி அலை நுழைந்து விட்டது. இதையெல்லாம் சரி செய்ய இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் தேவைப்படும். எனினும் ஒட்டுமொத்தமாக இந்தியாவில் சுற்றுலாத்துறை பெரிய அளவில் பாதிக்கப்படவில்லை. காரணம், பெரும்பாலான பயணிகள் வட இந்தியாவுக்குத்தான் விஜயம் செய்கிறார்கள். மும்பை, டெல்லி போன்ற பல வட இந்தியப் பெருநகரங்கள் சுனாமியால் பாதிக்கப்படவில்லையே.

ஆனால் இலங்கை, இந்தோனேஷியா ஆகிய நாடுகளின் சுற்றுலாத்துறை பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

அதுவும் இலங்கையின் நிலை மிகவும் பரிதாபம்!"

- ஜி.எஸ்.எஸ்



இடைவேளை மணி அடித்தது. எஸ்.ஆர்.என். கணித வகுப்பை முடித்துக் கொண்டு, ஸ்டாஃப் ரூமுக்கு வந்தார். ஆர்.கே. சிகையலங்காரத்தில் ஈடுபட்டிருந்தார். அது ஓர் அரசினர் உயர் நிலைப் பள்ளி.

"ஆமா! பொண்ணுக்குக் கல்யாணம் முடிக்கப் போற, இன்னும் என்ன ஷோக்கு வேண்டிக்கிடக்கு!" என்றார் எஸ்.ஆர்.என். சமவயது ஆகையால் ஒருமையில் அழைத்துப் பேசுவார் எஸ்.ஆர்.என். ஆனால், ஆர்.கே.மரியாதையுடன்தான் 'ங்க' போட்டு விளிப்பார்.

"இருந்தாலும்... டீச்சர்ங்ற 'கெட்டப்' மெயின்டெயின் பண்ணணும் இல்லையா? இல்லாட்டி பசங்க மதிக்க மாட்டாங்களாக்கும்!"

"ஆமா! மதிப்பு... மண்ணாங்கட்டி இவனுகளுக்கு நாம கத்தறது வேஸ்ட்!" - பேச்சுக்கு ஒரு ஆமா போட்டு பழக்கம் எஸ்.ஆர்.என்னுக்கு.

"என்ன திடீர் சலிப்பு...?" சிரித்துக் கொண்டே கேட்டார் ஆர்.கே.

"செந்தாமரைக் கண்ணன் ஞாபகம் இருக்கா?"

"ம்! நல்லா ஞாபகம் இருக்கே! நம்ம ஆசிரிய சமூகத்துக்கு, ஒண்ணு நல்லா படிக்கிற பசங்க ஞாபகம் இருக்கும் இல்லாட்டி இந்த அடங்காத பசங்க ஞாபகம் இருக்கும். செந்தாமரைக் கண்ணன் ரேங்க் வாங்கினவனாச்சே மறக்க முடியுமா?"

"ம்! அவனைத்தான் பஸ்ல பார்த்தேன். கண்டுக்காத மாதிரி போயிட்டான்பா!" - எஸ்.ஆர்.என்னுக்கு தொண்டையை அடைத்தது. அவர் அறிவுபூர்வமான கணிதம் நடத்தினாலும், எதையும் உணர்வுப் பூர்வமாகவே அணுகுபவர். ஆர்.கே. நேர் எதிர். உணர்வு பூர்வமாக தமிழால் வகுப்பை மயங்க வைப்பார் - எதையும் அறிவு பூர்வமாக அணுகுவார்.

"உங்களை கவனிச்சிருக்க மாட்டான் ஸார்."

"இல்லைப்பா! கவனிக்காம இருக்கிறதுக்கு சான்ஸே இல்லை. நானும் நெறயப் பசங்கள பார்த்துட்டேன். இந்த நல்லா படிக்கிற பசங்க, படிப்பு முடிஞ்சதும் நம்மையெல்லாம் கண்டுக்கிறதேயில்லை. யார் படிக்கிறப்ப நம்மகிட்ட நல்லா பேசறாங்களோ, அவங்க வெளியில போனா அவ்வளவா 'டச்' வெச்சுக்க மாட்டேங்கிறாங்கப்பா. 'இவன் வெளியில போனா, நம்ம மேல கல்லெடுத்து அடிப்பான்'னு நெனச்சவனெல்லாம் நல்லாப் பேசுறான் பாத்துக்க!"

எஸ்.ஆர்.என். புலம்பலைத் தொடர்ந்தார்.

"இந்த டெஸிமல்ஸ்ல எவ்வளவு மிஸ்டேக் பண்ணுவான் தெரியுமா அந்தப் பய...!" - எஸ்.ஆர்.என். ஆர்.கே.க்கு சிரிப்பு வந்தது. "நான்தான் அதைத் திருத்தினேன்."

"சரி சார், உங்களுக்கு சேகரை ஞாபகம் இருக்கா...?"

"சும்மா விட்டாதீங்க!"

சிவ.இளங்கோவன்



''ம் இருக்கே, பி.எஸ்.ஸி. அக்ரியில கோல்ட் மெடல் வாங்கினவன் தானே? 'ஐ.ஏ.எஸ்'ல செலக்ட் ஆகி டெல்லியில இருக்கிறதா தெரியும்.''

''ஓ.கே. பாரி வள்ளல் ஞாபகம் இருக்கா?''


''நீ என்ன, நான் ஒண்ணு சொல்றேன் நீ வேற ஏதோ கேட்கிற?'' கடிந்து கொண்டார் எஸ்.ஆர்.என்.

''உங்களுக்கு ஞாபகம் இருக்கா இல்லையா..?'' - ஆர்.கே.

''கள்ளச் சாராய பார்ட்டி! அதுக்கென்ன இப்போ.''

''சேகரும் நம்மகிட்டதான் படிச்சான். பாரி வள்ளலும் நம்மகிட்டதான் படிச்சான். பாரிவள்ளல் கள்ளச்சாராயம் காய்ச்சுறத்துக்கு எப்படி நம்ம காரணம் இல்லையோ, அதே மாதிரி சேகர் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆனதுக்கும் நாம காரணம் இல்லை. எல்லோருக்கும் ஒரே மாதிரிதான் பாடம் நடத்துறோம். ஒருத்தன் நல்லாப் படிக்கிறான். இன்னொருத்தன் சுமாரா படிக்கிறான். இதுக்குப் போயி அலட்டிக்கலாமா?''

எஸ்.ஆர்.என். எதுவும் பேசாமல், தேர்வுப் பேப்பர் கட்டைத் திருத்த ஆரம்பித்தார்.



ரிங் மாஸ்டர்!

மத்திய அரசின் நிதித்துறை ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதத்தில், அதற்கு அடுத்த ஆண்டுக்கான (ஏப்ரல் - மார்ச்) வரவு - செலவு கணக்குகளைத் தயாரிக்கும் பணிகளில் ஈடுபடத் தொடங்கிவிடும். அப்போது ஒவ்வொரு துறையைச் சேர்ந்தவர்களும் அவர்களது விருப்பங்களையும், எதிர்பார்ப்புகளையும் தெரிவிப்பார்கள்.

சர்க்கஸில் ரிங் மாஸ்டர் என்று ஒருவர் வருவார். நான்கு சிங்கங்கள், நான்கு புலிகளை வைத்துக் கொண்டு, கையில் ஒரு சாட்டையை மாத்திரம் சுழற்றி எல்லா மிருகங்களையும் அடக்கு வார். சிங்கங்களும் புலிகளும் உறுமும் போது பார்ப்பவர்களுக்கு திகிலாக இருக்கும். ஆனால் ரிங் மாஸ்டர் தமது அனுபவத்தினால் சிங்கங்களையும் புலிகளையும் அடக்கி விட்டு வெற்றிகரமாக வெளியே வருவார். நமது நிதி மந்திரியின் நிலையும் ஓரளவுக்கு இந்த ரிங் மாஸ்டரின் நிலைதான்!

பிப்ரவரி 28ம் தேதி நிதி மந்திரி பட்ஜெட் சமர்ப்பிக்கும்போது, அவர் ரிங் மாஸ்டர் மாதிரி எல்லோருடைய எதிர்பார்ப்புகளையும் ஓரளவுக்குப் பூர்த்தி செய்து நாட்டின் மொத்த பொருளாதார வளர்ச்சிக்கும் வழி கோலுவார் என்று எதிர்பார்ப்போம். பிப்ரவரி 28வரை காத்திருப்போம்.

ஒவ்வொரு வருஷமும் பட்ஜெட் சமர்ப்பித்தவுடன் எல்லோரும் நோக்கு வது பங்கு மார்க்கெட்டின் செயல்பாடுகள் பற்றி. (Reaction of Share Market) பங்குகளின் விலை ஏறக்கூடும், அல்லது இறங்கலாம். அதைப் பார்த்து விட்டு, பலர் பட்ஜெட்டைப் பற்றி அபிப்ராயம் தெரிவிப்பார்கள். மற்ற நாடுகளில் பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும்போது பங்கு மார்க்கெட் அதிகமாக பாதிக்கப்படு வதில்லை என்று தெரிகிறது.

இந்தியாவில் மட்டும், பட்ஜெட்டைத் தொடர்ந்து இந்த மாதிரி பங்கு மார்க்கெட் நடவடிக்கைகள் பாதிக்கப்படு வது, தொலைநோக்கில் பார்க்கும்போது விரும்பத்தக்கதல்ல. இது நம் நாடு பொருளாதாரத் துறையில் முன்னேற முன்னேற, குறையும் என்று நம்பலாம்.

2005ம் ஆண்டில் பல கம்பெனிகள் பங்கு மார்க்கெட்டுக்கு வரவிருப்பதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. சுமார் ரூபாய் 63000 கோடிக்கான பங்குகள் வெளியிடத் திட்டமிடப்பட்டு வருகிறது. அநேகமாக 40,000 கோடி ரூபாய்க்கான பங்குகள் விற்பனைக்கும் வரலாம் என்று தெரிகிறது.

முக்கியமானவை டாடா சன்ஸ், ஜெட் ஏர்வேஸ், ரிலையன்ஸ் இன்ஃபோ.காம், பவர் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன், ஓ.என்.ஜி.சி, நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் மற்றும் பல பொதுத் துறை வங்கிகள். இதைப் பற்றி அறிவிப்பு வந்தவுடன் பார்ப்போம்.

(அடுத்த வாரம் பார்ப்போம்)


- வி. கோபாலன்





உங்கள் நகம் முதல் முகம் வரை, முடி முதல் அடி வரை, இதழ் முதல் இதயம் வரை (ஓ.கே. போதும் நிறுத்து) சூப்பரா பாதுகாக்க டிப்ஸ்களை டின் டின்னா அள்ளி விடும் தளம் free-beauty-tips.com. அங்கத்தை அங்கங்கு எப்படி மஸாஜ் செய்வதென மெஸேஜ் கிடைக்கிறது. உதட்டுல லிப்ஸ்டிக் எப்படிப் போடணும், என்ன கலர் உங்களுக்கு ஒத்து வரும், உதட்டை அழகா பாதுகாப்பது எப்படின்னு தனி 'லிப்பாலஜி'யே நடத்துறாங்க!

(இது போக ஹேராலஜி, நோஸாலஜி, ஐயாலஜி-ன்னு நிறைய ஜி இங்கே சிக்குது!)



லிப்ஸ் டிப்ஸ்!

டீன்-ஏஜ் பிரச்னைகள், ஹெல்த்-டிப்ஸ், மென்டல்-டிப்ஸ், கேள்வி பதில் என பருவ வயதினர்களுக்காகவே வரிந்து கட்டிக் கொண்டு இயங்கும் அருமையான தளம் teenhealthfx.com. முக்கியமாக மன அழுத்தம், தற்கொலை, அந்தரங்கப் பிரச்னைகள் என, எல்லாவற்றுக்கும் ரொம்ப அக்கறை எடுத்து ஆலோசனை வழங்குகிறார்கள். ஸ்போர்ட்ஸ் & நியூட்டிரிஷியன் பகுதி பக்காவாக உள்ளது.

(இந்தத் தளத்தை டீன்-ஏஜ் பசங்க மட்டும்தான் பார்க்கணும்னு சொன்னா, கேட்கவா போறீங்க!)



ஆயுர்வேத சிகிச்சை முறைகள், மூலிகைப் பலன்கள், கன்சல்டேஷன் என ஆயுர்வேதத்திற்காக தன்னை அர்ப்பணித்துள்ள தளம் ayurveda-foryou.com. 'ஆயுர்வேதா டூல் பார்' என்று ஒன்று உள்ளது. அதை டௌன்லோடு செய்து கொண்டால், டெய்லி டிப்ஸ் கொட்டுகிறது.

(வயித்தெரிச்சலுக்கு ஏதும் மூலிகை இருக்கா!)

ரொம்ப ஹெல்த்தியான உணவு வகையைப் பற்றி கொத்துக் கொத்தா தெரிஞ்சிக்கணுமா? பீன்ஸ் பொரியல் முதல் பிரியாணி வரை, சூப் வகைகள் முதல் ஹாட் சிப்ஸ் வரை, சுடச்சுட பரிமாறும் தளம் Allrecipes.com. A-Z எளிமையாக கீ-வேர்டுகளை வைத்துத் தேடும் வசதியும் உள்ளது. ஒரு பதார்த்தத்தைத் தயாரிக்க எவ்வளவு நேரம் ஆகும், கொழுப்பு புரோட்டீன் எல்லாம் எவ்வளவு இருக்கிறது என எல்லாம் தந்துவிடுகிறார்கள். 3 பேருக்கு சமைக்க, 6 பேருக்கு சமைக்க, பொருள்கள் எவ்வளவு தேவை என, நாமே எண்களைத் தட்டி, விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். செம டேஸ்ட்டான தளம்! (மைக்ரோவேவ் மாமி கவனிக்கவும்).

- ப்ரௌஸர்



தென்கச்சி சுவாமிநாதன்

தெம்புக்குப் படிங்க - 14

அனுபவம் பேசுகிறது!

வகுப்பு ஆசிரியருக்கும் அனுபவ ஆசிரியருக்கும் ஒரு வேறுபாடு உண்டு.

வகுப்பு ஆசிரியர் முதலில் பாடம் நடத்துவார்.

அதன்பிறகு பரீட்சை வைப்பார்.

அனுபவ ஆசிரியர் முதலில் பரீட்சை வைப்பார்.

அதன் மூலமாக பாடத்தைக் கற்றுக் கொடுப்பார்.

ஒரு பெரிய தொழிலதிபர்.

ஒரு நாள் ஒரு பத்திரிகை நிருபர் அவரைத் தேடி வந்தார்.

"உங்களுடைய வெற்றியின் இரகசியம் என்ன?"

"இரண்டே வார்த்தைகள்!"

"அவை என்ன?"

"நல்ல முடிவுகள்!"

"அந்த நல்ல முடிவுகளை எப்படி எடுக்க முடிந்தது?"

"அனுபவம்"

"அந்த அனுபவத்தை எப்படிப் பெற்றீர்கள்?"

"இரண்டே வார்த்தைகள்.'

"அவை என்ன?"

"கெட்ட முடிவுகள்!"

ஆக... அனுபவம்தான் வெற்றியின் இரகசியம். "அனுபவம் என்பது ஒரு மனிதனுக்கு என்ன நேரிடுகிறது என்பது அல்ல... அதைக் கொண்டு அவன் என்ன செய்கிறான் என்பதுதான்" இது சான்றோர் சிந்தனை.

'அனுபவம்' என்பதும் ஓர் ஆசிரியர்தான்.

அமெரிக்காவில் 'போர்ப்ஸ்' என்று ஒரு பத்திரிகை. அதில் ஒரு முறை அங்குள்ள பணக்காரர்களின் பட்டியலை வெளியிட்டிருந்தார்கள்.

அதில் மொத்தம் இடம் பெற்றிருந்தவர்கள் 400 பேர்.

பல கோடி செல்வம் பெற்றிருந்தவர்கள்.

அதில் 33 பேர்கள்தாம் பட்டதாரிகள்.

அதில் 10 பேர் ஆரம்பப் பள்ளியையே தாண்டாதவர்கள்.

அனுபவம் பெரியது தான்.

அதற்காக பள்ளிக்கூடமே வேண்டாம் என்று யாரும் முடிவு செய்துவிடாதீர்கள்.

படிப்பறிவும் அனுபவ அறிவும் சேருகிறபோது, பாதையில் வெளிச்சம் அதிகமாகும். பயணம் சுலபமாகும்.

அனுபவத்தின் விளைவு சில சமயம் இப்படிக் கூட ஆகி விடும்!

"அப்பா! நீ ஏன் அம்மாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டே...?"

"அதே கேள்வியைத் தாண்டா இப்ப நானே என்னைப் பார்த்துக் கேட்டுக்கிட்டிருக்கேன்...!"



இறைச்சி அபாயம்!

டாக்டர் வி.குருமூர்த்தி

ஜப்பானில் மினா மாட்டா வளைகுடாவில் அதே பெயரில் இருக்கிறது அந்த நகரம். சுமார் 50,000 பேர் வசிக்கும் அந்தத் தீவின் பெரும்பாலான மக்களின் முக்கியத் தொழில், உணவு, இரண்டுமே மீன்தான். 1955-ல் அந்த மக்களைத் தாக்கியது ஒரு விசித்திர நோய். நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு கை கால்கள், செயலிழந்தன. கருவிலிருக்கும் குழந்தைகளும், பாலருந்தும் கைக் குழந்தைகளும் கூட பாதிக்கப்பட்டன. இறப்பு எண்ணிக்கை மளமளவென்று உயர்ந்தது. டாக்டர்களும், விஞ்ஞானிகளும், ஆராய்ச்சியாளர்களும் என்ன முயன்றும் காரணத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கடைசியாக மக்களின் முக்கிய உணவான மீனின் உடலில் ஆர்கானிக் மெர்க்குரி விஷமிருப்பது தெரிய வந்தது.



தண்ணீரில் உள்ள கழிவுப் பொருள்களையும் நச்சுப் பொருள்களையும் தின்று சுத்தம் செய்யவே படைக்கப்பட்ட உயிரினம் மீன். புழு பூச்சிகள், பாக்டீரியா, சிறு உயிரினங்கள், என்று விழுங்கி உயிர் வாழும் மீன்கள் (Tuna and Sword Fish) கடலில் ஆர்கானிக்





பெரிசுகள் மூவர் தங்களுடைய ஞாபக சக்தியைப் பரிசோதிப்பதற்காக டாக்டரிடம் வந்தனர். டாக்டர் முதல் நபரிடம் "மும்மூன்று (3 x 3) எவ்வளவு?" என்றார்.

"274" என்று பதில் வந்தது.

டாக்டருக்குக் குழப்பம் வர, இரண்டாவது ஆளிடம் அதே கேள்வியைக் கேட்டார். "செவ்வாய்க் கிழமை" என்று அதிரடியாக பதில் வரவும் டாக்டர் நொந்தே விட்டார்.

டாக்டர் ஈனஸ்வரத்தில் மூன்றாவது பெரிசிடம் அதே கேள்வியைக் கேட்க, "ஒன்பது" என்று சரியான பதில் வந்தது.

''க்ரேட்... எப்படி கரெக்டா சொல்லிட்டீங்க?'' என்றார் டாக்டர் அகமகிழ்ந்து போய்.

''அது ரொம்ப ஈஸி டாக்டர்... 274லிலிருந்து செவ்வாய்க்கிழமையை மைனஸ் பண்ணிட்டேன்" என்றார் கூலாக! டாக்டர் 'சொய்ங்' என்று தலை சுற்றி விழுந்தார்.



மெர்க்குரி விஷக் கழிவையும் விழுங்கியிருக்கின்றன. அந்தத் தீவில் சிஸ்ஸோ என்றொரு பிவிசி பைப் செய்யும் மூலப் பொருள் தயாரிக்கும் கம்பெனி, தன் மெர்க்குரி இன் - ஆர்கானிக் கழிவுகளைக் கடலில் கலக்க விட்டுக் கொண்டிருந்தது. அந்த இன் - ஆர்கானிக் மெர்க்குரிக் கழிவு கடலின் நுண்ணுயிர்களுடன் நடத்திய ரசாயன மாற்றத்தில் கொடிய ஆர்கானிக் விஷமாக மாறி இருக்கிறது. 'மினா மாட்டா பே - எபிடெமிக்' என்று பெயர் சூட்டப்பட்ட அந்த நோய், பிறகு கட்டுப்படுத்தப்பட்டாலும், ஈராக்கிலும் ஒரு முறை தாக்கியது.

உண்ணும் உணவு, உடல் வாகை மட்டுமல்ல, குணத்தையும் உருவாக்குகிறது. மாமிசம், எலும்பு, மீன் என்று கடித்துச் சுவைப்பவர்களுக்கு இயற்கையாகவே அன்பு, கருணை, இரக்கம் எல்லாம் குறைந்து போகிறது. இப்போது ஆடு, மாடு, கோழி என்று அனைத்தும், எடை கூடுவதற்காக ஹார்மோன் வகை மருந்துகள் கொடுத்து வளர்க்கப்படுகின்றன. அந்த இறைச்சி நம் உடலில் கலந்தால் வேண்டாத கொலஸ்ட்ரால் சேர்வது மட்டுமின்றி, பல பக்க விளைவுகளும் நிகழ்கின்றன. உடலுக்குத் தேவையான சோடியம்-பொட்டாசியம் விகிதம் குறைகிறது. நார்ச்சத்து குறைகிறது. இதனால் மலச்சிக்கல் ஏற்படுகிறது. பித்தநீர் உப்புகளுடன் பாக்டீரியாக்கள் கலந்து கோலன் கான்ஸர் என்னும் குடல் புற்று நோய் ஏற்படுகிறது. சைவ உணவுப் பழக்கத்தில் இந்த கேன்சர் மிகக் குறைவு. 'mad cow' 'Bird Flu' என்ற நோய்களால் பாதிக்கப்படும் மாடுகளும் பறவைகளும் லட்சக் கணக்கில் கொல்லப்பட்டு இறைச்சிக்காக வருகின்றன. இந்த இறைச்சியால் கோலன் கான்ஸர் தவிர இன்னும் பல நோய்களும் ஏற்படுகின்றன.

'நீண்ட நாள் வாழ்வதைவிட, வாழும் வரை ஆரோக்கியமாக வாழ்வதே மேல்' என்று நினைப்பவர்கள், இறைச்சியை விட்டொழிக்க வேண்டும்.

மாம் ஃப்ரம் இண்டியா

MOM FROM INDIA

அனுராதா ரமணன்

உள்ளங்கையில் புகையிலையைக் குவித்து வைத்து, கட்டை விரலால் அழுந்தத் தேய்த்து, அப்படியே மூன்று விரலால் மஞ்சள் பிள்ளையார் பிடிப்பது போலப் பிடித்து, வாயில் அடக்கிக் கொண்டார் பரமேஸ்வரன்.

ஓரக் கண்ணால், சுகந்தா இருக்கும் சமையலறையையும் பார்த்துப் பெருமூச்செறிந்தார்.

'இதோ, அதோ' என்று சுகந்தா புறப்படுகிற நாளும் வந்தே விட்டது...

நாளை இரவு ஒன்றரை மணிக்கு 'விஷ்' என்று வானில் பறக்கப் போகிற பிரக்ஞையே இல்லாமல், சமையலறை மேடையைக் கழுவி, கோலம் போட்டுக் கொண்டிருந்தாள் அவள்.

புடைவைக் கட்டு ஒன்றுதான் அவளை சற்று பழங்காலமாகக் காட்டுமே தவிர, மற்றபடி வயதே தெரியாத வாளிப்பு. அதிலும் முகத்தைப் பார்க்க வேண்டும். 'துறுதுறு'வெனச் சின்னப் பெண் போன்ற இளமை.

ஆங்கிலத்தில் மட்டும் சரளமாகப் பேசத் தெரிந்திருந்தால், ஊரையே விற்று, வெல்லம் வாங்கிச் சாப்பிடக் கூடிய சாமர்த்தியம் தன் மனைவிக்கு உண்டு என்பது பரமேஸ்வரனுக்குத் தெரியும்.

'அசடு, அசடு' என்கிறாரே தவிர, சில விஷயங்களில் அவள் அப்படியொரு அப்பாவியாக இருப்பதே அழகாக இருப்பது போலத் தோன்றும் அவருக்கு...

அன்றைக்கு மிரண்டு போனவளாய் விசாவுக்காகப் போனவள், எப்படியோ சமாளித்துக் கொண்டு வந்து விட்டாளே...

"என்ன கேட்டா?"

"என்ன... கொண்டு போன பேப்பர் எல்லாத்தையும் காட்டினேன். 'பொண்ணு, பையன் ரெண்டு பேருமே வெளிநாட்டுல இருக்காங்களே... அப்படியே தங்கிட மாட்டேங்கறதுக்கு என்ன உத்தரவாதம்'னு கேட்டா..."

"பேஷ், பேஷ்... அதுக்கு நீ என்ன சொன்னே?"

"என் கழுத்துல கிடந்த திருமாங்கல்யத்தை எடுத்துக் காட்டினேன். அங்கே அமெரிக்கா சொர்க்க லோகமாகவே இருக்கலாம்டியம்மா. ஆனா, இந்தக் கயிற்றைக் கட்டின மகானுபாவன் இங்கேயின்னா இருக்கார். அவரை விட்டு ஆறு மணி நேரம் கூடப் பிரிஞ்சதில்லே. என்னமோ, பொண்ணு கூப்பிடறாளேன்னு போறேன்னு சொன்னேன்..."

"......"

"என்ன பேசாம இருக்காப்பல...?"

"ஒண்ணுமில்லே. உன்னை 'விசா'வுக்காக அனுப்பி வைக்கற வரைக்கும், என்னமோ, அதெல்லாம் என்னை விட்டு, நீ போக மாட்டேன்னுதான் நினைச்சிண்டிருந்தேன் சுகி... இப்ப நிச்சயமாயிடுத்து..."

'விசா' வந்த பிறகு, பரமேஸ்வனுக்கு, காலண்டரில் தேதி கிழிப்பது கூட பிராணாவஸ்தையாகிவிட்டது.

சாதாரணமாய் சாயந்திர வேளையில், காய்கறி வாங்க, காபிப்பொடி வாங்க, பிரவுஸிங் சென்ட்டருக்குப் போக என்று கிளம்புகிறவர், இப்போதெல்லாம் மனைவியைச் சுற்றிச் சுற்றியே வருகிறார்.



"இன்னும் என்ன பண்ணுறே சமையற்கட்டுல... சட்டு புட்டுனு முடிச்சிட்டு வாயேன்..."

கூடத்திலிருந்தே குரல் கொடுத்தார்.

"பாலைக் காய்ச்சிக் கொண்டு வந்தேன். அதுக்குள்ள வெத்தலைப் பெட்டியத் திறந்தாச்சு..."

தம்ளரை அருகிலிருந்த டீபாயின் மீது வைத்து விட்டு, அவர் பக்கத்தில் அமர்ந்த சுகந்தா, வைர பேஸரி மின்னும் அழகான சிமிழ் மூக்கைச் சுளித்தாள்.

"என்னது... டுபாக்கூர் ஸ்மெல் வர்றது?"

"டுபாக்கூர் இல்லேடி... இங்கிலீஷ்ல பேசாதேயின்னா விடவும் மாட்டேங்கறே... இது டுபாக்கோ, புகையிலை. பன்னீர் புகையிலை. இதோ பார்... இத்துனூண்டு போட்டேன்... அவ்வளவு தான். கோவிச்சுக்காதே..."

சுகந்தாவின் முகத்தில் கருமேகமாய் கவலைகள்.

"இதோ பாருங்கோ... வெத்தலை பாக்கே அநாவசியம். மூணு மாசத்துக்கு ஒரு தடவை பல் டாக்டர்கிட்டப் போய், சர்க்கஸ் சிங்கம் மாதிரி வாயைப் பொளந்து காட்ட வேண்டியிருக்கு. இன்னும் நான் ஊருக்குப் போயிட்டு திரும்பறதுக்குள்ளே, என்னென்ன பழக்கமெல்லாம் வரப் போறதோ.. அந்தக் கடவுளுக்குத் தான் வெளிச்சம்..."

சுகந்தாவின் கண்கள் மெலிதாகக் கலங்க பதறியடித்து, அவளது இரு கால்களையும் தூக்கி, தன் மடி மீது வைத்துக் கொண்டு, பாதங்களை இதமாக அழுத்தினார் பரமேஸ்வரன்.

மனைவியைக் குளிர்விக்க, அவர்

கையாளும் முயற்சிகளில் இதுவும் ஒன்று... சமயத்தில் வெண்டைப் பிஞ்சு போன்ற அவளது பாத விரல்களில் சொடுக்கு எடுப்பதும் உண்டு...

"வசதியா உட்காரேன்..."

"முதுகுக்கு வேணுமானா இந்தத் தலை காணிய வச்சுக்கோ..."

"நித்தியமல்லியா வச்சிருக்கே... அதான் வாசனை ஆளைத் தூக்கறது..."

"சுகி...சுகி... புகையிலை எல்லாம் எப்பவும் போட மாட்டேன் டீ... உனக்குப் பிடிக்காதுங்கறது எனக்குத் தெரியாதா... மோர் சாதத்துக்கும் வத்தல் குழம்புக்கும் ஏர்வையா இருந்துதா... ஒரு கவளம் அதிகமாச் சாப்பிட்டுட்டேன். படுத்தாத் தூங்கிடுவேன். தூங்கிட்டா, இன்னிப் பொழுது போயிடும்... உன்னோட இருக்கற நேரம் குறைஞ்சிட்டே வர்றதே... அந்தத் தாபத்துலதான். கோவிச்சுக்கக் கூடாது... என்ன..."

"இதப்பாரு. இத்தனை வருஷத்துல இந்தப் புகையிலையைத் தவிர வேற ஒரு பழக்கமுண்டா எனக்கு? இதுவும் எப்பவாவதுதான். ஒரு சினிமாவுக்குப் போயிருக்கேனா... சின்ன வயசுல 'சக்ரவர்த்தி திருமகள்'னு ஒரு படம் வந்தது. நான், ராஜாஜி எழுதிய 'சக்ரவர்த்தி திருமக'னாக்கும்னு போயிட்டேன். போனதுக்கு அப்புறமாத்தான் தெரிஞ்சது. அது 'திருமகன்' இல்லே... வேற ஏதோ 'திருமகள்'னு. நான் உடனே எழுந்து வந்துட்டேன் தெரியுமா...?"

"நம்ம தலைவர் படா கில்லாடிபா!"

"எப்படி?"

"இத்தனை நாள் பினாமி பேர்ல சுருட்டிக்கினு இருந்தார், இப்போ சுனாமி பேர்ல சுருட்ட ஆரம்பிச்சுட்டாரே!"

- எஸ்.வி. சுந்தரம்



"நம்ம கோடிக்கரை சம்பத்து இருக்கானே... பெண்டாட்டி ஊருக்குப் போயிட்டா, வீட்டுல தீர்த்தவாரி நடத்தறான். என்னைக் கூட ஒரு தடவை கூப்பிட்டான். 'நாயே, என்னை யாருன்னு நினைச்சே... நான் பரமேஸ்வரன், ஹஸ்பெண்ட் ஆஃப் சுகந்தா'ன்னு சொல்லிட்டு வந்துட்டேன். எங்கே... சிரியேன்..."

"பாரு... இவ்வளவு கெஞ்சறேன். உதட்டைக் கடிச்சு, சிரிப்பைப் பொத்திக்கறே... அமெரிக்காவுக்குப் போனதுக்கு அப்புறம் இந்த அசமுடையானை நினைச்சு நினைச்சு அழப் போ..."

சுகந்தா, சட்டென அவரது வாயைப் பொத்தினாள்.

"என்ன பேச்சு இது... அசடு மாதிரி..."

"நான் அசடா..."

"அய்யோ... இல்லே. சமர்த்துக் குடம் தான். போங்கோ..."

சுகந்தாவின் இதழ்களில் எட்டிப் பார்த்த இளமுறுவலைக் கண்டதும்தான் பரமேஸ்வரன் இயல்புக்கு வந்தார்.

"இதப் பாரு.. இங்கேயிருந்து 'ஃபிராங்க்ஃபர்ட்' போற வரைக்கும் உனக்குன்னு ஒரு துணையப் பிடிச்சு வச்சிருக்கேன்..."

"யாரு..."

"என்னோட வேலை பார்த்தவன்... ராஜகோபாலன்னு ஒருத்தன்... ஆபீசுக்கு ஒரு நாள் கூட இஸ்திரி பண்ணின சட்டையப் போட்டுட்டு வர மாட்டான். எப்பவும் டிபன் டப்பாவுல 'மோர்க்களி' தான் கொண்டு வருவான் அவனுக்கு அடிச்ச யோகம், அவனோடப்பையன் ஜெர்மனியில இருக்கானாம். கூப்பிட்டிருக்கான். பெண்டாட்டியோட போறான்."

சுகந்தா முகமலர்ந்தாள்.

"நல்லதாச்சு. பேச்சுத் துணைக்கு..."

"அதைத்தான் சொல்ல வந்தேன். அவன், எனக்குக் கீழே வேலை பார்த்தவன். என் கிட்ட எல்லாம் நின்னு பேசவே பயப்படுவான். இப்பவும் கூட என்னைக் கண்டா, கையக் கட்டிட்டுத்தான் பேசுவான்..."

"போதுமே..."

சுகந்தா நொடித்தாள்.

"ரெண்டு பேருமே ரிடையராயாச்சு. இதுல யார் ஒசத்தி... யார் மட்டம்...?"

"அதில்லேடீ... ரொம்பவும் பேசாதேங்கறேன். 'என்னடா, ஆபீசர் பெண்டாட்டி இப்படி தகரடப்பாவைக் கவிழ்த்தாப்பல பேசறாளே'யின்னு நினைக்கக் கூடாதோல்லியோ..."

"சரி... சரி.."

"அப்புறம்... ஒரு விஷயம்..."

"என்ன..."

"அந்த ராஜகோபாலன் பார்வையே சரியா இருக்காது. காக்கா மாதிரி பார்ப்பான். எதுக்கும் நீ ஜாக்கிரதையாவே இரு. அவன் பெண்டாட்டி உருவிவிட்ட கறிவேப்பிலைக் குச்சி மாதிரி இருப்பா..."

"இதோ பாருங்கோ... உங்க ராஜகோபாலன், சந்தான கோபாலன் யாருமே வேண்டாம்... ஆளை விடுங்கோ."

சுகந்தாவுக்கு நிஜமாகவே கோபம்.

"அமெரிக்கா போறது என்ன... பிரும்ம வித்தையா... இங்கே ஏத்தி விட்டா அங்கே இறங்கிட்டுப் போறேன்..."

"அதில்லே சுக்ந்தா... நடுவுல.... ஃபிராங்க் ஃபோர்ட்'னு.."

"தெரியும். ஒரு ஜங்ஷன்லே இறங்கணும். அங்கேயிருந்து டல் ஹவுஸ் போற வண்டி எதுன்னு யாரையாவது விசாரிச்சு தெரிஞ்சுண்டு ஏறணும். வாயில இருக்கு வார்த்தை..."

அட்டகாசமாய் நொடித்தாள் சுகந்தா. அந்த ஒரு சின்ன முக வெட்டலிலேயே அவளது மூக்குத்தி ஆயிரம் வர்ண ஜாலங்களை வாரியிறைக்க, மனைவியின் சௌந்தர்யத்தில் ஒரு கணம் சொக்கிப் போய் நின்றார் பரமேஸ்வரன்.

"மறுபடி மறுபடி மக்கு அசடுன்னு சொல்ல வேண்டாமேன்னு பார்க்கறேன்..."

"பரவாயில்லே. சொல்லுங்கோ. என்னை விட்டா, வேற யார் இந்த வசவை எல்லாம் கேட்டுப்பா..."

"கோவத்தைப் பார்... முதலாவது நீ தெரிஞ்சுக்க வேண்டியது - ஃப்ராங்க் ஃபோர்ட்டுங்கறது நம்ம சேலம், தஞ்சாவூர் ஜங்ஷன் மாதிரி இல்லே... பெரிசு..."

"இருக்கட்டுமே. நாலு பிளேன் வந்து போற இடம் ஜங்ஷன்தானே... நான், நடுவுல எங்கேயும் இறங்க மாட்டேன். அதெல்லாம் நீங்கதான். இங்கேயிருந்து மதுரைக்குப் போறதுக்குள்ளே, ஒவ்வொரு ஸ்டேஷன்லேயும் தண்ணி பிடிச்சுட்டு வர்றேன்னு இறங்கிட்டு, என் வயித்துல புளியக் கரைக்க வைக்கறதுல தனி ஆனந்தம் உங்களுக்கு..."



"ஹலோ... கீதாவா, இன்னிக்கு ஈவ்னிங் பார்க்குக்கு வர்றியா, கொஞ்சம் தனியா பேசணும்!"

"தனியே பேசறதுக்கு நான் எதுக்கு? நீயே பேசிக்க வேண்டியது தானே!"

- கீழை அ. கதிர்வேல்

உண்மைதான். எப்பொழுது ரயிலில் ஏறினாலும், சுகந்தாவை பயமுறுத்திப் பார்ப்பதில் தனி குஷி பரமேஸ்வரனுக்கு.

காலி கூஜாவைத் தூக்கிக் கொண்டு இறங்கி விடுவார். ரயில் முதல் விசில் கொடுக்கும் வரையில், சற்றே ஒதுங்கியிருந்து, மனைவி படும் அவஸ்தையை முறுவலுடன் ரசிப்பார். வண்டி நகர ஆரம்பித்ததும்தான் அவளெதிரில் தோன்றுவார்.

"பயந்துட்டியா... அசடு... அசடு..."

சுகந்தாவின் நீலோற்பல விழிகளில் கண்ணீர் தளும்பும். 'சட்'டென முகத்தை வெட்டுவாள்.

"போதுமே... சின்னக் குழந்தை மாதிரி. கண்ணாமூச்சி விளையாடற வயசா இது..."

நாளை மறுநாளிலிருந்து, சுகந்தா விளையாடப் போகும் கண்ணா மூச்சியில் பரமேஸ்வரன் மட்டுமா பொறி கலங்கப் போகிறார்...?

உலகமே அல்லவா வாயில் ஈ நுழைந்தது கூடத் தெரியாமல் திகைக்கப் போகிறது!

(தொடரும்)

ஹெலிகாப்டர் டாக்டர்!

''சின்ன வயசுலேயே எனக்கு கப்பலில் காப்டனா கணும்னு ஆசை; எங்கப் பாவுக்கோ நான் டாக்டரா கணும்னு ஆசை. அதனால



என்ன? கப்பல் டாக்டராகி விட்டேன்'' என்கிறார் மெரைன் மெடிக்கல் ஸ்பெஷலிஸ்ட் டாக்டர் சாய் ரமணன்.

நடுக்கடலில் பயணம் செய்யும் கப்பல்களில் பணி புரிபவர்களுக்கு, ஏதாவது உடல்பாதிப்பு, அல்லது விபத்து என்றால் உடனே ஹெலிகாப்டரில் பறந்து அவசர மருத்துவ உதவிகள் செய்து வருகிறார். அதற்கான சிறப்புப் பயிற்சியும், இருபது வருட அனுபவமும் பெற்ற ஒரே மருத்துவர், தென்னிந்தியாவிலேயே இவர் மட்டும்தான். இவருக்காகவே, சென்னை, ராஜமுந்திரி போன்ற இடங்களில் ஹெலிகாப்டர்கள் எப்போதும் தயார் நிலையிலேயே இருக்குமாம். டாக்டர் சாய் ரமணனின் எஸ்.ஓ.எஸ் அனுபவங்கள்.



''அது ஒரு கிறிஸ்துமஸ் மாலை. பெடரிக் பர்க் என்ற எண்ணெய்க் கப்பல் (டிரில் வெஸல்) அந்தமானருகே நடுக்கடலில் பயணம் செய்து கொண்டிருந்தது. திடீரென்று மரணக் கூச்சல்! விபத்து ஸைரன் ஒலித்தது. யாருக்கோ ஆபத்து! உடனே விரைந்தேன். கப்பலின் மேல் தளத்தில் எண்ணெய்க் குழாயை இறக்கிக் கொண்டிருந்த இளம் தொழிலாளி, வலியால் துடித்துக் கொண்டிருந்தார். அவரது வலது கை விரல்கள் துண்டாகச் சிதறி, ஏகப்பட்ட ரத்தம் வீணாகிக் கொண்டிருந்தது. சுற்றிலும் பதைப்பு.. யார் நிதானம் தவறினாலும், மருத்துவர் தவறலாமா?

அவருக்குண்டான முதலுதவியைத் தந்து, ஃப்ரீஸ்ட் ட்ரைட் பிளாஸ்மா ரத்தம் ஏற்றி, சென்னை மருத்துவமனைக்குத் தகவல் தந்தேன். ஹெட் டார்ச் அணிந்து, துண்டாகிக் கிடந்த விரல் பகுதிகளைத் தேடத் தொடங்கினேன். மொத்தம் முப்பத்தொன்பது சிறு பகுதிகளைப் பொறுக்கி, ஐஸ் பையில் போட்டு எடுத்துக் கொண்டு, ஹெலிகாப்டரில் சென்னைக்கு விரைந்தோம்.

பிரபல ஹாண்ட் மருத்துவரின் சர்ஜரி குழு தயாராக இருக்கவே, சற்றும் தாமதிக்காமல் ஆபரேஷன் நடந்தது. முதலில் அவரது கை போலவே, படம் வரைந்து கொண்டு, துண்டான விரல்களை ஒவ்வொன்றாகப் பொருத்திப் பார்த்து தையல் போட்டு முடித்தபோது, மறுநாள் மாலை ஆகிவிட்



டது. தற்போது, அந்தத் தொழிலாளி யின் கை விரல்கள் சகஜமாக இயங்கு கின்றன.

"கப்பல் வேலையில், ஆன் தி ஷோர், ஆஃப் தி ஷோர் என்ற முறை யில், இருபத்தெட்டு நாள்களுக்கு ஒரு முறை ஊழியர்களை மாற்றுவார்கள். நாற்பது பேர் வரை அமர்ந்து செல்லும் ஒரு ஹெலிகாப்டர், கப்பலுக்கு வந்து ஊழியர்களை அழைத்துச் செல்லும்.

அப்படி ஒரு நாள் பணியாளர்களுடன் ஹெலிகாப்டர் கிளம்பிச் செல்வதை ரேடியோ ரூமில் இருந்தபடி கவனித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று உயரே கிளம்பிய ஹெலிகாப்டர், கடலில் 'தொப்' என்று விழுந்துவிட்டது. நல்லவேளையாக, நான் ரேடியோ அறையிலேயே இருந்த தால், உடனே சிறிய கப்பலுக்கு எமர் ஜென்ஸி தகவல் கொடுத்து, ஊழியர் களைக் காப்பாற்றி விட்டேன். சில நிமி டங்கள் தாமதமாகியிருந்தாலும் பல உயிர்கள் பலியாகியிருக்கும்.

'க்ரூயிஸ் லைனர்ஸ்' என்ற பயணிகள் சொகுசுக் கப்பலில் பணி செய்வது ஒரு விதம் என்றால், எண்ணெய்க் கப்பல்களில் மருத்துவராகப் பணிபுரிவது தனி அனு பவம். ஆழ்கடலில் எங்கே எண்ணெய் இருக்கிறது என்று கண்டு பிடிக்கவும், ஆழ் குழாய்களைப் பொருத்தித் தரவும் 'டைவர்ஸ்' எனப்படும் சிறப்புப் பணியா ளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள். கடலுக்கு அடியில் போகப் போக, ஆக்ஸிஜன் குறைந்து போகும். எனவே டீ-கம்ப்ரெஷன் சூட் அணிந்து, கடலில் குதிப்பார்கள். ஆழ்க்கடலில் அரை மணி நேரம் வேலை செய்துவிட்டு, அவர்கள் மேலே வரும்போது, நம்மைப் போல இயல்பான காற்றழுத்தத்தில் வேலை செய்ய முடியாது. கப்பலில் உள்ள அதற்கான பிரத் யேக அறைக்குச் சென்று, ஒவ்வொரு கேபி னாக அமர்ந்து, பின் இயல்பான சூழ் நிலைக்கு மீள்வார்கள். இந்த டைவர் களுக்கு ஏதேனும் நெருக்கடி ஏற்பட்டால், நாம் வழக்கமான மருந்துகளைத் தந்துவிட முடியாது. ஒவ்வாமை ஏற்பட்டுவிடும். அவர்களுக்கான சிகிச்சையே வேறு. அப்படி சிகிச்சை தரும்போது, டாக்டர் களும் டீ-கம்ப்ரஷன் சூட் அணிந்துதான் கேபினுக்குள் நுழைய வேண்டியிருக்கும். அந்தச் சமயத்தில் டாக்டர்கள் கவனமா கச் செயல்பட வேண்டியிருக்கும்" என்ற வர், தம்முடைய நீண்ட நாள் ஆதங்கத் தையும் பகிர்ந்து கொண்டார்.

"கடல் பயணிகளுக்கு பல சர்வ தேச பெட்ரோலிய நிறுவனங்கள், தங் களுக்குத் தேவையான ஹெலிகாப்டர் மற்றும் மருத்துவர்களைக் கொண்டு இருபத்து நான்கு மணி நேர சேவை செய் கின்றனர். அதே போன்ற மருத்துவச் சேவையை, பொதுமக்களுக்கும் எமர் ஜென்ஸி நேரங்களில் நான் கொடுக்க விரும்புகிறேன். அப்படி நான் செய்ய வேண்டுமென்றால், அரசாங்கம் மற்றும் அகில இந்திய தொழில் அமைப்புகளின் ஆதரவு தேவைப்படுகிறது. அப்படிக் கிடைத்தால், நாம் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் போலவே சாமானியர்களுக்கும் மெடிக்கல் இவாகுவேஷன் சர்வீஸை செய்ய இயலும்."

- ஜெயஸ்ரீ





''உடுத்திக்கிட்டா
உடம்பு வலி போற மாதிரி
மருத்துவ குணமுள்ள
புடைவை இருக்கா
டாக்டர்?''

- அம்பை தேவா

கிளினிக் கிளுக்!

''என்ன டாக்டர்...
பிரிஸ்கிருப்ஷன்ல சாமி
பேர்களை எழுதித் தந்தி
ருக்கீங்க?''
''இனிமே ஆண்டவன்
தான் உங்களைக் காப்
பாத்த முடியும்!''
- வசந்தி வள்ளுவன்





''மக்கள் மத்தியில்
நம்ம ஆஸ்பத்திரியோட
மதிப்பு குறைஞ்சிருக்குனு
எதை வச்சு சொல்றே?''
''நம்ம ஆம்புலன்ஸ்ல
யாரோ 'ப்ளஸ்'ஸை
அழிச்சுட்டு 'மைனஸ்'
போட்டிருக்காங்க டாக்டர்!''

- வசந்தி வள்ளுவன்



''வர்ற பேஷண்டுகளைப் பூரா
டாக்டர் நடக்கக் கூடாதுன்னு
சொல்றாரே...ஏன்?''
''நிறைய ஆட்டோக்கள ஊர்ல
வாடகைக்கு விட்டிருக்காரே!''

- அம்பை தேவா

''நம்ம வக்கீல்
முக்கிய சாட்சியை ஏன்
ஜிம்முக்குப் போகச் சொல்றார்?''
''பல்டி அடிச்சுப் பழகவாம்!''

- வசந்தி வள்ளுவன்





''இருபத்து நாலு மணி நேரத்துக்கு
எதுவும் சொல்ல முடியாது!''
''ஏன் டாக்டர்?''
''கிளினிக் இன்னிக்கு லீவுய்யா?''

- வசந்தி வள்ளுவன்

''ஆபரேஷன் தியேட்டர்ல
'டாக்டர் ரங்கசாமி ஒழிக'னு
எழுதிப் போட்டது யாரு?''
''அது பழைய ஆவியோட வேலை!''

- வசந்தி வள்ளுவன்



கோடு போட்ட சட்டை

சுமதிசந்திரன்

காலையில் வாசல் தெளிக்க வந்த செல்லாயி, "மாமா உங்க துணியைக் காணோம்... உள்ளேயிருக்குதான்னு பாரு" என்றாள் அதிர்ச்சியுடன்.

"ராத்திரி வெளியே தான் துவைச்சு காயப் போட்டே, நல்லாப் பாருடி" மருதமுத்து உள்ளிருந்து குரல் கொடுத்தான். அங்கிருந்தபடியே கண்களைச் சுழற்றினாள். ஊஹூம், எங்கும் இல்லை. போச்சு, வண்டியில் போன யாரோ கொடியிலிருந்து உருவிக் கொண்டு சென்றிருப்பார்கள்.

அந்த வழியாக காரைக்கால், பாண்டிச்சேரி என டூ வீலரில் செல்பவர்கள் இயற்கை உபாதைக்கு ஒதுங்கி விட்டு, விளையாட்டுக்கு இவர்கள் வீட்டின் மேல் கல்லெறிந்துவிட்டுப் பறந்து விடுவதும், சில சமயம் வெளியில் காயும் துணிகளை எடுத்து வண்டியைத் துடைத்துவிட்டு, தூரமாக எறிந்து விட்டுச் செல்வதும் சகஜம். எருதின் ரணம் தெரியாத காக்கைகள். ஞாபக மறதியாக துணியை உள்ளே எடுத்துப் போடாமல் விட்டது தப்பாகப் போயிற்று. ஒரு லுங்கி இரண்டு சட்டை, அதில் கஷ்டப்பட்டு காசு சேர்த்து பொங்கலுக்கு ஆசையாய்த் தைத்த பச்சைக் கோடு போட்ட சட்டையும் ஒன்று. இருந்த ஒரே நல்ல சட்டை!

வீடு என்றவுடன் ஓடு, குடிசை என்று கற்பனை செய்திருந்தால், நெடுஞ்சாலை லாரியில் மாட்டிய தவளையைப் போல ஒரே நசுக்கு நசுக்கிவிடுங்கள். இதைப் படித்துக் கொண்டிருக்கும் தன்னிரக்கம் மிகுந்த ஏழைகள், ஒருநடை மருதமுத்து வகையறாக்களின் வீடுகளைப் பாருங்கள். உங்கள் வாழ்க்கை எவ்வளவு மேம்பட்டது என்று தெரியும்.

நெய்வேலியிலிருந்து சிதம்பரம் செல்லும் சாலையில் குடிநீர் திட்டங்களுக்காக வாங்கி, கட்சிகளால் செயலிழந்து போய், சாலை ஓரம் ஆவேசமாய் வீசியெறியப்பட்டிருக்கும் பெரிய குழாய்கள்தான் வீடுகள். சுமார் நான்கடி விட்டம், ஆறடி நீளம் உள்ள குழாய்கள் இரண்டை இணைத்து, ஒரு பக்கம் மண் சுவர் தடுப்பு, மறுபக்கம் தொங்கவிடப்பட்ட பிய்ந்து போன பெட்ஷீட் கதவு. சற்று வசதி படைத்தவர்கள் வீட்டில் டயமண்ட் சட்டமடித்த கட்டைக் கதவு. உள்ளேயே படுக்கை அறை, ஸ்டோர் ரூம். வெளியே திறந்த வெளியில் சமையல். ஒட்டினாற்போல்



இன்னொரு பொதுக் குழாய் நடுவே தடுக்கப்பட்டு, இருகுடும்பத்துக்கு பெண்கள் பாத்ரூம்.

வறுமையிலும் வலிமையான இதயங்கள். வீட்டுக்குள் நடமாட்டம் விண்கலத்தைப் போன்றதுதான். அதில் மிதந்து நடக்க வேண்டும். இதில் குனிந்து புழங்க வேண்டும்! நூற்றுக்கும் மேற்பட்ட குழாய்கள். குடும்பங்களுக்கு அரசின் அங்கீகாரமாய் சாலையை ஒட்டிய குழாய்களின் மேல் கறுப்பு வெள்ளை போக்குவரத்து எச்சரிக்கைக் கோடுகள். கடிதம் போட்டால் போய்ச் சேரும் அளவுக்கு முகவரி கிடைத்து விட்டிருந்தது.

மருதமுத்து கிழிந்த லுங்கியுடன் வெளியே வந்தான், "என்ன மருதாயி... இப்படிப் பண்ணிட்டே?"

"ராத்திரி அலுப்பா இருந்துச்சு... எடுத்துப் போட பால்மாறிட்டேன் மாமா. மன்னிச்சுக்கோ, நம்ம முதலாளிகிட்ட கேட்டுப் பார்க்கலாம்."

"இப்பதான் அவரோட நல்ல சட்டை, லுங்கியைத் தந்தாரு. திரும்பக் கேட்டா திட்டமாட்டாரா? இப்ப என்ன செய்யறது? இப்படி வெறும் உடம்போட வேலைக்கு எப்படிப் போறது?"

செல்லாயி ஒரு டவலை அவனிடம் தந்தாள். "இதைப் போர்த்திகிட்டு நேரா முதலாளி நிலத்துக்கு வந்துடு. நான் அவர்கிட்ட சொல்லிட்டு, பழைய சட்டை எதாவது வாங்கிட்டு வந்துடறேன்."



ஒரு பெண்மணிக்கு ஹார்ட் அட்டாக் வந்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டாள். கிட்டத்தட்ட மரண தேவனைச் சந்திக்கும் நிலை. கடவுளைக் கண்டவுடன் "என் டயம் முடிஞ்சு போயிடுச்சா?" என்றாள் கவலையுடன்.

"இல்லை இல்லை... இன்னும் நாற்பது வருடம் இரண்டு மாதம் எட்டு நாள்கள் கழித்து தான் உனக்கு மரணம்" என்று கடவுள் சொன்னதும் பெண்மணிக்கு பயங்கர குஷி. ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகி, நேரே பிளாஸ்டிக் சர்ஜனிடம் போனாள். ஏகமாக செலவு செய்து ஆளே மாறிவிட்டாள். கண்ணாடியில் தன் தோற்றம் பார்த்து அவளுக்கு ஒரே குஷி... ஆனால் வீடு திரும்பும் போது கார் மோதி இறந்து விட்டாள். மேலோகத்தில் கடவுளைப் பார்த்துச் சண்டை போட்டாள்.

"நீங்க தானே இன்னும் ரொம்ப வருஷம் ஆயுசு இருக்குன்னு சொன்னீங்க... இப்படி ஏமாத்திப்புட்டீங்களே!"

கடவுள் சொன்னார்... "ஸாரிம்மா... எனக்கு உன்னை அடையாளம் தெரியலை!"

டாக்டர் ஜோக்ஸ்: லதா சேகர்



"ரெண்டு பேருக்கும் கொஞ்சம் கூட பொறுப்புக் கிடையாது" என்று உரிமையுடன் திட்டிவிட்டு பயன் படுத்தாமல் மிச்சமிருந்த ஒரே ஒரு சட்டையைக் கொடுத்தார் முதலாளி. இருந்தாலும் மனசு கேட்காமல் சாயந்திரம் ஒரு நல்ல காரியம் செய்தார்.

மருதமுத்துவை அழைத்து, "திருநள்ளாறு சனீஸ்வரன் குளத்துல முழுகறவங்க, அவங்க போட்டிருக்கற துணிகளை அப்படியே கழற்றி விட்டுடறாங்க... துணியோட சனி தொலையும்றது ஐதீகம். நிர்வாகம் நல்ல துணிகளை மட்டும் எடுத்து வெச்சு, கோவில் சார்பா, கேட்கற ஏழைங்களுக்கு, அவங்க செலவிலேயே அனுப்பறாங்க... இந்த லெட்டர்ல ரெண்டு பேருக்கும் கொஞ்சம் துணி கேட்டு விளக்கமா எழுதியிருக்கேன். இதை போஸ்ட் செஞ்சுடு" என்றார்.


மருதமுத்து தயங்கினான் "முதலாளி... மத்தவங்க சனியன் நம்மைப் பிடிச்சுடாதுங்களா?"

"அடி சக்கை, இருக்கறதே குழாய் வீட்ல, அதைவிட வேற என்ன தரித்திரம் வரப் போவுது? போக்கத்தவனே... கொண்டு போய் போஸ்ட் ஆபீசுல போடுறா..."

முதலாளி கொடுத்த ஒரே சட்டையை இரவில் துவைத்து, இரண்டு மூன்று நாள் சமாளித்தார்கள். அன்று குழாய் வீட்டுக்கே கூரியரில் ஒரு பார்சல் வந்தது. சந்தோஷமாய்ப் பிரித்தார்கள்.

உள்ளே இரண்டு புடைவை, கிழியாத லுங்கிகளும், இரண்டு சட்டையும் துவைத்து, சலவை செய்யப்பட்டு மின்னியது. இரண்டு சட்டையில் ஒன்று, மருத முத்துவின் காணாமல் போன அதே பச்சைக் கோடுபோட்ட சட்டை!

அருள்வாக்கு



'மனுஷ்யனின் மூக்குக்கு ஒத்துக் கொள்ளாதது மட்டுந்தானென்றில்லை. அவனுடைய வயிற்றுக்கு, ஜீர்ணக் கருவிகளுக்கு (digestive organs)க்கூட மாம்ஸ போஜனம் ஒத்துக் கொள்ளாததுதான்' என்று இப்போது (1957 நவம்பரில் சென்னையில்) நடந்த World Vegetarian Congress-ல் பேசிய பலர் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். 'கான்ஸ்டிட்யூஷனை'-தேகவாகை வைத்து, மாம்ஸத்தைத் தின்றால்தான் ஜீவிக்க முடியும் என்றிருக்கிற புலி, சிங்கம் மாதிரியான மிருகங்களின் இரைப்பை, குடல் முதலிய உறுப்புக்களோடு மனுஷ்யனின் ஜீர்ண இந்திரியங்களை ஒப்பிட்டு, மனுஷ்ய தேகவாகு மாம்ஸ போஜனத்துக்கு ஏற்பட்டதே இல்லை என்று இவர்கள் நிறையக் காரணம் காட்டியிருக்கிறார்கள்.

கான்ஸ்டிட்யூஷனலாக மாம்ஸம் சாப்பிடக் கூடாத மிருகங்களுக்கு நமக்குள்ள 'புத்தி சாலித்தனம்' இல்லாததால் அவை மாம்ஸத்தின் கிட்டேயே போவதில்லை. ஆடும், மாடும், மானும், குதிரையும், யானையும் தப்பித் தவறியாவது மாம்ஸம் தின்னுமா? ஆனால் மிருகங்களுக்கு இல்லாத, ஆறாவது அறிவும் இருக்கிற மனுஷ்யன் எதை விலக்கி எதைக் கொள்ள வேண்டும் என்ற வியவஸ்தையைப் புரிந்து கொள்ளாமல் மாம்ஸமானாலும் ஸரி, மற்ற ஆஹாரமானாலும் ஸரி, இரண்டையும் தின்னுவது என்று வைத்துக் கொண்டிருக்கிறான். மிருகங்களில் பூர்ணமாக மாம்ஸத்தைத் தள்ளியவையாகச் சிலது இருப்பது போலவே, மாம்ஸத்தைத் தவிர வேறே எதுவுமே தின்னாதவையாகச் சிலது இருக்கின்றன. நாய், பூனை, காக்காய், குருவி மாதிரிச் சிலதான் இரண்டு தினுஸையும் தின்பவை. மனுஷ்யன் இவற்றின் லெவலில்தான் இருப்பதா?

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய
ஸ்வாமிகள்



• குணா, கார்த்திகேயன், செந்தில்குமார்

அதிகாலைத் தூக்கமும் அதில் புரண்டு கொண்டே கண் திறக்க மறுக்கும் சிலமணித் துளிகளும், சொர்க்கபுரியில் வாழ்வதற்கான தருணங்கள்தானே? ஆனால் இதே அதிகாலைப் பொழுதில் சேவலோடு சேவலாக தாங்களும் எழுந்து, சூரிய உதயத்தையும், காலைப் பனியையும் அனுபவித்துக் கொண்டே, செல்ல ஓட்டமும், வீரமான நடையுமாக வாக்கிங் செல்பவர்களை நிறையவே சமீப காலங்களில் காண முடிகிறது.

இவர்களில் முதலில் நம்மிடம் அகப்பட்டது, ஜானி, ஜாக்கி என்ற இரு உயர்தர நாய்கள்! தன் எஜமானரான பாலசுப்ரமணியத்தை, வடபழனி சாலையில் வாக்கிங் கூட்டிப் போய்க் கொண்டிருந்தன.

"ஹாய், ஹாய், ஹாய், ஆமா, எதுக்கு டெய்லி வாக்கிங் போறீங்க?" என்று எப்படிக் கொஞ்சிக் கேட்டாலும் அவற்றுக்குப் புரியப்போவதில்லை என்பதால், பாலசுப்ரமணியத்திடம் ஐம்பதடி தள்ளி நின்று கேள்விகளை வீசினோம்.

"என் செல்லங்களை (அடேங்கப்பா!) எப்பவும் நான் கட்டிப்போட்டு கொடுமைப்படுத்த மாட்டேன். இதுமாதிரி எப்பவும் ஃப்ரீயாதான் இருக்காங்க. நான் மட்டுமல்ல, இதுங்களும் நான் தவறாம வாக்கிங் வர்றதால, எப்பவும் புத்துணர்ச்சி



யோடு இருக்கும்" என்றபோது இரண்டும் வலது இடதாக வாலை ஆட்டின. 'நீ நடந்தால் நடையழகு. அழகு' என்று வாழ்த்துப்பா பாடி ஜானி, ஜாக்கிக்கு விடை கொடுத்தோம்.



* பாலசுப்ரமணியன் ஜானி, ஜாக்கி

கு!



* விதுலா



• ரவிகுமார், அனில்குமார்

'டக் டக் டக்' என்று முயல் பாய்ச்சலில் 12B பஸ் பிடிக்கச் செல்லவது போல் சென்று கொண்டிருந்த விதுலாவைப் பிடிப்பதற்குள், நமக்கு மூச்சு வாங்கி விட்டது.

"வீட்ல கணவர், மகள் எல்லாம் தூங்கிக் கிட்டிருக்கும்போது, நான் எழுந்து 'வாக்கிங்'குக்கு கிளம்பிடுவேன். சர்க்கரை வியாதி, மூட்டு வலியெல்லாம் வர்றதுக்குள்ள வாக்கிங்கை ஆரம்பிச்சு நம்மைப் பாதுகாக்கத் தெரிஞ்சுக்கணும்." என்று கூறுபவர், 'குட்மார்னிங்' என்றபடி சூரியன் எழுந்து வெளிச்சம் பரப்பும் பொழுதுதான் நடையை ஆரம்பிப்பாராம். பயத்தின் காரணம், மரியாதைக்குரிய செயின் திருடர்கள்!

தினமும் வாக்கிங் செல்லும் பழக்கமுடைய ரவிகுமாரும், அனில்குமாரும் நம்மிடம் சோக கீதம் வாசித்தனர்.

"சார், போன மாசம் வரைக்கும் நாங்க மெரினா பீச்சில்தான் வாக்கிங் போய்க்கிட்டிருந்தோம். சூரிய உதயமும், கடற்காத்தும், அப்படியே திரும்பும்போது ஒரு கிளாஸ் அருகம்புல் சாறும், காலையிலேயே எல்லா நரம்புகளையும் தட்டி விட்டுடும். ஆனா சுனாமிக்குப் பிறகு அங்கே போறதுக்கு வீட்டுல அனுமதிக்கறதில்லை" என்றனர்.



• ஸ்ரீதேவி

இளங்குருத்துக்கள் இல்லாத இடத்தை எங்கேனும் காண முடியுமா? கல்லூரியில் பயில்பவர்களான குணா, கார்த்திகேயன், செந்தில்குமார் மூவருக்கும் காலைப் பொழுது எப்போதுமே த்ரீ இன் ஒன்தான். கொஞ்சம் ஜாக்கிங், கொஞ்சம் வாக்கிங், சோம்பலை முறித்து நண்பர்கள் சேர்ந்த பிறகு ஓயாமல் கிரிக்கெட். "உடற்சுவர் இருந்தால்தானே வாழ்க்கைச் சித்திரம் வரைய முடியும். சாதிக்க முடியும்?" என்றபடி எதிர்காலத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தனர்.

கைகளைச் சற்று உயர்த்தியபடி நடந்து கொண்டிருந்த ஸ்ரீதேவியிடம் பேசிய போதே புரிந்து கொள்ள முடிந்தது, அவரொரு வக்கீல் என்று. "வாக்கிங் பற்றி என்னால் பாயிண்ட் பாயிண்ட்டாதான் சொல்ல முடியும்" என்று ஆரம்பித்தார்.

பாயிண்ட் நெ.1 : அன்றைக்கு மாடாய் உழைத்தது போலெல்லாம் இன்றைக்கு கிடையாது. 9 டு 6 வேலையில் உடலை யாரும் வருத்திக் கொள்வதில்லை.

பாயிண்ட் நெ.2 : இன்றைய தேதியில் சர்க்கரை வியாதிக்காரர்கள் என்றில்லாமல், பலதரப்பினரும் வாக்கிங் செல்கிறார்கள். உடல் மீதான அக்கறையில் அனைவருக்கும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளதே இதன் காரணம்.

பாயிண்ட் நெ.3 : பெண்கள் அவர்தம் தோழியரோடு வாக்கிங் செல்வது சகஜமாகிவிட்டது. அதிகாலைப் பொழுதில் எந்த டி.வி. சீரியல்களும் இல்லாததால், எமது கட்சிகாரர்களுக்கு இதில் எவ்வித சிரமமுமில்லை யுவர் ஆனர்." என்று சிரித்தபடி தமது வாதத்தை முடித்து நடையைக் கட்டினார். நாமும்தான்!

- சநகன்

படங்கள் : **ஸ்ரீஹரி**



ஒரு பெக் அடிச்சா தப்பா?

• டாக்டர் சத்தியநாதன்

"ஒரு குவார்ட்டர் அடிச்சா, டென்ஷன் போயி, ரிலாக்ஸாயிடும். 'கும்'முன்னு உடம்பு தேறும் என்றெல்லாம் சொல்கிறார்களே" என்று மனநல மருத்துவர் டாக்டர் சத்தியநாதனிடம் கேட்டோம்.

"முன்பெல்லாம் குடிப்பழக்கம் என்பது பாவகாரியமாகக் கருதப்பட்டது. இப்போது குடிப்பதை பிரெஸ்டிஜாக நினைக்கிறார்கள். டீன்ஏஜ் வயதுவரை குடிப்பழக்கம் என்பதை தவறாகவே நினைத்து வளரும் ஓர் இளைஞன், நாளடைவில் "ஒரு பெக் அடிச்சா தப்பேயில்லடா" என்று நண்பனின் தூண்டுதலால் மெள்ள பழகிக் கொள்கிறான்.


வெளிநாடுகளில் உடல் கதகதப்புக்காகத்தான் மதுவை நாடுகிறார்கள். ஆனால் நம் நாட்டிலோ, கிட்டத்தட்ட பொழுதுபோக்கு அம்சமாகவே மாறி விட்டது.

அவ்வப்பொழுது ஒரு பெக் மட்டும் குடித்து வந்தால் பெரிய உபாதை இல்லைதான். ஆனால் யார் இங்கு ஒரு பெக்கோடு நிறுத்துகிறார்கள்? முதல்முறையாகக் குடிக்கும்போதுதான் முதல் பெக்கிலேயே 'கிக்' எனப்படும் ஆழ்ந்த மயக்கம் ஏற்படும். நாளாக நாளாக உடல் இதில் பழகிக் கொண்டு, அவ்வளவு சீக்கிரம் தன் வசத்தை இழக்காது. போதை கிடைக்காத போது பாட்டில் பாட்டிலாகக் குடிக்கத் தொடங்கி, விரைவில் பெருங்குடி மக்களாகிவிடுகிறார்கள்.

ஆல்கஹாலில் உள்ள கலோரிகள் பசியைக் கட்டுப்படுத்தும் என்பதால், அதிகம் சாப்பிட முடியாமல் குடல், இரைப்பை, ஈரல் போன்றவை பாழாகும். அதேபோல் மதுப்பழக்கத்தினால் உண்டாகும் ஆழ்ந்த, நீண்ட தூக்கம் ஆபத்தானது. நாளடைவில் மது குடித்தால் மட்டுமே தூக்கம் வரும் என்கிற நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவார்கள். கூடவே நொறுக்கப்படும் சிப்ஸ், சுண்டல், அசைவம் போன்றவை ஆரோக்கியத்துக்குக் கேடு விளைவிக்கும்.

இரத்தத்தில் 1% அளவு ஆல்கஹால் கலந்தாலே 'பிளாக் அவுட்' எனப்படும் ஞாபக மறதி, தன்னிலை அறியாத உணர்வுகள் ஏற்படும்.

'ஒரு பெக் அடிச்சா தப்பா'னு கேட்டுக்கிட்டு இருக்காம.. அந்த எண்ணத்தையே விரட்டிடுங்க.. அதுதான் நல்லது."



- நீலாவள்ளி

படம் : எழில்

காவிரி தந்த கணபதி

கைலாயம்... பங்குனி உத்திரம். பார்வதி - பரமேஸ்வரர் திருமணம் நடந்தபோது தேவர்களும் முனிவர்களும் ஒரு சேர குழும, வடகோடு தாழ்ந்து, தென்கோடு உயர்ந்தது.

உடனே சிவபெருமான், அகத்திய முனிவரை அழைத்து, "அன்ப! நீ பொதிகை மலைக்குச் சென்று இருப்பாயாக. அப்போது நிலம் சமமாகும்" என்று கூறினார்.

"இறைவா... தங்களுடைய திருமணக் கோலத்தைக் கண்டு களிக்கும் பெரும் பேற்றை இழக்கின்றேனே" என்று மன வருத்தம் கொண்டார் அகத்தியர்.

"கவலை வேண்டாம். நம் திருமணக் காட்சியை அங்கேயே உமக்குக் காட்டுவோம். உலக நலன் கருதி நீ செல்வாயாக!" என்று பணித்தார்.

"இந்தப் புனிதப் பயணத்துக்கு அடையாளமாக, ஒரு புண்ணிய நதியைத் தர வேண்டும்" என்று அகத்தியர் பிரார்த்தனை செய்யவே, சிவபெருமான் தமது



• கூப்பிடு விநாயகர்

சடாமுடியில் உள்ள கங்கையிலிருந்து நீரை அள்ளி எடுத்து, கமண்டலத்தில் அடைத்துக் கொடுத்தார்.

"நதியே... அகத்தியன் கை காட்டும் இடத்தில் நீ பெருக்கெடுப்பாயாக!" என்று கட்டளையிட்டார்.

அகத்தியர், தென்னகம் நோக்கிப் புறப்பட்டார். வழியில் உள்ள சிவத் தலங்களை வழிபட்டுக் கொண்டு, குடகு மலையில் தங்கி, சிவ பூஜை செய்து கொண்டிருந்தார்.

அதே சமயம். இந்திரதேவன், சீர்காழியில் சிவபூஜை செய்து கொண்டிருந்தான். அப்போது மழையின்றி, பயிர்களும் உயிர்களும்



• ஸ்ரீராஜகணபதி

வாடி வருந்தின. இந்திரனை நாரத முனிவர் சந்தித்து, "தேவேந்திரா! இப்போது அகத்தியர் குடகுமலையில் சிவபூஜை செய்து கொண்டிருக்கிறார். நீ கணபதியை வழிபட்டால், அவர் அந்தப் புண்ணிய நதியைத் தருவார்" என்று ஆலோசனை கூறினார்.

தேவேந்திரனும் கணபதியை மனமுருகி வேண்ட, கணேசமூர்த்தி, காக்கை வடிவெடுத்து, அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்த்துவிட்டுப் பறந்தார். காவிரி பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது. அகத்தியருக்கு பயங்கரக் கோபம். காகத்தை விரட்டிக் கொண்டு ஓட, அது உருவம் மாறி, ஒரு சிறுவனாக நிற்பதைக் கண்டார். "அடேய்... மாயக்காரா"

என்று திட்டிக் கொண்டே கையை மடக்கி, தலையிலே குட்டும் பொருட்டு ஓடி விரட்டினார். சிறிது அவரை அலைக் கழித்தபின், கணேசர், அகத்தியருக்குக் காட்சி தந்தருளினார். அகத்தியர் அஞ்சி நடுங்கி, "ஆனைமுகக் கடவுளே... உமது பெருமை அறியாது உம்மைக் குட்ட முயன்றேனே" என்று அழுது, தொழுது, தமது தலையிலேயே குட்டிக் கொண்டார்.

விநாயகப் பெருமானோ, அகத்தியரின் கைகளைப் பற்றித் தடுத்து, அருள் புரிந்தார்.

"இனி காவிரி நிற்காமல் ஓடுவதாக! என்னை வழிபடுவோர் உம்மைப் போல் சிரத்தில் குட்டிக் கொண்டால், அவர்களின் அறியாமை மறைந்து, ஞானம் பெறுவார்கள்" என்று வரமருளினார்.

விநாயகர், காவிரியைக் கொடுத்ததால், சோழ நாடு தழைத்தது. உயிரினம், பயிரினம் பிழைத்தன.

ராசியான ராஜ கணபதி

சேலம் நகரின் மையத்தில் அமர்ந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ ராஜகணபதி ஏராளமானோருக்கு கண்கண்ட தெய்வம். கடை வீதியின் நடுவில் கோயில் கொண்டிருக்கும் பிள்ளையாரை தரிசித்துவிட்டுதான், அனேக வணிகர்களும் காலைப் பணிகளைத் துவக்குவர்.

திருமணம் என்றால் முதல் பத்திரிகை பிள்ளையாருக்குத்தான். நகைகள் வாங்கிக் கொண்டு நேராக பிள்ளையாருக்கு அணிவித்துவிட்டு அதன்பின்னரே வீட்டுக்கு எடுத்து செல்வர். புதிய வண்டிகளுக்கு பூஜை போடுவது ராசி என்று, வெளியூர்களில் இருந்து எல்லாம் வருவார்கள். அவ்வளவு ஏன்? இரண்டுமுறை கீழே விழுந்துவிட்டால் உடனே வண்டியை நன்கு கழுவித் துடைத்து, இக்கோயில்முன் நிறுத்தி பூஜை போடுவோரும் உண்டு.

பிறந்த குழந்தை மூன்று அல்லது ஐந்தாம் மாதத்தில், முதலில் அழைத்து வருவது இங்குதான். பிள்ளையாரின் கைகளில் குழந்தையின் தலை படுமாறு வைத்து அர்ச்சகர்கள் தருவர். இரவு இரண்டு மணிக்குச் சென்றாலும் மூடிய கதவுகளுக்குபின் நல்ல வெளிச்சத்தில் பிள்ளையாரைக் காண முடியும். எந்த நல்ல காரியம் தொடங்கு முன்பும் இந்தப் பிள்ளையாரிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டால், நம் வேலை நல்லபடி முடிந்துவிடும்.

- ஸ்ரீவித்யாராமன், சென்னை

கூப்பிடு விநாயகர்

கோயமுத்தூர் இடையர்வீதியில் சுயம்பு மூர்த்தியாகத் தோன்றியவர் வெள்ளி விநாயகர். குரும்பர் இனத்துப் பெரியவர் குருபதாசே கவுடரால் பிரதிஷ்டை செய்யப்பட்டு 1740 முதல் இன்று வரை தொடர்ந்து அவரது பரம்பரையினர் அறங்காவலர்களாக இருந்து, நல்லமுறையில் ஆலயப் பணியாற்றி வருகின்றனர்.

'உளிமுனை படாத' பிம்பமாக அவதரித்த விநாயகர், தாசேகவுடரின் பெயரைக் கூப்பிட்டு ஆலயம் நிர்மாணிக்கப் பணித்ததால் 'அருள்மிகு குருபதாசேகவுடன் ஸ்ரீ கூப்பிடு விநாயகர் திருக்கோயில்' என ஸ்தாபிக்கப்பட்டு சீரோடும் சிறப்போடும் விளங்குகிறது.

வெள்ளியால் செய்யப்பட்ட ஒரே தகட்டில் கவசம் சார்த்தி சிறப்பிக்கப்பட்டதால், 'வெள்ளி விநாயகர்' என்ற பெயரில் அருள்பாலித்து வருகிறார்.

எந்த ஒரு நற்காரியமாக இருந்தாலும் இந்த கூப்பிடு விநாயகரை மனதாரக் கூப்பிட்டு முறையிட்டால், நிச்சயம் காரியம் கை கூடும் என்பது நிதர்சனம்.

சபீனா பாபு, கோவை

"ஒண்ணு வாங்கினால் ஒண்ணு இலவசம்னு சொல்லி அந்தக் கடையிலே நல்லா ஏமாத்திட்டாங்க!"

"அப்படியா?!"

"ஆமாம்; வலது கால் செருப்பு வாங்கினால், இடது கால் செருப்பு இலவசம்னு சொல்லிட்டாங்க!"

- யமுனா ரெங்கநாதன்




அஜீரணம் ஒழிக! ஆரோக்கியம் வாழ்க!


டாக்டர் மகாதேவன்



ஆயுர்வேதத்தில் 'அக்னிசக்தி'க்குத் தான் முதல் மரியாதை. உடம்புக்குள்ளேயே இருந்து உணவை செரிக்கச் செய்கின்ற அந்தச் சக்திக்கு 'அக்னி' என்று பெயர். வயிற்றில் இருப்பதால் ஜடராக்னி (ஜடாரம் - வயிறு) என்று சொல்கிறோம். இந்த அக்னியானது சமான வாயுவால் தூண்டப்பட்டு, அன்னத்தை செரிக்கச் செய்கிறது. அந்த அன்ன ரசமானது உடம்பிலே கிரகிக்கப்பட்டு, ஆரோக்கியமான வாழ்வைத் தருகிறது.

வயிற்றில் ஏற்படும் வாயுத் தொந்திரவுக்கு பூண்டு மிகவும் நல்லது. 'பூண்டு தின்றால் வாயு ஓடும்' என்று பழமொழியே உண்டு. வெள்ளைப் பூண்டு, சீரகம், நல்ல மிளகு, தனியா சேர்த்து அரைத்து, வெந்நீருடன் சேர்த்துச் சாப்பிட, வாயுத் தொல்லை அறவே நீங்கும். பெருங்காயமும் சிறந்த ஆன்டிஸ்பாஸ்மோடிக்! வயிற்று வலி நிவாரணம் தந்து, வாயுவை வெளியேற்றிவிடும். 'சீரகம்'என்றாலே அகத்தைச் சீராக்குவது என்று அர்த்தம். ஒரு ஸ்பூன் சீரகத்தை சிவக்க வறுத்து, கஷாயம் தயாரித்துக் குடித்தால், வயிற்றுக் கோளாறுகள் நீங்கும். அகத்திக் கீரையைச் சாப்பிட்டால், வயிற்றுப் பூச்சிகள் கொல்லப்படும். மிளகு, சீரகம், சுக்கு, உப்பு, கறிவேப்பிலை சேர்த்து, துவையல் போல அரைத்துச் சாப்பிட, வயிற்று நோயே வராது. இஞ்சியைச் சாறு பிழிந்து, ஒரு டீஸ்பூன் எலுமிச்சைச் சாற்றுடன், உப்பைக் கலந்து குடித்தால், அஜீரணக் கோளாறுகள் ஓடிவிடும்.





'சிருங்க பேராதி சூர்ணம்' என்றொரு இஞ்சி சூரணம் ஆயுர்வேத மருந்துக் கடைகளில் கிடைக்கும். இஞ்சி, சீரகம், தனியா, இந்துப்பு, எலுமிச்சைச் சாறு கொண்டு தயாரிக்கப்படும் இதைச் சாப்பிட்டால், உணவில் விருப்பமின்மை, குமட்டல், வாந்தி, அஜீரணம், வயிற்று நோய், உமிழ்நீர் சுரத்தல், ருசியின்மை போன்றவை நீங்கி, நல்ல ஆரோக்கியம் கிடைக்கும்.




வலிக்கு

அங்கெங்கு என்றில்லாதபடி, எங்கேயும் தோள்பட்டை வலி புகார்கள் அதிகமாகிவிட்டன. அதிகமாக வண்டி ஓட்டுபவர்களுக்கு, கம்ப்யூட்டரில் தொடர்ந்து பணி செய்பவர்களுக்கு, தோள்களுக்கு அதிக வேலை தருபவர்களுக்கு, நாற்பது வயதைத் தாண்டுபவர்களுக்கு, தோள்பட்டை வலி பிரச்னையாக உள்ளது.

விதவிதமான தோள் வலிகள் பற்றியும், அவற்றை நீக்கும் வழிகள் பற்றியும் விளக்கமாகச் சொல்கிறார், சென்னை பெசன்ட் நகர் டெர்மினஸ் அருகே 'நீ அண்ட் ஷோல்டர் கிளினிக்' நடத்திவரும் டாக்டர் ஏ.கே. வெங்கடாசலம்.





தோள்பட்டையில் வலி வருவது ஏன்?

• நீங்கள் ஃபோர்ட்டி ப்ளஸ்ஸா?... அது உறைந்த தோள்பட்டை எனப்படும் frozen shoulder பிரச்னையாக இருக்கலாம். தோள்பட்டையின் தசைகள் இறுகிப் போய் வலியை ஏற்படுத்தும்.

• நீங்கள் ஃபிப்டி ப்ளஸ்ஸா? Rotator cuff கிழிவதாலும், மூட்டுச் சிதைவாலும் தோள்பட்டையில் வலி வரும்.

• நீரிழிவு நோய் இருந்தாலோ, தோள்பட்டையில் கால்சியம் சத்து படிந்திருந்தாலோ வலி வரலாம்.

• உடம்பில் புரதச் சத்துக் கழிவு உண்டாகி, அதை சிறுநீரகம் ஏற்காமல் விட்டால், கௌட் எனப்படும் வியாதி ஏற்படும். இதனாலும் தோள்பட்டை வலி வரலாம்.

• ஆஸ்டியோ ஆர்த்ரைடிஸ் எனப்படும் மூட்டு வாதமும், சிலருக்குத் தோளில் வலியை ஏற்படுத்தும்.

• கழுத்து, வயிறு, மற்றும் உதரவிதானம் இவற்றில் ஏற்படும் வலியானது அப்படியே நீக்குப் போக்குக் காட்டி தோள்பட்டைக்கும் பரவலாம்.

மொத்தத்தில் தோள்பட்டை தசைகள் கிழிந்தாலோ, நசிந்தாலோ வலி பின்னி எடுக்கும்.

தோள்பட்டை தசை நார்கள் ஏன் கிழிகின்றன என்று நீங்கள் கேட்கலாம். அதற்கு தோள்பட்டையின் உடற்கூறு அமைப்பைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

Rotator cuff என்பது தோள்பட்டை மூட்டின் மூன்று பக்கங்களிலிருந்தும் சூழப்பட்ட தசைநார்களின் இணைப் பாகும். இவை, ஷோல்டர் பிளேடு எனப்படும் ஸ்காபுலா (Scapula) எலும்பை ஹ்யூமரஸ் (Humerus) எனப்படும் கை எலும்புடன் இணைக்கின்றன. இந்த ரொடேட்டர் கஃப் கையை மேலே தூக்கும்போதும், சுழற்றும்போதும் நிலையாக இருப்பதற்கு உதவி செய்கிறது. எப்போதும் மிதமான உடற்பயிற்சிகள் செய்து, உடல்தசைகளைச் சீராக வைத்திருப்பவர்களுக்கு, ரொடேட்டர் கஃப் பாதிக்கப்படுவதில்லை. அதிக அளவில் கைகளுக்கு வேலை கொடுத்தாலோ, திடீரென்று



இருக்குது வழி!

அதிக பளுவான பொருளை ஏடாகூடமாகத் தூக்கினாலோ, கைகளைப் பயன்படுத்தாமல் விட்டாலோ, இரத்த ஓட்டம் குறைந்தாலோ, தசை நார்கள் கிழிந்து வலு விழுந்து விடுகின்றன.

கையைத் தலைக்கு மேல் தூக்கி வேலைகள் செய்யும் போது, தோளில் 'சுருக்' என்று வலிக்கும். தலைவாருதல், உயரமான இடத்தில் உள்ள பொருளை எடுத்தல், குழாயைத் திருப்புதல், கனமான பக்கெட்டைத் தூக்குவது, மாவு பிசைதல், எழுதுதல் போன்ற சின்னச் சின்ன வேலைகளைக் கூடச் செய்ய முடியாது. இரவிலும் வலி அதிகமாகி, தூக்கம் வராது.

தோள்வலிக்கு என்னதான் சிகிச்சை?

• தோள்வலிக்கு முதல் தேவை பரிபூரண ஓய்வு... ஆரம்பக் கட்டத்தில் வலி நிவாரணிகளும் ஃபிசியோ தெரபியும் பயன்தரக்கூடும்.

• ஓய்வு எடுத்தும் தோள் பட்டை வலி குறையாமலிருந்தால், வலி மரத்துப் போகும் மருந்தை ஊசி மூலம் தோள்பட்டை மூட்டில் செலுத்தலாம்.

• ரோடேட்டர் கஃப் முழுவதும் கிழிந்த நிலையில்கூட, முதியவர்களுக்கு ஐஸோமெட்ரிக் எக்ஸர்சைசஸ் பயன்தரும்.

• நடுத்தர வயதினருக்கு மேற்கூறிய வழிமுறைகளைப் பின்பற்றிய பின்பும் தோள் பட்டை வலி நீடித்தால், அறுவை சிகிச்சையே நிரந்தரமான தீர்வு தரும். ஓபன் சர்ஜரி அல்லது ஆர்த்ரோஸ்கோப் (சிறுதுளை) முறை மூலம் தீர்வு காணலாம். இந்த ஆர்த்ரோஸ்கோப் அறுவை சிகிச்சையே நூதனமானது, சிறப்பானதும்கூட. இதில் வலி மிகவும் குறைவாக இருக்கும். நிரந்தர நிவாரணம் வெகு விரைவில் கிடைக்கும். பெரிய தழும்பு இருக்காது. ஆர்த்ரோஸ்கோப் முறையில் அறுவை சிகிச்சை செய்யும்போது, தோள் பட்டை மூட்டில் பல இடங்களில் உள்ள கோளாறுகளும். மருத்துவரின் கவனத்துக்கு வருவதால் இக் கோளாறுகளை சரிப்படுத்த முடியும்.

தோள்பட்டை வலி வந்த பிறகு அவஸ்தைப் படுவதைவிட, தடுப்பதே சிறந்தது. புத்துணர்ச்சி தரும் தோள் பயிற்சிகள் உள்ளன. அவற்றை தினமும் பத்து நிமிடங்கள் செய்து வந்தாலே, தோள்வலி வராமல் தடுக்கலாம்.

– **சரண்**



• டாக்டர் ஏ.கே. வெங்கடாசலம்.

நோயற்ற வாழ்வு!

நோய் விசாரணையில் இரண்டு விதம் உண்டு. ஒன்று கர்நாடக முறை; மற்றொன்று நவீன முறை. முதலில் கர்நாடக முறையைச் சொல்கிறேன்: நாராயணசாமி நோயாய்க் கிடக்கிறான். அவனைப் பார்க்க சேஷிப் பாட்டி வருகிறாள். நாராயணசாமியைப் பார்த்ததும் சேஷிப் பாட்டிக்கு துக்கம் நெஞ்சையடைக்கிறது. ''அடடா! என் கண்மணியே! இப்படி எலும்பும் தோலுமாய்ப் போய்விட்டாயே? வயிறு பகீர் என்கிறதே! கெடுத்து விடாதேடா, அப்பா! குட்டியம்மாள் வயிற்றில் தீயை வைக்காதேடா!'' என்று புலம்புகிறாள். அச்சமயம் நாராயணசாமியின் தாயார் குட்டியம்மாள் அங்கு வர, சேஷிப் பாட்டி அவளைப் பார்த்து,

''அடி அம்மா! குழந்தையை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கோடி. எங்காத்திலே கடன்காரன் பொன்னு இருந்தானோல்யோ! இப்படியே தான் பத்து நாள் கிடந்தான். ஒரு நாள் திடீரென்று வலிப்பு மாதிரி வந்து இரண்டு இழுப்பு இழுத்தது. பொக்குன்னு உயிர் போயிடுத்து. அப்புறம் அப்பான்னா வருமா? அய்யான்னா வருமா? ஜாக்கிரதேடி அம்மா! ஜாக்கிரதை!'' என்று கூறி, இறந்துபோன 'கடன்காரன்' பொன்னுவை நினைத்து அழத் தொடங்குகிறாள்.

சேஷிப் பாட்டியின் அனுதாபத்தைக் கிளப்புவதற்கு ஒருவன் நோயாய்ப் படுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் கூட இல்லை. சில நாள் பிரிந்திருந்து மறுபடியும் சந்தித்தாலே போதும். ''ஏண்டாப்பா! இப்படி இளைத்துப் போயிருக்கிறாயே? உடம்பு கட்டோட நன்றாயில்லையே?'' என்று விசாரணை தொடங்கிவிடுவாள். நான் என்னுடைய கிராமத்தை விட்டுச் சென்று பதினான்கு வருஷங்களாகின்றன. அதன் பின்னர், எப்போது ஊருக்குப் போனாலும், அப்போதெல்லாம் மேற்கூறிய அன்பான விசாரணை தான் எனக்கு நல்வரவு கூறும். இவ்வாறு விசாரிக்கப்படும் ஒவ்வொரு தடவைக்கும் அரைக்கால் அங்குலம் வீதம் இளைத்து வந்திருந்தேனானால் இதற்குள் உடம்பு முழுவதும் தேய்ந்து மறைந்து இப்போது



காற்றுருவமாகயிருந்திருப்பேன். ஆனால், உண்மையில் பத்து வருஷத்துக்கு முன்பிருந்ததைவிட, இப்போது பத்து ராத்தல் அதிக கனமாயிருக்கிறேன்.



நமது நாட்டில் வாழ்வின் பல துறைகளிலும் தற்போது 'பழையன கழிந்து புதியன புகுந்து' வருவது போல், நோய் விசாரணையிலும் பழைய கர்நாடக முறை மெல்ல மெல்ல மறைந்து நவீனமுறை தலையெடுத்து வருகிறது. இப்போதெல்லாம் படித்தவர்களும், நாகரிக முற்றவர்களும் சாதாரணமாய் ஒருவரையொருவர் பார்க்கும் போது "என்ன ஸார்! உங்கள் உடம்பு இப்போது ரொம்ப நன்றாயிருக்கிறதே!'' என்று சுகம் விசாரிப்பது வழக்கம். உடம்பு இளைத்துப் போயிருப்பதாகக் குறிப்பிடுவதே அநாகரிகம். நோயாளி யாரையாவது பார்க்க நேர்ந்தால், அவரைச் சுகமாயிருப்பவராகவே பாவிக்க வேண்டும். அவருக்கு நோய் இருப்பதாக ஒப்புக் கொள்ளக் கூடாது. (நீங்கள் ஒப்புக் கொள்ளாவிட்டால் அவருக்கு நோய் இல்லாமற் போய்விடுமா என்று கேட்காதீர்கள்; கேட்டால் நீங்கள் கர்நாடக மாவீர்கள்.) அவரே தமது வியாதியைப் பற்றிக் குறிப்பிட்டால் கூட, "ரொம்ப நன்றாயிருக்கிறது. உங்களுக்கு வியாதியுமில்லை, ஒன்றுமில்லை. எல்லாம் நீங்களாக நினைத்துக் கொள்வதுதான்" என்று சொல்ல வேண்டும்.

நோயாளி படுத்த படுக்கையாயிருந்தால் அவருடைய நோயை ஒப்புக் கொள்ளாமல் சரிப்படாது. முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்க முடியுமா? இப்படிப்பட்ட 'கேஸ்'களில், நோயாளியிடம், "முன் தடவை பார்த்ததற்கு இப்பொழுது ரொம்பத் தேறியிருக்கிறீர்களே!" என்று சொல்லுதல் மரபு. அத்துடன், "இதென்ன பிரமாதம்? எங்கள் வீட்டுக் கோவிந்தசாமிக்கு இதே நோய்தான் வந்திருந்தது. இன்னும் ரொம்பக் கேவலமாகயிருந்தான். இப்பொழுது சொஸ்தமாகிக் குண்டுபோல் இருக்கிறான்' என்று சொல்லுதல் அழகு.



- கல்கி
கட்டுரைகள்
தொகுப்பிலிருந்து.
மணிவாசகர்
பதிப்பகம்

28. ஸாரதி வாக்கு

'எந்தச் சூழ்நிலையிலும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தவும், அபாயம் சூழும்போது உணர்ச்சிகளைக் கட்டுக்குள் கொண்டு வந்து, புத்தியைக் கொண்டு செய்ய வேண்டுவற்றைத் தீர்மானிப்பவனும் தான் அரசாளத் தகுந்தவன்' என்று அர்த்தசாஸ்திரம் கூறுவது எத்தனை உண்மையென்பதை நிரூபித்துக் கொண்டிருந்தான் துருவன்.

தன் மக்களை நினைத்து இரக்கத்தையும், மகாராணியின் வார்த்தைகளால் சினத்தையும், நந்திவர்மனிடம் நியாயத்தை எதிர்பார்த்த நிலையும் மனத்தில் கொண்டு வாதாடிக் கொண்டிருந்த துருவன், தான் சிறைப்படப் போவதை உணர்ந்ததும் உணர்வுகளை சட்டென்று ஒரு கட்டுக்குள் கொண்டு வந்துவிட்டானென்பதை அவன் முகத்தில் நிலவிய அசாதாரணமான அமைதியும், மெல்லிய முறுவலும் தெரிவித்தன.

"சகோதரி என் நோக்கத்தை அறிந்து முன்னேற்பாட்டுடன் இருந்திருப்பது புரிகிறது" என்றவன் இலேசாக நகைக்கவும் செய்தான். அவன் முகத்தில் அது வரை காணப்பட்ட வேகமும், பார்வையில் தெறித்த ஒளியும் மட்டுப்பட்டு நிதானமும், சகஜ பாவமும் நிலவின.

கோட்டைத் தலைவனுடன் விருந்தினர் மாளிகையை நோக்கி நடந்த போதும் அதே சகஜபாவத்துடனேயே சென்றான் துருவன். மகாராணி ரேவாதேவியின் மாளிகையிலிருந்து அம்பெறியும் தூரத்திலேயே இருந்த அந்த மாளிகை, பார்வைக்குச் சிறியதாகத் தெரிந்தாலும், பருத்த சிற்பத் தூண்களுடனும், பக்கங்களில் தலைநீட்டிய உப்பரிகைகளுடனும், முகப்பில் களிறுகளைக் கொண்டு இடித்தாலும் தாங்கக் கூடிய வலுவான கதவுகளையும் கொண்டிருந்தது. உட்புறத்துச் சுவர்களிலும், தூண்களிலும் அழகிய சிற்பங்களும், சித்திரங்களும் நிறைந்திருந்தன. வெளிப்புறத்தில் நான்கு பக்கங்களிலும் மகாராணியின் வீரர்கள் காவல் நின்றார்கள்.

மாளிகையின் மேன்மாடத்தை வீரர்களுடன் அமர்ந்தபின்பு, வாயிலுக்கு வாயில் காவல் நின்ற வீரர்கள் கதவுகளையும், சாளரங்களையும் சோதித்து விட்டு, வெளியே செல்லக்கூடிய வாயில்களில் நால்வர் காவலுக்கு நின்றனர். உள்ளே நடமாடிக் கொண்டிருந்த பணிப்பெண்களும் வெளியேறி, இரு யவன மங்கையர் மட்டும் நுழைந்தனர். தான் யாருடனும் பேசவோ, தன் வீரர்களுக்குச் செய்தியனுப்பவோ வழியேதுமில்லை என்பது புரிந்தது துருவனுக்கு.

யவன மங்கையர் கொண்டு வந்த கனிவகைகளையும் பாலையும் தொடவும்

மகுட வைரம்

விஷ்வக்ஸேனன்



மறுத்தவனுக்கு அந்த மங்கையரின் உபசரணைகள் வேப்பங்காயாக இருந்தன. ஆனால் அந்த யவன மங்கையர் அவனை விட்டு அரை நாழிகையும் அகல மறுத்தனர். அவன் கடிந்து கூறிய வார்த்தைகளுக்கு பதிலாக கலகலவென்ற நகைப்பே வந்தது அவர்களிடமிருந்து. அவனை திரும்பத் திரும்ப கனிகளையும் பாலையும் அருந்த சைகையால் வேண்டியவர்கள், அவனது மறுப்பையும், பிடிவாதத்தையும் கண்டு, மஞ்சத்தில் படுத்து உறங்குமாறு வேண்டினர். அவன் மஞ்சத்தில் படுத்ததும், அவன் கால்களை மென்மையாக வருடிக் கொடுத்து உறங்க வைக்க முயற்சி செய்தனர்.

சிந்தனையுடன் வேண்டாவெறுப்

புடன் படுத்துக் கிடந்த துருவன், தான் உறங்கிவிட்டதாகத் தெரிந்தால் அந்த யவன மங்கையர் அகன்று விடக் கூடும் என்ற எண்ணத்தில் இரு நாழிகை நேரம் விழிகளை மூடிக் கிடந்தான். மீண்டும் அவன் விழிகளைத் திறந்த போதும் அந்த மங்கையர் இரு பக்கங்களிலும் அமர்ந்திருப்பதையும், அவர்களது கோலத்தையும் கண்டவன் சட்டென்று கால்களை மடக்கிக் கொண்டு மஞ்சத்தில் எழுந்து அமர்ந்தான். அவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

“போதும் உங்கள் உபசரணை. வெளியே சென்று தொலையுங்கள் பிசாசுகளா” என்று இரைந்தான்.

பதிலுக்கு அந்த மங்கையர் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு கலகலவென நகைத்தனர் மீண்டும்.

அவர்கள் நகைப்பொலியைத் தொடர்ந்து, அறையின் வாயிலிருந்து மற்றொரு நகைப்பும் ஒலித்தது பலமாக. தொடர்ந்து “ராஷ்டிர கூட இளவலுக்கு உபசரணைகள் பலமாக நடப்பதாகத் தெரிகிறது” என்றபடியே உள்ளே நுழைந்தான் நந்திவர்மன்.

“மன்னருக்கு என் நிலை வேடிக்கையாக இருக்கிறதா?” துருவனின் கேள்வி எரிச்சலுடன் வந்தது.

மஞ்சத்தின் எதிரிலிருந்த இருக்கையில் அமர்ந்த நந்திவர்மன், யவனமங்கையரை சற்றே விலகியிருக்கும்படி சைகை செய்தான்.

இருக்கையில் திடமாக வந்து அமர்ந்த நந்திவர்மனின் முகத்தில், தான் முதலில் கண்ட அதே மந்தகாசமும், நிதானமும் அப்படியே நிலவிக்கிடப்பதைக் கண்ட துருவன், ‘இத்தனை நிதானத்துடன் கூட ஒரு மனிதன் இருக்க முடியுமா? அதிலும் இத்தனை சிக்கல்களும், போரும் எதிரிலிருக்கும்போது’ என்று வியந்து கொண்டான்.. தான் நந்திவர்மனிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியவை நிறைய இருக்கின்றன என்பதும் புரிந்தது அவனுக்கு.

அடுத்து அவன் சித்தத்தில் தானும் மகாராணியும் விவாதித்துக் கொண்டிருந்தபோது மன்னன் கூறியவை நினைவுக்கு வந்தன.

“மன்னவா, நான் சகோதரியுடன் விவாதித்துக் கொண்டிருந்தபோது என்ன கூறினீர்கள்?” துருவனது குரலில் சற்று நிதானம் தொனித்தது.

“என்ன கூறினேன்?”

“இருவர் பக்கமும் ஆதரவாகப் பேசிப்பேசி கேள்விகள் கேட்டீர்கள்”

“நான்தான் அப்போதே கூறினேனே துருவா. நீங்கள் இருவருமே என் அன்புக்குப் பாத்திரமானவர்கள். ஒருவரை மட்டும் ஆதரிப்பது தவறல்லவா?”

“அதன் பிறகு என்ன கூறினீர்கள்?”

“நீயே சொல் துருவா”

“எங்கள் இருவரது வேண்டுகோளையும் நிறைவேற்றித் தருவது உங்கள் கடமை என்றீர்கள்”

“ஆம். கூறினேன்”

“உங்கள் வாக்கைக் காப்பாற்றுவீர்களா?”

“நந்திவர்மன் இதுவரை வாக்குத் தவறினான் என்ற அபகீர்த்தி கிடையாது துருவா”

‘அப்படியானால் என்னை இந்த மாளிகையிலிருந்து வெளியேற்றி காஞ்சிக்கு வெளியே அனுப்பி விடுங்கள் போதும். எனது வேண்டுகோள் இதுதான். நிறைவேற்றித் தருவீர்களா?”

கருங்கல்லில் உளியால் தட்டுவது போல கடகடவென நகைத்தான் நந்திவர்மன்.

“ஏன் நகைக்கிறீர்கள் மன்னவா?”

“உன்னை காஞ்சியிலிருந்து வெளியேற்ற ஏற்பாடுகள் செய்து ஐந்து தினங்களாகின்றன. நீதான் தாமதமாக வந்தாய்” நந்திவர்மனது பதில் பரம நிதானத்துடன் வந்தது.

துருவன் வாயைப் பிளந்தான்.

“துருவா, நீ வெளியேறுவது இருக்கட்டும். வெளியேறியதும் எங்கு செல்லப்

“கபாலியோட பந்தா தாங்கல சார்...”

“என்னவாம்?”

“அவன் விசாரணைக்கு வர்றப்ப முகத்தை மூடிக்க வசதியா இப்பவே கலர்ஃபுல்லா பொன்னாடை வாங்கி போர்த்தச் சொல்றான். டீவியில எடுப்பா தெரியணுமாம்!”

- அம்பை தேவா



போகிறாய்? ராஷ்டிரகூடத்திற்கா, அல்லது வடமேற்கு எல்லையில் நிறுத்தி வைத்துவிட்டு வந்தாயே, அந்த உன் படைப்பிரிவிற்கா?" அதே நிதானத்துடன் வந்தது நந்திவர்மனது கேள்வி.

துருவனது விழிகள் விரிந்தன.

''வடமேற்கு எல்லையில் நான் படைகளை நிறுத்தியிருப்பதை...''

"அறிவேன்"

"இங்கு வந்ததும் சிறைப்படுவேன் என்பதை..."

"அதையும் அறிவேன். அது மட்டுமல்ல..."

"வேறென்ன மன்னவா?"

"நீ நாடிவந்த உதவியைச் செய்ய என் நண்பன் உதய சந்திரனும் படைகளுடன் சித்தமாகக் காத்திருக்கிறான், போதுமா?"

துருவனின் திகைப்பு அடங்க நீண்ட நேரமாயிற்று.

''மன்னவா, இவற்றை எப்படி தாங்கள்...?"

நந்திவர்மன் மெல்ல நகைத்தான், "துருவா, உன் நிலையை என்னைவிடச் சரியாக வேறு எவரும் புரிந்து கொள்ள முடியாது. ஏன் தெரியுமா?"

"ஏன் மன்னவா?"

"ஏனென்றால் உன் நிலையில்தான் நானும் இருக்கிறேன்"

"விளங்கவில்லை"

"துருவா, ராஷ்டிரகூடத்து மக்களுக்கு கங்கர்களும், மாளவத்து மன்னனும் அன்னியர்கள். அன்னியரிடமிருந்து உன் ராஷ்டிர கூடத்தை மீட்க நீ முயல்கிறாய். அதேபோல் இந்தத் தொண்டை மண்டலமும், மன்னனற்ற சோழ நாடும் ராஷ்டிரகூடர்களிடம் சிக்கித் தவிக்கின்றன. சோழ நாடு மன்னனை இழக்க நான் காரணமாகிவிட்டேன். எனவே இரண்டையும் ராஷ்டிர கூடரிடமிருந்து மீட்க நான் முயல்கிறேன். தமிழகத்து மக்கள் தங்களுடன் ஒன்றிவிடும் எந்த அயல்நாட்டவரையும் ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் அதிகாரத்தையும், ஆதிக்கத்தையும் ஏற்கமாட்டார்கள். மக்களின் எண்ணம்தான் இங்கு மன்னனான என் எண்ணமும். நம் இருவரின் நோக்கமும் அன்னியரை விரட்டுவது தான்" - நந்திவர்மன் நிதானமாக விளக்கினான்.

"நம் எண்ணங்களை நிறைவேற்ற என்ன செய்யப் போகிறீர்கள்?"

"துருவா, ஒரு குடும்பத்துக்காக ஒருவரையும், ஒரு ஊருக்காக ஒரு குடும்பத்தையும், ஒரு நாட்டுக்காக ஒரு ஊரையும் தியாகம் செய்யலாம், பலி கொடுப்பது தவறில்லை என்பது அந்த பார்த்தனுக்கு ஸாரதி அருளிய வாக்கு"

"உண்மைதான்"

"காஞ்சியிலும், சோழநாட்டிலுமாகச் சேர்த்து பன்னிரண்டாயிரம் ராஷ்டிரகூட வீரர்கள் இருக்கிறார்கள். இவர்களை வெளியேற்றினால் தொண்டை மண்டலமும், சோழ நாடும் விடுதலை பெறும். ஆனால் இவர்கள் ராஷ்டிர கூடத்தைச் சென்று சேர்ந்துவிட்டால்..."

''மகாராஜா கோவிந்தரின் கரம் வலுத்துவிடும்"

"ஆம். பிறகு உன் நோக்கம் நிறைவேறுவது கடினமாகிவிடும்"

"இதற்கு என்ன செய்வது மன்னவா? முதலில் இவர்களை எப்படி இங்கிருந்து வெளியேற்றுவது? அத்தனை வீரர்களும் ஒட்டுமொத்தமாக வெளியேற என் சகோதரி எப்படி அனுமதிப்பாள்? அவன்



உத்தரவு இல்லாமல் எப்படி இவர்கள் வெளியேறச் சம்மதிப்பார்கள்?"

"சம்மதிக்கமாட்டார்கள்தான்"

"அப்படி தமிழகத்திலிருந்து இவர்கள் வெளியேறினால் நேராக ராஷ்டிரகூடத்தையல்லவா சென்று அடைவார்கள்? பன்னிரண்டாயிரம் வீரர்களைத் தடுத்து நிறுத்துமளவுக்கு என்னிடம் படைபலம் இல்லை மன்னவா. அப்படி இவர்களைத் தடுத்து நிறுத்த நான் முயன்றால், என் வீரர்களில் பாதிப்பேரையாவது நான் இழக்க நேரிடும். பிறகு ராஷ்டிரகூடத்தில் மகாராஜா கோவிந்தரையும் கங்க, மாளவ வீரர்களையும் எதிர்க்க எனக்குச் சக்தி இருக்காதே" - துருவன் முகத்தில் துடிப்பு தெரிந்தது.

நந்திவர்மன் முகத்தில் முறுவல் விரிந்தது. "துருவா, அதனால்தான் முன்னதாக நான் கூறினேன், ஒரு நாட்டுக்காக ஓர் ஊரையே பலி கொடுப்பதில் தவறில்லையென்று"

"விளங்கவில்லை மன்னவா"


"இவர்களை, இந்தக் காஞ்சி மண்டலத்திலிருந்தும், சோழ மண்ணிலிருந்தும் மகாராணியின் உத்தரவோடு வெளியேற்றப் போகிறேன். வெளியேறியவர்கள் ராஷ்டிரகூடத்தை அடையுமுன்பு, வழியிலேயே பலி கொடுக்கவும் போகிறேன்."

துருவன் முகத்தில் திகைப்பு பரவியது... "எப்படி?"

நந்திவர்மன் முகத்தில் அதே நிதானமும், முறுவலும் படர தன் திட்டத்தை மெல்ல விவரித்தான். அவன் விவரிக்க, விவரிக்க, துருவனின் திகைப்பு உயர்ந்து கொண்டே போனது.

(தொடரும்)

நடக்குமென்பார்; நடக்கும்!



விருச்சிக ராசிக்காரரான **டாக்டர் கமல்ஹாசனுக்கு** உற்சாகமான வாரம்!

மேஷம் : சகலத்துக்கும் உயிர் கொடுக்கிற சஞ்சீவி மருந்துங்க உங்க தெய்வ பலமும், தெய்வீக ஈடுபாடும். அதனால, சகல விதத்திலயும் முன்னேற்றமான மாற்றங்கள் கிடைச்சு சந்தோஷப்படுத்தும். சிறு மனக் கஷ்டங்களும் நடுவில இருந்தாலும் முக்கியஸ்தர்கள், நண்பர்கள் ஆதரவு கை கொடுக்கும். எதிர்பாராத சந்திப்பு சிலது ஏற்படும். ஆபீஸ்லயும் எதிர்ப்புகள் மறைஞ்சு உற்சாக மனநிலை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில கொடுக்கல் வாங்கல் லாபகரமா நடக்கும். குடும்பத்தில சுபகாரியம் ஈடேறுவதால மகிழ்ச்சி நிலவும். உறவுகள், உடன்பிறந்தவர் ஆதரவு கூடும்.

ரிஷபம் : தேனுக்கு மிஞ்சின மருந்துமில்ல, வேலுக்கு மிஞ்சின சக்தியுமில்லன்னு பெரியவங்க சொல்றபடி, உங்க துணிவும் தன்னம்பிக்கையும் சகல எதிர்ப்புகளுக்கும் மருந்தா இருந்து பிரச்னைகளைத் தீர்த்து வைக்கும். பண நடமாட்டமும், வி.ஐ.பிக்கள் ஆதரவும் உங்களுக்கு டானிக்கா இருக்கும். தொழில் வியாபாரத்திலயும், ஆபீஸ்லயும் இதுவரை ஜலதோஷமா இருந்து தொல்லை கொடுத்த பிரச்னைகள் மறைஞ்சு, நிம்மதி கிடைக்கும். குழப்பங்கள் தீர்ந்து தெளிவு பிறக்கும். குடும்பத்தில ஒற்றுமை அதிகரிக்கும். இதுவரை இருந்த பணக் கஷ்டம் தீர்ந்து, தாராளமான பண நடமாட்டம் ஏற்படும்.

மிதுனம் : ஆலும் வேலும் பல்லுக்கு, நாலும் ரெண்டும் சொல்லுக்குங்கற மாதிரி கல்வி, கேள்விதான் வாழ்க்கைக்குன்னு இருக்கிறவங்களுக்கு ஏற்றமான காலம். சாதனைகள் படைக்கிற நேரம். வி.ஐ.பிக்கள் ஆதரவு வைட்டமினா இருக்கும். ஆபீஸ்ல நிம்மதியான சூழலும், மற்றவர்கள் ஆதரவும் கூடி, அனுகூலமான நேரம் நிலவும். சுய தொழில், வியாபாரம்னு இருக்கிறவங்களுக்கு எதிர்பார்த்த உதவிகள் சமய சஞ்சீவியா வந்து கை கொடுத்துக் காப்பாத்தும். வெளிநாட்டுத் தொடர்பும் வியாபாரமும் அளவோடு நன்மை தரும். குடும்பத்தில தேவைக்கேற்ற பணவசதி கிடைக்கும். உறவினர், நண்பர்கள் உதவுவார்கள். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை, ஆரோக்கிய மேன்மை ஏற்படும்.

கடகம் : சுக்கு, மிளகு, திப்பிலி சேர்ந்தா தீராத வியாதியெல்லாம் தீர்ந்து போகும்ங்கற மாதிரி, தெய்வீக ஈடுபாடு, பெரியோர் ஆசி, நண்பர் உதவி எல்லாம் சேர்ந்தா எந்தப் பிரச்னையும் தீர்ந்து போகும். எதிரிகள் ஓடிப் போயிடுவாங்க. சிறு தடைகள், பிரச்னைகள்னு வந்தாலும் எல்லாம் சாதாரணத் தலைவலிதான், சரியாயிடும். ஆபீஸ்ல உங்க உழைப்புக்கேற்ற பலன்கள் நிச்சயம் கிடைக்கும். சிலருக்கு இடமாற்றம், பதவி உயர்வு ஏற்படும். தொழில் வியாபாரத்தில திருப்தியும், பொருளாதார முன்னேற்றமும் ஏற்படும்.

பிப்ரவரி 2 முதல் 8 வரை

அக்னிசர்மா பக்கம்





பரிகாரம்

தொலைந்து போன பொக்கிஷம், அது கௌரவம், அந்தஸ்து வகையறாவானாலும் சரி, பொன், பொருள் என்றிருந்தாலும் சரி, மீட்க வழி தெரியாமல் தவிப்பவர்களுக்கு சாந்தி தரச் சித்தமாகக் காத்திருக்கிறார் 'கள்ள பிரான்' என்ற பட்டப் பெயர் கொண்ட ஸ்ரீவைகுண்ட நாதன். அதுமட்டுமல்ல, பிடிவாதக்காரர்களுக்கும் மற்றவர்களின் நல்ல புத்திமதிகளை ஏற்க மறுப்பவர்களுக்கும் சிந்தனையில் மாற்றம் ஏற்படுத்த வல்லவர் இவர். இந்த இரண்டு குறைகளுக்கும் பரிகாரம் காண நவ கைலாசத்திலும் நவ திருப்பதியிலும் ஒன்றாய் இருக்கும் ஸ்ரீவைகுண்டத்துக்கு வாருங்கள். நெல்லையிலிருந்து 29 கி.மீ தூரத்திலிருக்கிறார் இந்த 'பளிங்கு நீர் முகிலன்' ஸ்ரீவைகுண்ட நாதன்.

- வி

குடும்பத்தில நிம்மதியான சூழ்நிலையும், சுபகாரியங்கள் கைகூடுவதும் மகிழ்ச்சி தரும். உடன் பிறந்தவர்களால் சில அனுகூலங்கள் ஏற்படும்.

சிம்மம் : விருந்தும் சரி, மருந்தும் சரி அளவோடு இருக்கிறதுதாங்க ஆரோக்கியத்துக்கு நல்லது. அளவோடு எதிலேயும் ஈடுபடறது உங்களுக்கு நல்லது. இட்ட மிட்ட காரியங்கள்ல வெற்றி கிடைக்கும். வி.ஐ.பி.க்கள் ஆதரவு கூடும். ஆபீஸ்ல எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்து அனுகூலமான திருப்பம் ஏற்படும். இதுவரை இருந்த குழப்பம் மறையும். சுய தொழில், வியாபாரத்தில முன்னேற்றமும், தன லாபமும் ஏற்படும். நின்னு போன பாக்கியெல்லாம் கிடைக்கும். குடும்பத்தில குதூகலம் நிறையும். திருமணமாகாதவர்களுக்கு சுபவேளை கூடி வந்திடும். புதிய சொத்து சேர்க்கை ஏற்படும். பெண்களுக்கு மக்களால் மகிழ்ச்சி ஏற்படும். பொன் பொருள் சேர்க்கையும் ஆரோக்கிய மேன்மையும் கிட்டும்.

கன்னி : வேர்த்துக் கொட்டி விலகிப் போற ஜுரம் மாதிரி, உங்க குழப்பம், பிரச்னைகள் எல்லாம் விலகி தெளிவு பிறக்கிற நேரம்ங்க இது. உங்க திறமையும் அறிவாற்றலும் சகல காரியங்கள்லேயும் கை கொடுத்து வெற்றி தேடித்தரும். தெய்வ பலம் கூடும். ஆபீஸ்ல சிலருக்குப் பதவி உயர்வும், இடமாற்றமும் ஏற்படலாம். புதிய முயற்சிகள் அளவோடு வெற்றி தரும். சுய தொழில் வியாபாரத்தில பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டு, மனதில சந்தோஷம் கூடும். கூட்டுத் தொழில் லாபம் காணும். குடும்பத்தில இதுவரை இருந்த கருத்து வேறுபாடுகள் மறைஞ்சு ஒற்றுமை கூடும். பொருளாதார நெருக்கடி மறையும்.

துலாம் : ஸ்பெஷலிஸ்டான டாக்டர்கிட்ட போனா கொஞ்சம் ஸ்பெஷலாத் தாங்க செலவு பண்ணணும். அதேமாதிரி ஸ்பெஷலான காரியங்கள் கொஞ்சம் கூடுதல் செலவுதான் வைக்கும். எல்லாம் சுபச் செலவுதான். அதனால சந்தோஷமா பண்ணுங்க. அதுக்கேத்த பண வசதி கிடைக்கும். ஆபீஸ்ல புதுத் திருப்பங்கள் உங்களை உற்சாகப்படுத்தும். வெளியூர்/வெளிநாட்டுப் பயணங்கள் சிலருக்கு நேரிடும். தொழில் வியாபாரத்தில புதிய முயற்சிகள் சிலருக்கு கைகூடும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில பணக்கஷ்டம் குறைஞ்சு நிம்மதி கிடைக்கும். பெண்களுக்கு உடன் பிறந்தவர்களால் நன்மை கிடைக்கும்.



விருச்சிகம் : காயகல்பம் சாப்பிட்டவங்க இளமையாவே இருப்பாங்களாம். உங்க உற்சாகமும் தெம்பும் இந்த வாரம் பூராவும் இளமையாவே இருக்கும். தாராளமான பணவசதியும், விஐபிக்கள் ஆதரவும் உங்களுக்கு வைட்டமின் மாத்திரைகளா இன்னும் தெம்பூட்டும். ஆபீஸ்ல எதிர்ப்புகள் மறைஞ்சு சுமுகமான சூழ்நிலை ஏற்படும். சிலருக்கு இடமாற்றம் ஏற்படும். சுயதொழில், வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கல் கைகொடுக்கும். கவனமா கையாண்டா எல்லாம் லாபகரமா நடக்கும். குடும்பத்தில குழப்பம், விரோதம் மறைஞ்சு ஒற்றுமை கூடும். பெண்களுக்கு சாதகமான வாரம்.

தனுசு : கடப்பாரைய முழுங்கிட்டு சுக்குக் கஷாயம் குடிக்கிற ஆளுங்க நீங்க. சின்னச் சின்னப் பிரச்னை எல்லாம் உங்களுக்கு இருமல் தும்மல் மாதிரி. சகலத்திலயும் ஜெயிச்சுக் காட்டுவீங்க. உங்க அறிவாற்றலும் பேச்சாற்றலும் வெற்றிக் கொடி நாட்டும். ஆபீஸ்லயும் எல்லாம் அனுகூலம்தான். இருந்தாலும் தொழில் வியாபாரத்தில் கொஞ்சம் செலவினங்கள் காத்திருக்கு. சிக்கனமும் நிதானமும் அவசியம். குடும்பத்தில சுபமங்கள முயற்சிகள்ல அனுகூலமான முன்னேற்றம் ஏற்படும். பிரிந்தவர் மீண்டும் ஒன்று சேருவார்கள்.

மகரம் : 'பித்தம் தெளிய மருந்தொன்றிருக்குது'ன்னு பெரியவங்க பாடினாங்களே, அந்த தெய்வத்தை கெட்டியா நம்பிக்கையோட பிடிச்சிக்கிட்டிருந்தீங்கன்னா போதும். எந்தக் காரியத்திலேயும் திட்டம் போட்டபடி வெற்றி காணலாம். பிரபு, தனவான்கள் ஆதரவு கூடி பக்கபலமா நிக்கும். யாருக்கும் சரியா செய்யத் தெரியாத தங்க பஸ்பம் மாதிரி, ஆபீஸ்ல ஒரு அதிர்ஷ்டம் உங்களுக்காகக் காத்திருக்கு. சரியா பயன்படுத்திக்கோங்க. தொழில் வியாபாரத்தில பழைய கடன்கள் தீர்ந்து புதுத் தெம்பு பிறக்கும். கூட்டுத் தொழில்ல இருக்கிறவங்களுக்கு லாபம் கூடும். குடும்பத்தில சுதாகலம் நிறைஞ்சு சுபகாரியங்கள் ஈடேறும். பெண்களுக்கு மக்களால் மகிழ்ச்சி கிட்டும்.

கும்பம் : எத்தனை மருந்து மாத்திரை சாப்பிட்டாலும் தீராத தலைவலி, சாதாரண சுக்குப்பத்தில காணாமப் போற மாதிரி, உங்க நெடுநாளைய பிரச்னைகள் பட்டுன்னு தீர்ந்து போகிற நேரம்ங்க இது. தேவைக்கேற்ப பணவசதி கிடைச்சு நிம்மதி தரும். குழந்தைகள் ஆரோக்கியத்தைக் கொஞ்சம் கவனமா பாத்துக்கோங்க. ஆபீஸ்ல திருப்பத்துக்குத் திருப்பம் முன்னேற்றம் தெரியும். நிர்வாகத் துறையில் இருக்கிறவங்களுக்கு ஏற்றமான நேரம். தொழில், வியாபாரம் முன்னேற்றம் காணும். குடும்பத்தில அமைதி நிலவும். பெண்களுக்கு மகிழ்ச்சியான வாரம்.

மீனம் : 'இளசும் மருந்து, முத்தலும் மருந்து'ன்னு சுக்கு பட்டம் வாங்கின மாதிரி, உங்க திறமையும் அறிவும் எந்தக் காரியத்திலேயும் வெற்றிப் பட்டம் தேடித் தரும். நிர்வாகத் திறன் அந்தத் துறையில இருக்கிறவங்களுக்கு அதிகரிக்கும். பணநடமாட்டம் தாராளமா இருக்கும். ஆபீஸ்ல இது சிறப்பான வாரம். உங்க காரியங்களுக்கு எல்லோரும் ஒத்துழைப்பாங்க. விரும்பின பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கும். தொழில், வியாபாரம் நல்ல முன்னேற்றம் காணும்னாலும், எதிலேயும் அகலக்கால் வைக்காம இருங்க. குடும்பத்தில இதுவரை இருந்த குழப்பத் தலைவலி தீரும். ஒற்றுமை பலப்படும். ●

இது நல்ல வாரம்

கிழமை	தேதி	நட்சத்திரம்	திதி	மற்றவை
புதன்	தை 20 பிப்.2	சுவாதி	அஷ்டமி	திருச்சேறை விடையாற்றி, தெப்போத்ஸவம்
வியாழன்	தை 21 பிப்.3	விசாகம்	நவமி	-
வெள்ளி	தை 22 பிப்.4	அனுஷம் கேட்டை	தசமி	வைத்தீஸ்வரன் தேர்
சனி	தை 23 பிப்.5	மூலம்	ஏகாதசி	கள்ளழகர் உற்சவம் திருவள்ளூர் வீரராகவர் கருடசேவை
ஞாயிறு	தை 24 பிப்.6	பூராடம்	துவாதசி	சூரியனார் கோயில் உற்சவம்
திங்கள்	தை 25 பிப்.7	உத்திராடம்	திரயோதசி	-
செவ்வாய்	தை 26 பிப்.8	திருவோணம்	சதுர்த்தசி அமாவாசை	தை அமாவாசை நெல்லையப்பர் லக்ஷதீபம்



சரோஜாதேவியா? சாவித்திரியா? சௌகாரா?

எப்போதுமே சினிமாவை நான் ஈடுபட்டுள்ள பிஸினஸ் என்று கருதுகிறவன். என்னை 'சினிமாக்காரன்' என்று அடையாளம் சொல்லிக் கொள்ள பெரும்பாலும் விரும்பாதவன். ஏராளமான திரைப்பட நடிகர்கள், நடிகையர், இயக்குனர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோரோடு பழகிக் கொண்டு வந்தாலும், நான் யாரையும் என் வீட்டுக்கு அழைப்பது கிடையாது. அதேபோல ஆர்ட்டிஸ்ட்கள் வீடுகளுக்கும் போகும் வழக்கம் இல்லை.

ஆனாலும் என்னுடன் நெருங்கிப் பழகி, எப்போது வேண்டுமானாலும் என் வீட்டுக்கு வந்து என்னுடன் பேசியிருந்து விட்டு, சாப்பிட்டு விட்டுப் போகும் உரிமையை எடுத்துக் கொண்ட இரண்டு இனிய கலைஞர்கள் உண்டு. ஒருவர் எஸ்.ஏ.அசோகன், இன்னொருவர் எஸ்.வி. சுப்பையா.

அசோகன் ஒரு குழந்தை மாதிரி. கள்ளம் கபடம் தெரியாதவர். என்னிடம் மனம் விட்டு பர்ஸனலாகப் பேசுவார். பிரச்னைகள் என்றால் என் யோசனையையும், அறிவுரையையும் தவறாமல் கேட்பார்.

அடிக்கடி யாரையாவது அழைத்துக் கொண்டு வந்து, என்னிடம் அறிமுகப்படுத்தி வைப்பது அசோகனின் வழக்கம். அப்படி என்னிடம் அவர் அறிமுகப்படுத்தி வைத்தவர்களில் ஏ.ஸி. திரிலோகசந்தர் குறிப்பிடத்தக்கவர்.

"இவர் நிறைய கதைகள் வச்சிருக்கார். ரொம்ப அழகாகச் சொல்வார். நீங்க ஒரு நாள் கேக்கணும்" என்றார். சரியென்று ஒரு நாள் கதை கேட்டேன்.

நான், அசோகன், திருலோகசந்தர் மூவரும் என் அறையில்.

திருலோக் கதை சொல்லத் தொடங்கினார். பாதியில்

அந்த நாள் ஞாபகம் - 14

திரையுலக நினைவுகள்

திடீரென ஏதோ நினைத்துக் கொண்டவர் போல, அசோகன் திருலோக்கைப் பார்த்து "ஏண்ணே... நீங்க அந்த ஸ்வோர்ட் ஃபைட் கதையைச் சொல்ல லியா?" என்று கேட்டார். அதற்குள் நான் ஒரு நான் கைந்து பென்சில்களைச் சீவி முடித்து விட்டேன். திரு லோக்சந்தர் ரொம்பவும் நொந்துவிட்டார். "அவரு என் னன்னா ஸ்வோர்ட் ஃபைட் கதை சொல்லலியானு திடீர்னு கேக்கறார். நீங்க என்னன்னா பென்சில் சீவிக் கிட்டு இருக்கீங்க. யாரும் கதை கேக்கற மாதிரி தெரி யல்லியே..." என்று வருத்தப்பட்டார்.

"நான் உங்க முகத்தைப் பார்த்துகிட்டு இல்லியே தவிர, கதையை நீங்க சொன்னவரைக்கும் கவன மாகவே கேட்டேன். நான் வேணும்னா சொல்றேன், கேளுங்க" என்று அவர் சொன்ன கதையை அப்படியே ரீப்பீட் செய்தேன். அதன் பின்னர்தான் அவர் சமாதானமாகிக் கதையைத் தொடர்ந்தார்.

'அவள் அளித்த வாழ்வு' என்ற அந்தக் கதை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

அப்பச்சியிடம் சொன்னேன்.

"அப்படியா?" என்று கேட்டுவிட்டு ரொம்பக் கேஷுவலாக அந்தக் கதை ஃபைலை வாங்கித் தன் பக்கத்தில் வைத்துக் கொண்டார்.



சில நாட்கள் கழித்து எங்கள் தொழில் நண்பர் பசவராஜ் என் தந்தையைச் சந் திக்க வந்தார்.

எங்களுடன் பங்குதாரராகச் சேர்ந்து 'பேடர் கண் ணப்பா' படம் எடுத் தவர் பசவராஜ். இங்கே ஓர் உண்மை யைச் சொல்லியாக வேண்டும். பார்ட்னர் ஷிப் படமாக இருந் தாலும், எங்கள் ஏவி.எம். பேனரில் தான் அந்தக் கன்னடப் படம் வெளியானது. நடிகர் ராஜ்குமார் கன்னடத் திரையுலகுக்கு அறிமுகமானது அந்தப் படத்தில்தான். கன்னடத் திரையுலகின் மாபெரும் நடிகராக இன்றும் மதிக்கப்படுகின்ற ராஜ்குமார், எங்கள் படத்தில்தான் அறிமுகமானார் என்பது எங்களுக்குப் பெருமை.

பின்னர் அவர் வெற்றிப் படிக்கட்டுகளில் வேகமாக ஏறி, பெரிய நடிகரானதும் பெங்களூரில் வீடு வாங்க

விரும்பினார். என் தந்தைக்கு அப்போது பெங்களூரில் பேலஸ் அப்பர் ஆர்ச்சட் பகுதியில் ஒரு வீடு இருந்தது. அதை விற்க விரும்பிய அப்பச்சி, அதன் விலையை பதி னான்கு லட்ச ரூபாயாக நிர்ணயித்தார். அருமையான வீடு அது. கார் நேராக மேலேயே போய் நிற்கும் வகையில், கலை யழகோடு கட்டப்பட்டிருந்தது. அதை வாங்க பலர் ஆசைப்பட்டார்கள். பன்னி ரண்டு லட்சம் ரூபாய் வரை கேட்டும், அதை பதினான்குக்குக் குறைந்து யாருக் கும் தர அப்பச்சி விரும்பவில்லை.

ராஜ்குமாருக்கு அந்த வீடு ரொம்பவும் பிடித்துப் போய்விட்டது.

"என்னால் பதினொரு லட்சம் ரூபாய் தான் தர முடியும். இதை நீங்கள் எனக்குத் தந்தேயாக வேண்டும். எனக்கு முதல் படம் உங்களிடமிருந்து கிடைத்தது. அதைப் போலவே எனக்கு முதல் சொத்தும் உங்களிடமிருந்தே கிடைக்க வேண்டும் என்று ஆசைப்



* எஸ்.ஏ.அசோகன், ஏ.ஸி.திரிலோக்சந்தர்

படுகிறேன்" என்று அவர் கேட்டதும், அப்பச்சி மறுப்பேதும் சொல்லா மல் பதினொரு லட்சம் ரூபாய்க்கு அந்த வீட்டை விற்று விட் டார்.

"பரவாயில்லப்பா... ரொம்ப சென்ட்டிமென்ட்டா அதை ராஜ்குமார் கேக்கறார்" என்று எங்களுக்கு விளக்கமும் தந்தார்.

'பேடர் கண்ணப்பா' எடுத்த பசவராஜ் இன்னொரு படம் எடுக்க விரும்பி அப் பச்சியைச் சந்தித்தபோது, எந்தக் கதை என்பது பற்றி பேச்சு வந்தது. அப்போது திரிலோகசந்தர் தந்திருந்த 'அவள் அளித்த வாழ்வு' கதையைப் பற்றிச் சொல்லி, அந்த ஃபைலை அப்பச்சி பசவராஜிடம் கொடுத்தனுப்பியிருக்கிறார். பீம்சிங்குக் கும், பசவராஜுக்கும் அந்தக் கதை மிகவும் பிடித்து விட்டது.

பசவராஜ் என்னிடம் பேசிக் கொண் டிருந்தபோது, "நான் அப்பச்சியைப் போய்ப் பார்த்தேன். 'இந்தக் கதை நல்லாயிருக்குன்னு கேள்விப் பட்டேன். படிச்சுப் பாருங்க'ன்னு ஒரு ஃபைலைக் கொடுத்தார். ரொம்ப அருமையான கதை. பேர் கூட 'அவள்'னு ஆரம்பிக்கும்" என்றார்.

"அவள் அளித்த வாழ்வா?" என்று கேட்டேன்.

"ஆமாம்... அதேதான்."

"ஐயையோ... அந்தக் கதையை நாங்க சொந்தமா எடுக்கணும்னு இருக்கோம்" என்று சொல்லிவிட்டு, அப்பச்சியிடம் போய் உரிமையுடன் சண்டை போட்டேன்.

"அந்தக் கதையை நாம எடுக்கப் போறோம் அப்பச்சி."

"இருக்கட்டும்பா. அவங்களுக்கு ரொம்பப் பிடிச்சுருக்கு. சேர்ந்துதான் எடுப்பமே. நீ விட்டுக் கொடப்பா."

என்னால் அதற்கு மேல் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஆனாலும்



* பசவராஜ், பீம்சிங்குடன் அப்பச்சி

ஒரு கண்டிஷன் போட்டேன். என் தந்தை எப்போதுமே தன்னுடன் சேர்ந்து படம் எடுக்கும் பார்ட்னர்ஸ் கேட்டால் விட்டுக்

கொடுத்து விடுவார். பார்ட்னர்ஷிப்பில் எடுத்தாலும், அவர்கள் பேனரில்தான் வரும். 'பராசக்தி' என்றால் நேஷனல் பிக்சர்ஸ், 'குலதெய்வம்' என்றால் எஸ்.கே. பிக்சர்ஸ், 'சகோதரி' என்றால் கர்நாடகா ஃபிலிம்ஸ் என்று வரும். ஆனால் அப்பச்சிதான் முழுக்க முழுக்க தம்மை இன்வால்வ் செய்து கொண்டு எல்லாவற்றையும் செய்திருப்பார்.

"சரி... நான் விட்டுக் கொடுக்கறேன். ஆனா இந்தப் படம் ஏவி.எம். பேனர்லதான் வரணும்" என்றேன்.

ஒப்புக் கொண்டார்கள்.

அதுதான் பீம்சிங் டைரக்ஷனில் வெளியான 'பார்த்தால் பசி தீரும்.'



* 'பேடர் கண்ணப்பா' ராஜ்குமார் பண்டரிபாய்

உண்மையில் ஏ.ஸி திரிலோக்சந்தரை டைரக்டராக வைத்துதான் நாங்கள் எடுப்பதாய் இருந்தது. ஆனால் பார்ட்னர் விருப்பப்படி பீம்சிங் டைரக்ட் செய்தார்.

பெரிய நட்சத்திரப் பட்டாளமே நடித்த படம் அது. நடிகர் திலகம் சிவாஜி, ஜெமினி கணேசன், சாவித்திரி, சௌகார் ஜானகி, சரோஜா தேவி என்று அன்றைய முன்னணிக் கலைஞர்கள் இடம் பெற்றிருந்தார்கள். படம் முடிந்து டைட்டில் கார்டு போடும்போது, யார் பெயரை முதலில் போடுவது என்று பிரச்னை. 'என் பேர்தானே ஸார் முதல்ல வரும்?' என்று கேட்பார் சரோஜா தேவி.

"நான்தான் ஸார் சீனியர். என் பேர்தான் சரோஜா தேவிக்கு முன்னே வரணும்" என்பார் சாவித்திரி.

எல்லோருக்கும் சீனியர் நடிகை சௌகார் ஜானகி.

"எல்லோருக்கும் திருப்தியா இருக்கிறபடி நான் டைட்டில் போடறேன். கவலைப்படாதீங்க" என்றார் பீம்சிங்.

'என்ன செய்யப் போகிறார்... எப்படி இந்தப் பிரச்னையை சமாளிக்கப் போகிறார்?' என்று எனக்குக் கூட ஆர்வமாக இருந்தது.

கடைசியில் இயக்குனர் பீம்சிங் ஓர் அருமையான ஐடியா செய்தார். 'உங்கள் அபிமான நட்சத்திரங்கள் நடிக்கும்' என்று போட்டு, கீழே எல்லோரின் புகைப்படங்களையும் ஒட்டி விட்டார்.

"பார்த்தால் பசி தீரும்' படத்தைப் பொறுத்தவரை, எனக்கு ஒரு சிறிய மனக்குறை இருந்தது.

திருலோக்சந்தர் மிக அருமையாக திரைக்கதை எழுதியிருந்தார். ஆனால் அந்தக் கதையைப் படமாக்கியபோது சில மாற்றங்கள் செய்யப்பட்டன. அந்த மாற்றங்கள் சரியாக இல்லை. இப்போதே எனக்கு அவை பிடிக்கவுமில்லை. ஆனாலும் நான் தலையிடவில்லை. அந்த மாற்றங்களால்தான் படம் சரியாக அமையவில்லை என்பது என் கருத்து.

மிகப் பெரிய வெற்றிப்படம் என்று சொல்ல முடியாவிட்டாலும், அந்தப் படம் ஓரளவுக்கு ஓடியது.

அடுத்ததாக நாங்கள் எடுத்தது ஒரு ஸ்டண்ட் பிக்சர்! அது எனக்கு தனிப்பட்ட முறையில் சிறந்த பரிசு ஒன்றையும் தந்தது.

(தொடரும்)

நீராடல்

சங்கர் பாபு

ஈரக்காலடிகள் புழங்குகிற ஊர்.

சக்தியின் கையில் சோப்பும், கழுத்தைச் சுற்றி துண்டும் இருந்தன. இளங்கோ வழியில் நின்றிருந்த டூ-வீலரின் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்து, தலை முடியைச் சரிசெய்து கொண்டான். "பேசாம நீயும் ரூம்லயே குளிச்சிருக்கலாம். ரெண்டு குடம் நிறைய தண்ணி இருந்தது..." என்றான்.


சக்தி பதில் சொல்லாமல் சோப்பை முகர்ந்தவாறு வேகமாக நடந்தான். ஒரு குடும்பம் குளித்துவிட்டு, டி.வி.எஸ். பிஃப்டியில் சென்றது. வண்டியின் முன்னால் சிறுமி ஒருத்தி ஈரம் உலர்ந்து வரும் பெட்டிக்கோட்டுடன் நின்றிருந்தாள். பின்னால் அவளது அம்மா தோளில் ஈரத்துணிகளைப் போட்டிருந்தாள். கையில் ஈரத்துணிகள் நிரம்பிய பக்கெட். பெண்கள் இருவரும் பறக்கிற கூந்தலை உடையவர்களாய் இருந்தார்கள். வண்டியைச் செலுத்தியவன் தன் மகளின் நீச்சல் திறனை மனைவியிடம் விளக்கிக் கொண்டிருந்தான். தினமும் இதேபோல் வாகனம் நீர்நிலைக்குச் சென்று திரும்பும்போதும் என்று எண்ணிய கணம், அந்தக் குடும்பம் சக்தியின் பொறாமைக்கு இலக்கானது.

தெப்பக்குளத்தை நெருங்கியதற்கான அறிகுறிகள் தாராளமாகக் காணக் கிடைத்தன.

எண்ணெய் பூசிய தேகத்தினர், அழுக்கு ஆடைகளுடன் நடந்தோ, சைக்கிளிலோ விரையும் இளைஞர்கள், மஞ்சள் முகத்துடன் எதிர்ப்படும் பெண்கள், மீண்டும் அழுக்காகும் உத்தேசமுடன் ஓடும் சிறார்கள்... எல்லோரும் குளிப்பதற்காகவே பிறந்தவர்கள் போல் தோன்றினர்.

கண்ணெதிரே இருந்தது சதுர வடிவ சமுத்திரம். நீர் ஆடை அணிந்திருந்த உற்சாகத்திலும், இன்னும் எத்தனை பேரை வேண்டுமானாலும் நீராட்ட முடியும் என்ற திமிரிலும் ததும்பியது. காற்றின் செல்லத் தட்டில் அலையாய்ச் சிணுங்கியது. நடுவில் மண்டபம். சுற்றிலும் ஓட்டு வீடுகள் மற்றும் நவீன வீடுகள். நான்கு திசைகளிலும் ஆடவர், மகளிருக்கான தனித்தனிப் படித்துறைகள்.

தெப்பக்குளத்தைக் கண்களால் பருகிய களைப்பில் சக்தி கண்களை மூடித் திறந்தான். தெப்பக்குளம் சார்ந்த எல்லா நினைவுகளும், எப்போதும் தன்னுள் இருக்கிற மாதிரி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். இப்போது கோபுர நிழலைச் சுமக்கும் நீர்ப்பகுதியைப் பார்த்தான். ஏதோ ஒரு பறவை தாழப் பறந்து சிறு கொலை புரிந்து சென்றது. இரண்டு ஆடுகள் கரையோர மண்டபத்தில் ஏறி வேடிக்கை பார்த்தன. சக்தி அவற்றின் ஐந்தறிவு குறித்து பதறியபோது, அவை "நான் பார்க்



காத குளமா" என்றொரு பார்வை பார்த்து ஓய்வெடுக்கத் துவங்கின.

இதற்காகத்தான்... இந்த அனுபவத்திற்காகத்தான்... சென்னையிலிருந்து கிராமத்துக்கு வந்திருப்பது. இந்த தரிசனத்துக்குத்தான்.

கல்யாண அழைப்பிதழ் கொடுத்த பாஸ்கர் பக்கத்து ரூமில் இருப்பவன். சென்னையிலிருந்து பயணம், பஸ் செலவு, கம்பெனியில் லீவ் என்று பல பிரச்னைகள் முதலில் இருந்தன. ஆனால் பாஸ்கர் "எங்க ஊர்ல அருமையான தெப்பக்குளம் இருக்குடா..." என்று சொன்ன நொடியில், எல்லாம் சமாளிக்கக் கூடிய பிரச்னைகளாய் மாறிவிட்டன.

வந்தது வீண் போகவில்லை.

சந்தோஷமாய் அந்தச் சூழலை உள்வாங்கினான் சக்தி. தன்னை அங்கேயே பிறந்து, வளர்ந்தவனாய் எண்ணிக் கொண்டான். கரையோர மண்டபத்தின் மேல் ஏறி நீருக்குள் குதிக்கும் சிறுவனும், எங்கிருந்தோ ஓடி வந்து நீருக்குள் மூழ்கும் சிறுமியும் உலகிலேயே சந்தோஷமானவர்களாய்த் தோன்றினார்கள். மகனுக்கு நீச்சல் சொல்லிக் கொடுக்கும் தந்தை "வேண்டாம்ப்பா.. வுட்ருப்பா..." என்ற அலறல், இரும்புச் சங்கிலியைப் பிடித்தவாறு முழுகும் பெரியவர், படிக்கட்டில் நின்று மார்பளவு தண்ணீர் கொண்டு தலையைச் சுத்தம் செய்யும் இளைஞன், கரையோரப் படிக்கட்டில் அமர்ந்து. 'சென்னைக்கு இண்டர்வ்யூ போனியே... என்னாச்சு?" என்று விசாரித்தவாறு துணிக்கு சோப்புப் போடும் இளைஞன், நீந்தி நடுமண்டபத்தை அடையும் சிறுவர் கூட்டம், எதிர்க்கரையில் நீராடும் பெண்கள், பல்லால் சேலையைப் பற்றி உடை களையும், மாற்றும் பெண்கள்... காற்றில் பரவும் ஷாம்பூ, சோப்பு,

எண்ணெய் வாசனைகள்....

சக்தி சோப்பை படிக்கட்டில் வைத்தான். பரவச அனுபவத்துக்குத் தயாரானான். தெப்பக் குளத்தை அடைந்தவுடன் என்னென்ன செய்ய வேண்டும் என்று, வரும்போதே திட்டம் தீட்டியிருந்தான். அதன்படி முதலில் நீரில் மூழ்கிக் கிடக்கும் படிக்கட்டில் காலை வைத்தான். குளிரை உணர்ந்தான்.

இந்த இளங்கோ நீச்சல் தெரியாது என்று நினைத்துக் கொண்டிருக்கிறான். அவனுக்கு ஆச்சரியமும், பயமும், கோபமும் ஏற்படுத்தும் விதத்தில், தவறி விழுவது போல் விழுந்து, சற்றுத் திணறி, பின் நீந்தி அவனது மாறும் முகத்தை ரசிக்க வேண்டும்.

பிறகு கரையிலிருக்கும் நண்பனைப் பார்த்தவாறு நீந்த வேண்டும். கை காட்ட வேண்டும். நேரமிருப்பின் நடுவிலுள்ள மண்டபத்திற்குச் செல்ல வேண்டும். மனமின்றி வந்து சோப்புப் போட்டுக் கொள்ள வேண்டும். திரும்பவும் நீரில் பயணம்.

ஒவ்வொரு துளியிலும் நீராட வேண்டும். தானே ஒரு திவலையாகிவிட வேண்டும். முற்றிலும் கரைந்துபோய் எழும்போது, புதிய மனிதனாகி எழ வேண்டும். உடல் களைத்துப்போக, மனம் குளிர, கண்கள் சிவக்க நீராடிவிட்டு கோயிலுக்குப் போக வேண்டும். உடலின் அழுக்குகளைப் போக்கிவிட்டு, மனதின் மாசுகளைத் தாற்காலிகமாகவேணும் களைந்துவிட்டு, அகமும், புறமும் குளிர்ந்திருக்க, மெலிதான காற்று வருட, கோயிலுக்குச் சென்று வழிபடுவது சுகம் என்றால், வழிபாடு குளத்திலேயே துவங்கி விடுகிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த அனுபவத்தை மனதுள் சேமித்துக் கொள்ள வேண்டும். அவ்வப்போது இதில் ஆழ்ந்துபோக வேண்டும்.

இன்னும் ஒரு படி இறங்கினான். குளமே பிரம்மாண்ட பக்கெட்டாய் மாறி விடும் போலிருந்தது. இன்னொரு படியில் இறங்கினான். திடீரென பாஸ்கர் சொல்லியிருந்த ஸ்தலபுராணம் நினைவுக்கு வந்தது. அதில் சாபம் பெற்ற விண்ணவன் குளத்தில் நீராடி விமோசனம் பெற்றிருந்தான். பாவம் செய்தவன் குளிப்பதற்கா



இந்த இடம்? புண்ணியம் செய்தவன் பெறும்பேறு அல்லவா இந்த நீராடல்...? பாவியை ரிஷி "நீ மேன்ஷனில் நீராடு வாயாக...." என்றுதான் சபித்திருக்க வேண்டும்.

மூழ்கியதும், மேன்ஷனில் இவ்வளவு நேரம் என்ன நடந்து கொண்டிருக்கும் என்ற நினைவு வந்ததும், ஒரே நொடியில் நிகழ்ந்தன.

இவர்களின் அறையிலிருந்த மூன்று பேரில், இளங்கோதான் முதலில் குளிப்பான். அவன் அபூர்வ சக்தி உடையவன். பழைய சிவப்புநிற பக்கெட்டுடன் வெளியேறும் அவன், குளிப்பதற்கு எடுத்துக்கொள்ளும் நேரம் இரண்டு நிமிடங்கள். பாவம், தேகம் நனைப்பதற்குப் பெயர் குளியல் என்று நம்பிக் கொண்டிருக்கிறான். "பக்கெட் பாத்ரூம்ல இருக்கு... ஓடு..."

சக்தியின் கடிகாரமும் மற்றவர்களின் கடிகாரத்துக்கு சளைத்ததல்லவே ஓடுவான். இதற்குள் பாத்ரூமுள் வேறொ



வன் நுழைந்திருப்பான். இவனது பக்கெட் வெளியே வைக்கப்பட்டிருக்கும். ஏதாவது ஒரு கதவு திறந்து விடாதா என்று, பாத்ரூம்களின் முன்னால் சக்தி காத்திருப்பான்.

இதோ ஒரு கதவு திறந்துவிட்டது. ஒரு குழாய், பக்கெட் போன்ற அஃறிணைகளும், ஓர் உயர்திணையும் இருப்பதற்குப் போதுமான அறை. தாழ்ப்பாள் சரியாகப் பொருந்தாத தகரக் கதவு.

அறையின் மடையில் அழுக்குத் தண்ணீர் திணறிக் கொண்டிருந்தது. மெல்ல அது வெளியேறிக் கொண்டிருந்தது. சக்தி அருவருப்புடன் பார்த்தான். காலியான இரண்டு ஷாம்பூ பாக்கெட்டுகள், சோப் உறைகள், நீர் போகும் இடத்தை அடைத்துக் கொண்டிருந்தன. மேலும் அருவருப்புடன் சக்தி தன் காலால் அவற்றை நீக்கினான். நீர் மட்டுமே போக அனுமதிக்கப்பட்டிருக்கும் இந்தச் சிறு துளையில் எப்படி உறைகளும், காகிதங்களும் வெளியேறும் என்று எதிர்பார்த்தார்கள் என்று தெரியவில்லை.

பைப்பைத் திருகினான். நூலாய் விழும் நீர். பக்கெட் கொஞ்சம் கொஞ்சமாய் நிரம்புவதைப் பார்த்தவாறு நின்றிருந்தான். யாரோ ஒருத்தன் துண்டை கதவில் போட்டு, முன்பதிவு செய்து கொண்டதையும் பார்த்தான்.

சக்தி தேகம் நனைத்தல் அல்லது சம்பிரதாயச் சடங்கை விரைவுபடுத்தத் துவங்கினான். கடிகாரமோ கருணையற்றது. காத்திருக்க வேண்டிய சிக்னல்கள், ஏற வேண்டிய வாகனங்கள்... அவன் பரபரப்பானான்.

துண்டை அலசிய நீரை அவசரமாகக் கொட்டினான். அழுக்கு நீர் அடங்கிய பக்கெட்டுகளை அப்படியே விட்டுச் சென்று, பிறரின் அருவருப்புக்கு அவன் ஆளாக விரும்பவில்லை. கதவைத் தள்ளியதும் வேகமாக இன்னொருவன் நுழைந்தான்.

வழக்கம்போல் இளங்கோவுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். "அருமையான குளியல் ஒண்ணு போடணும்டா. இப்ப குளிக்கிற மாதிரி நடிக்கறோமே... அப்படி இல்லாம ஆசை தீரக் குளிக்கணும்..."

"காதுல சோப்புடா..."

சக்தி துடைத்துக் கொண்டான்

"போதும்டா குளிச்சது..." என்று இளங்கோ சொன்னபோது, சக்தி கரையில் இருந்தான். ஒரு கணம் ஒன்றுமே புரியவில்லை. இவ்வளவு நேரம் தான் குளித்தது எங்கே...?

எதையோ பறிகொடுத்தது மாதிரி இருந்தான். சேகரிக்க நினைத்து, தவறவிட்ட கணங்களை சிரமமுடன் மீட்க முயன்றான். மேன்ஷனில் தான் செலவிட்ட வருடங்கள், ஏற்றுக்கொண்ட பரபரப்பு, பழகிப்போன வாழ்க்கை எல்லாம், இங்கும் தன்னைத் துரத்தி வந்துவிட்டதை அவனால் நம்பவே முடியவில்லை. நழுவிப்போன காலத்தை நினைத்துத் துயரமும், வியப்பும் கொண்டான்.

"நேரமாச்சு. பாஸ்கர் தேடுவான்..." என்றான் இளங்கோ. "எப்படி இருந்துச்சு குளியல்?"


குளத்தில் குளிக்கவில்லை என்றோ, மேன்ஷனில் குளித்த மாதிரிதான் இருந்தது என்றோதான் சொல்ல வேண்டும். சக்தி யோசித்தவாறே குளத்தைப் பார்த்தான். நிறைய நீர் இருந்தது. இவனை நனைக்காத நீர்.

○

குறையொன்றுமில்லை

காலத்தைச் சொன்னதாலே, காலமாக இருந்து ரசிக்கிறான் பரமாத்மா என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். கால ரூபியாக அவன் இருக்கிறான் என்பது சாமான்யமான அர்த்தம். அந்தந்தக் காலத்தில் நம்மை ரக்ஷித்தவன் அவன்தான். இப்போதும் ரக்ஷிக்கிறான்; மேல்வரும் காலத்திலும் ரக்ஷிப்பான் என்பதை நாம் உணர வேண்டும். இது நமக்கு ஒரு சரித்திரத்தின் மூலம் தெரிகிறது.

ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் பராசர பட்டர் என்ற ஆசார்யர் இருந்தார். ரங்கநாத புரோகிதர் அவர். சஹஸ்ரநாமத்துக்குப் பாஷ்யம் எழுதியிருக்கிறார். பகவத் குண தர்ப்பணம் என்று பெயர் அதற்கு. பகவானுடைய திருக்கல்யாண குணங்களை காட்டக் கூடிய கண்ணாடி அது. அவர் அங்கே, ஸ்ரீரங்கத்திலே இருக்கிற போது, சிஷ்யர்களுக்கெல்லாம் பாடம் சொல்லிக் கொண்டிருப்பார். அவ்வாறு சொல்லுகிறபோது, ஒரு பெரிய வித்வான் வீதி வழியே போவார். அவர் தம்முடைய சிஷ்யகணங்களோடு போவார். அந்த வித்வான் போனால், பராசர பட்டர் அவரை ஏறெடுத்தும் பார்க்கமாட்டார். விசாரிக்கக் கூட மாட்டார். அவர் போன சிறிது நேரத்துக்கெல்லாம், ஒரு பெரிய செப்புச் செம்பை நன்றாகப் பளபளவென்று தேய்த்து எடுத்துக் கொண்டு, உஞ்சவிருத்தி பிராமணர் ஒருத்தர் வருவார்... அரை




குறையாக ஒரு சுலோகத்தைச் சொல்லிக் கொண்டு வீதியோடு போவார். அதையும் தப்பாகச் சொல்லுவார். பாத்திரம் நிரம்பு கிறவரையில் வீதியில் சுற்றிவிட்டு, வீட்டுக்குப் புறப்பட்டுப் போய் விடுவார். நிரக்ஷர குக்ஷி அவர். ஒன்றும் தெரியாதவர். அவர் வந்துவிட்டால் பராசர பட்டர், அவரைப் பார்த்து ஒரு அரை மணி நேரம் விசாரிப்பார்.

"தேவரீர் எப்படி இருக்கிறீர்? சௌக்கியமாக இருக்கிறீரா? குடும்பம் நன்றாக நடக்கிறதா?" என்று கேட்பார்.

"ஒன்றுமே தெரியாத ஒருத்தர் வருகிறார். அவரிடம் அரை மணிநேரம் விசாரிக்கிறீர். மஹாவித்வான் போனால் எதுவும் கேட்காமலிருக்கிறீரே...?" என்று

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார் 13



சிஷ்யர்கள் கேட்டார்கள் பட்டரிடம்.

அதற்கு அவர் சொல்கிறார் : "உங்களுக்கு ஒன்றும் தெரியாது இதைப் பற்றி... நாளைக்கு நான் காட்டுகிறேன்" என்று சொல்லிவிட்டார்.

மறுநாள், ரங்கநாதருடைய கோயில் உத்ஸவங்களெல்லாம் முடிந்த பிற்பாடு கிருஹத்துக்கு வருகிறார் பட்டர். சிஷ்யர்களெல்லாம் சித்தமாக இருக்கிறார்கள். அப்போது அந்தப் பெரிய வித்வான் வந்தார். அவருக்குப் பூரண கும்ப மரியாதையெல்லாம் கொடுத்து உள்ளே அழைத்துக் கொண்டு வந்தார் பட்டர்.

"ஆகச்சந்து!" (வாருங்கள்) என்று அழைத்து வந்து "உபவிசந்து!" (உட்காருங்கள்) என்று இருக்கச் செய்தார். உட்கார்ந்தவுடனேயே பட்டர் அவரைப் பார்த்துக் கேட்கிறார்.

"பரதத்வம் நாம கிம்?" - பரதத்வம் என்றால் என்ன...? எது?

உடனே அந்த மகான் சொன்னார், "எனக்கெங்கே சந்தேகமோ அங்கேயே நீங்களும் கேள்வி கேட்டுவிட்டீர்களே! ... இத்தனை சாஸ்திரம் படித்தும் எது பரதத்வம் என்று நிர்ணயம் பண்ணமுடியாமல் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கிறேன். ஒன்றும் புரியவில்லை. நீங்களும் அதையே கேட்டுவிட்டீர்களே!"

"சரி, நீங்கள் போகலாம்!" என்று அவரை அனுப்பி வைத்து விட்டார் பராசர பட்டர். அவர் போனவுடனேயே, அந்த உஞ்சவிருத்தி பிராமணர் வந்தார். அவரைப் போய் கிருஹத்துக்குள்ளே கூப்பிட்டார் பட்டர். உடம்பெல்லாம் நடுங்குகிறது அந்த ஏழை பிராமணருக்கு. கூப்பிடுகிறவரோ பெரிய வித்வான். இவரோ ஒன்றும் தெரியாத அஞ்ஞானி; அறிவிலி. இவரைக் கூப்பிட்டு உள்ளே உட்கார வைத்து விட்டு, பட்டர் கேட்கிறார் : "சுவாமி ஒரு சின்ன சந்தேகம்..."

சந்தேகம் என்ற உடனேயே மூர்ச்சையாகிப்போய்விட்டார் இந்த உஞ்சவிருத்தி பிராமணர். அவரை மெதுவாக எழுப்பி உட்கார வைத்துவிட்டு பட்டர் பேசுகிறார்.

"சுவாமி! பயப்படாதீர்... ஒரு சின்ன கேள்வி உம்மைப் பார்த்துக் கேட்கிறேன். பரதத்வம் என்றால் உமக்கு என்னவென்று தெரியுமா...?"

பட்டர் இதைக் கேட்டவுடனேயே அவருக்கு மகா கோபம் வந்துவிட்டது. கையிலே இருந்த உஞ்சவிருத்தி செம்பைத் தூக்கி எறிந்தார். அது போய் ரங்கநாதருடைய கோயில் சுவரில் அடித்துக் கீழே விழுந்தது! விழுந்த உடனேயே அவர் பட்டரைப் பார்த்துப் பேசினார்.

"பரதத்வம் தெரியாமலா இத்தனை நாட்களாக இங்கே பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்! நீர் என்னவோ பெரியதாகச் சொல்லிக் கொடுக்கிறீர் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். பரதத்வம் உமக்கே தெரியாதா...?"

"சரி உமக்குத் தெரியுமா பரதத்வம்...?" திருப்பிக் கேட்டார் பட்டர்.

"ஏன் தெரியாது? இதோ உள்ளே படுத்துக் கொண்டிருக்கிறானே அந்த ரங்கநாதன்தான் பரதத்வம். இதிலே உமக்கு என்ன சந்தேகம்...?"

- இதைச் சொன்னவுடனே பராசரபட்டர் விழுந்து விழுந்து அவரைச் சேவிக்கிறார். எல்லா சிஷ்யர்களுடைய கண்களிலும் ஜலம் வந்து கொண்டிருக்கிறது.

எல்லா சாஸ்திரங்களையும் படித்தும், பரதத்வம் என்றால் என்னவென்று சொல்ல முடியவில்லை அந்த வித்வானாலே... ஆனால், இவருக்கு ஒன்றும் தெரியாது. ரங்கநாதன்தான் பரதத்வம் என்கிறார். எது வேண்டும் நமக்கு



இப்போது...?

சுமையான கல்விகள் அதெல்லாம்... அத்தனைக் கல்விகளைச் சுமந்தும் பிரயோஜனம் இல்லையே! பரதத்வம் தெரியாத கல்வி எதற்கு? ஸாவித்யா, உத்தமா வித்யா, வேதவித்யா ஸமீரிதா - அவனை உணர்த்தாத வித்யை நமக்கு எதற்கு? அவனை உணராத ஞானமனைத்தும் அஞ்ஞானம்! அவனை உணரும்படியான ஞானம்தான் ஞானம்.

அவித்யை என்றால் எது...?

அவனை உணராதது அவித்யை.

வித்யை என்பது எது?

அவனை உணரக் கூடிய - காட்டக் கூடிய வித்யைதான் வித்யை.

ஆகையினாலே, சமஸ்த சாஸ்திரத்தையும் படித்து, பகவானை உணரவில்லையானால், அத்தனையும் வீண்.

ஒன்றுமே படிக்க வேண்டாம். ஆனால் அவனை உணர்ந்திருந்தால் அது போதும்.

'எவனை உணர்ந்திருந்தால் எல்லாம் உணர்ந்ததாக ஆகிறதோ, அவனே பரப்பிரும்மம். எல்லாவற்றையும் உணர்ந்தும் அவனை உணரவில்லையானால், எதையும் உணர்ந்ததாக ஆகாது' என்று சொல்லிவிட்டது உபநிஷத்.

ஆகையினாலே, உலகத்திலே இருக்கிற அத்தனை கல்வியையும் சுமக்கும்படியான மாலை உணர்த்தும்படியான கல்விதான்.

காலத்தினால் இருந்து ரக்ஷிக்கக் கூடியவன் இந்த எம்பெருமான்தான். அவன்தான் ரக்ஷகன் என்பதை எடுத்துக் காட்டி, உள்ளே இருக்கிற அவன்தான் பரதத்வம் என்பதைச் சுலபமாக எடுத்துக் காட்டியிருக்கிறார், அந்த உஞ்சவிருத்தி பிராமணர். அவருக்கு மற்ற சாஸ்திரங்களெல்லாம் தெரியாது. இருந்தாலும் 'ரங்கநாதர்தான்' என்று திடமாகச் சொல்கிறார் பாருங்கள். அந்த மாதிரி திடமான அத்யவசாயம் என்று சொல்வார்கள். அது சாமான்யர்களிடத்திலேதான் அமையும். அப்படிப்பட்ட அவரல்லவோ யாம் வணங்கும் அடிகள் / ஆவார்!

'ஜாதியில், ஒழுக்கத்தால் மிக்கோரேனும், சதுர் மறையால் வேள்வியால் தக்காரேனும்' - பிள்ளைபெருமாள் அய்யங்கார் அழகாகச் சொல்கிறார் - உத்தம குலத்திலே பிறந்திருக்கலாம் சதுர் சாஸ்திர பண்டிதராக இருக்கலாம்... அந்த ரங்கநாதன் பரதத்வம் என்று சொல்லாதவர்... அவனிடத்திலே பக்தி இல்லாதவர் வெறும் புலையர்தான்.

'பொன்னரங்கம் போற்றாதார் புலையர்தாம்' என்று சொல்லிவிட்டார். ரங்கநாதனுக்குப் பிடிக்காதவர்கள் அவர்கள்!

சாமானியனாயிருந்தாலும், பழிதொழிலும் இழிதொழிலும் படைத்தோரேனும், அப்படிப்பட்டவர் எம்பெருமானிடத்திலே பக்தியோடு இருந்தால், அவர்தான் உயர்ந்தவர்.

அவன்தான் ரக்ஷகன். எக்காலத்திலும் ரக்ஷகன்; எப்பொழுதும் ரக்ஷகன்; நம்முடைய சாமர்த்தியத்தினால் நாம் ரக்ஷிக்கப்படுவதில்லை. அவன்தான் நம்மை ரக்ஷிக்கிறான் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

பகவான்தான் நம்மை ரக்ஷிக்கிறான் என்பதை எவ்வாறு தெரிந்து கொள்ளலாம்?

துக்கம் என்பதைக் கொடுத்திருக்கிறானே, அதைக் கொண்டே நாம் தெரிந்து கொள்ளலாம்.

துக்கம் என்பதே இல்லையென்றால், பகவான் நம்மை எவ்வாறு ரக்ஷிக்கிறான் என்பதை நாம் தெரிந்துகொள்ளவே முடியாது.

(வளரும்)



"வெரி ஸாரி... உங்களுக்கொரு பேட் நியூஸ். நீங்க அதிக நாள் வாழ மாட்டீங்க.. டயமில்லை"

"ஐய்யோ... எவ்வளவு நாள் இருப்பேன்?"

"பத்து"

"பத்தா?... பத்துன்னா, மாதமா, வருஷமா, வாரமா?

"10... 9... 8... 7..."

பிப்ரவரி மாத பட்ஜெட்

வரவு :		ரூபாய்
	மொத்த வருமானம்	10,572
செலவு :		
	வாடகை	2,500
	மளிகை	1,500
	பால்	500
	கேஸ்	296
	மின் கட்டணம்	382
	குழந்தைகளுக்கு :	
	பள்ளிக் கட்டணம்	450
	சத்து பானம்	166
	டியூஷன்	300
	கோகுலம்	6

குழந்தைகளின்
மகிழ்ச்சிக்கு உங்கள் பட்ஜெட்
ரூ.6/- மட்டுமே!

கோகுலம்

சிறுவர் மாத இதழ்

47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை-600 032



வெட்டிவேரு வாசம், ஜில்லுன்னு வீசம்!

ஹாய்! இந்த வாரம் ஹெல்த் ஸ்பெஷல்ங்கறதால நான் சொல்லித்தரப் போற ஐட்டம் முழுக்க, முழுக்க கொழுப்பு, சர்க்கரை இல்லாதது பார்த்துப் பார்த்துத் தயார் பண்ணினது. இதை செய்ய தேவைப்படற முக்கியமான ஐட்டம் வெட்டி வேர் ஸிரப் (கஸ் ஸிரப்). அத்தோட லெமன் ஜூஸ் ஒரு டீஸ்பூன், கிளப் சோடா - 1 கிளாஸ், உப்பு + மிளகுப்பொடி - 1/2 டீஸ்பூன். முக்கியமா பைனாப்பிளை சின்னச் சின்ன பீஸ்ஸா ஸ்லைஸ் பண்ணி வச்சிக்கோங்கோ. மறந்துடாம கொஞ்சம் ஐஸ் க்யூப்ஸை க்ரஷ் பண்ணி தயாரா வச்சிடுங்கோ.

இப்போ ஒரு கிளாஸ்ல ஒரு டேபிள் ஸ்பூன் வெட்டி வேர் ஸிரப்பை ஊத்தி, அதன்மேல லெமன் ஜூஸ், ஐஸ், உப்பு, மிளகுப் பொடி எல்லாத்தையும் மிக்ஸ் பண்ணி, ஏற்கெனவே நாம கட் பண்ணி தயாரா வச்சிருக்கோமோன்னோ, அந்த பைனாப்பிள் பீஸைக் கொட்டி, நன்னா கலக்கி விட்டுடுங்கோ. இப்போ அதன் மேல கிளப் சோடாவை கொஞ்சம் கொஞ்சமா, அவசரப் படாம, கலந்துண்டே வந்தா... சும்மா ஜில்லுன்னு ரெடியாயிடும். சாப்பிட்டுப் பாருங்கோ... உங்க மேல இந்த மாமிக்கு எவ்ளோ கரிசனம்ங்கறது புரியும்! ஓ.கே.வா!

(பிரௌஸர் அம்பி, 'வலைபாயுதே'ல அந்த வெப்சைட்டுக்கே நான்தான் டிப்ஸ் தந்துண்டிருக்கேண்டா அம்பி)



மைக்ரோவேவ் மாமி



டென்ஷன் மன்னர்களே..! அட்டென்ஷன் ப்ளீஸ்!

ஆண்டுதோறும் மூன்று கோடி இந்தியர்களுக்கு மாரடைப்பு வருகிறது. இதில் ஒரு கோடிப் பேர் முப்பது முதல் நாற்பது வயதுடைய இளைஞர்கள் என்றால், நம்புங்கள் என்கிறது தேசிய சுகாதார மையம். இத்தனை இளம் வயதில் மாரடைப்பு வர என்ன காரணமாம்? மன அழுத்தம்! குறிப்பாக 'ஏ-வகை பர்சனாலிட்டி' கொண்டவர்களைத்தான் மன அழுத்தம் தாக்கி மாரடைப்பை உண்டு பண்ணுகிறது என்கிறார்கள். அது என்ன ஏ-வகை மன அழுத்தம்? சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற அதிரோஸ் குளோரோசிஸ் (இரத்தநாள அடைப்பு) மாநாட்டில் 'மன அழுத்தமும், மாரடைப்பும்' என்ற தலைப்பில் ஆய்வறிக்கை சமர்ப்பித்திருக்கும் இதய நோய் நிபுணர் டாக்டர் எம்.ஜெயராஜாவிடம் கேட்டோம்.

"எப்போதுமே படபடப்பாக இருப்பவர்கள்தான் ஏ-வகை பர்சனாலிட்டி மனிதர்கள். கடுமையாக உழைப்பார்கள். நேரமே போதவில்லை என்று வேலைகளை அவசர அவசரமாகச் செய்வார்கள். நின்றுகொண்டே சாப்பிட்டுவிட்டு ஓடுவார்கள். கடகடவென்று பேசும் இவர்கள், வாக்கியங்களில் கடைசி வார்த்தைகளை விட்டுவிடுவார்கள். எழுதும்போதும் இது நேரலாம். இவர்கள் மனசாட்சிக்கும், நேர்மைக்கும் அதிக முக்கியத்துவம் தருகிறவர்கள். ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட லட்சியங்கள் இவர்களிடம் இருக்கும்.

முகம் எப்போதும் இறுக்கமாக இருக்கும். இவர்கள் சிரிப்பது அபூர்வம். நகைச்சுவை உணர்வு துளிக்கூட இருக்காது. எதைச் செய்தாலும் ஒரு 'பர்ஃபெக்ஷனிஸ்ட்' பேர் வாங்க வேண்டும் என்று செய்வார்கள். இதனால் எல்லா நேரத்திலும் பயம், பதற்றம், குற்றவுணர்வு இவர்களிடம் இருந்துகொண்டே இருக்கும். இதனால் இவர்களும் அமைதியாக இருக்க முடியாது. இவர்களோடு இருப்பவர்களும் அமைதியாக இருக்க முடியாது."

இன்று எல்லோருக்கும் டென்ஷன் வருவது சகஜம்தானே... இதை உடனுக்குடன் குறைத்துவிட முடியாதா?

"மன அழுத்தம் ஏற்பட சூழ்நிலை, மனநிலை ஆகிய இரண்டு முக்கிய காரணங்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். சூழ்நிலையை நம்மால் மாற்ற முடியாமல் போகலாம். ஆனால், மனநிலையை மாற்றிக்கொள்ள முடியும். சூழ்நிலை எவ்வளவு சிக்கலாக இருந்தாலும் அதைச் சமாளிக்கும் மனநிலையைப் பெற்றால் 'ப்பூ' என்று ஊதித் தள்ளிவிடலாம்."


மன அழுத்தத்தின்போது எப்படி மாரடைப்பு ஏற்படுகிறது?

"டென்ஷனாக இருக்கும்போது கார்டிசால், அட்ரீனலின் போன்ற ஹார்மோன்கள் அளவுக்கு அதிகமாகச் சுரக்கின்றன. இவை இரத்தத்தில் கலந்து இரத்தக் குழாய்களைச் சுருங்க வைக்கின்றன. இதயத்தின் இரத்தக் குழாய்களும் சுருங்குகின்றன. இந்த நேரத்தில் இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம், இதயத்துக்குத் தேவையான இரத்த அளவு எல்லாமே அதிகமாகி மாரடைப்பு ஏற்படுகிறது."

இளம் வயதில் ஹார்ட் அட்டாக் வந்துவிட்டால் இல்லற வாழ்க்கையில் ஈடுபட முடியாதென்று சொல்லப்படும் கருத்து உண்மையா?

"சுத்த ஹம்பக்! இளமையில் மாரடைப்பு வந்தவர்கள் மட்டுமல்ல, இதய நோய் உள்ளவர்களும் டாக்டரிடம் கேட்கத் தயங்கும் கேள்வி இது. பாலியல் என்பது வெளிப்படையாகப் பேசக்கூடாத 'கெட்ட விஷயம்' என்ற இந்திய மனோபாவம் இன்னும் இருக்கும்போது, 'இல்லற வாழ்க்கையால் இதயம் பாதிக்கப்படலாமா?' என்று நினைப்பது சகஜம்

தான். மாரடைப்பு ஏற்பட்டோ, பைபாஸ் அறுவை சிகிச்சை செய்த பிறகோ, மூன்று முதல் எட்டு வாரங்கள் கடந்த பிறகு கொஞ்சம் கொஞ்சமாக இல்லற வாழ்வில் ஈடுபடலாம். எங்கே மீண்டும் மாரடைப்பு வந்துவிடுமோ என்பது தேவையற்ற பயம். இல்லற வாழ்வு என்பது மனம் சம்பந்தப்பட்ட விஷயம். இது வெறும் உடல் சம்பந்தப்பட்டது மட்டும் அல்ல. சொல்லப்போனால் இல்லற வாழ்க்கை இதயத்துக்கு ஒரு வகையில் நல்ல மருந்து. மருத்துவர் தரும் அறிவுரைகளை பின்பற்றி நடந்தாலே இல்லற வாழ்வு இனிக்கும். இதயம் இயல்பாகத் துடிக்கும்."






• டாக்டர் எம்.ஜெயராஜா

இல்லற வாழ்வில் ஈடுபடும்போது இதயத்துடிப்பு அதிகரிப்பதையும், இரத்த அழுத்தம் உயர்வதையும் தடுக்க முடியாதே... இது ஆபத்தில்லையா?

"இரண்டையும் சீராக வைத்துக் கொள்ள சில யுக்திகள் உள்ளன. இதய நோய், அறுவை சிகிச்சை ஆகியவற்றின் தன்மையைப் பொறுத்து டாக்டர் அறிவுரை தருவார். இல்லற வாழ்வின் போது மூச்சுத் திணறலோ, படபடப்போ, மார்பில் வலியோ இருந்தால் 'சார்பிட்ரேட்' மாத்திரையை நாக்கின் அடியில் வைத்துக் கரைத்தால் பிரச்னைக்குத் தாற்காலிகத் தீர்வு கிடைக்கும். இல்லற வாழ்வில் ஈடுபட்ட பிறகு அதிக தூக்கமோ, உடல் சோர்வோ இருந்தாலும் உங்கள் டாக்டரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கேற்ப உங்கள் மருந்துகளில் மாற்றம் செய்வார். இப்போது பக்க விளைவுகள் இல்லாத மருந்துகள் நிறைய வந்துவிட்டன."




திடீரென்று வரும் மன அழுத்தத்தை குறைக்க வழி இருக்கிறதா?

"அருகில் யார் இருந்தாலும், இல்லா விட்டாலும், அமர்ந்தபடியே ஐந்து நிமிடம் மூச்சை மெதுவாக இழுத்து, பிறகு மெல்ல வெளியிடுங்கள். திடீர் டென்ஷன் மாயமாகிவிடும்."

சந்திப்பு: ஸ்ரீ சக்கரம்

படம்: டி.ஜி.சண்முகம்



• நூல்கள் வெளியீடு...


உதித்தது நான்காவது தமிழ்!



• விநாயகரும், விழா நாயகரும்

அமரர் கல்கிக்கான விழா என்றாலே அது ஒரு தனிக் களையும் விறுவிறுப்பும் பொருந்தி அமையும். கடந்த ஜனவரி 22 அன்று, சென்னை, 'ரஷ்ய கலாசார மையத்தில் அவருடைய ஐம்பதாவது நினைவு நாள்... டிசம்பர் ஐந்தாம் தேதியன்று நடக்க இருந்து, திருமதி எம்.எஸ்.ஸின் உடல்நலக் குறைவு காரணமாக ஒத்திவைக்கப்பட்டு கடைசியில் அவருக்கு அஞ்சலி செலுத்தும் விழாவாகவும் அமைந்தது. சோகம்தான். எனினும் இவ்விழா ஒரு

• சால்வை மரியாதை!


• வானதி திருநாவுக்கரசு

கல்கி விழா



• உருவப்படம் திறப்பு



• ஐச்வர்யா

முத்தமிழ் விழாவாகவும் முப்பெரும் விழாவாகவும் மலர்ந்து, கல்கி ரசிகர்களின் விழி, செவி, மனங்களுக்கு விருந்தாக விளங்கியது.

முப்பெரும் விழா : அமைதியும் அழகும் தவழும் புன்னகை முகத்துடன் கூடிய திருமதி எம்.எஸ்.ஸின் உருவப் படம், புகைப்படக் கலைஞர் யோகாவின் கைவண்ணத்தில் தயாராகி, நீதியரசர் கே.எஸ்.பக்தவத்சலத்தால் திறந்து வைக்கப் பட்டது. அமரர் கல்கியின் இதுவரை வெளி வராத கட்டுரைகள் அடங்கிய மூன்று நூல்கள், வானதி தயாரிப்பில் அறிமுகமாக, அவற்றை நீதியரசர் வெளியிட்டார்.

அமரர் கல்கியின் பேத்தி கௌரி ராம் நாராயண், கல்கி நூற்றாண்டுக்கென எழுதி இயக்கிய 'காற்றினிலே வரும் கீதம்' என்ற நூதன மேடை நிகழ்ச்சியின் ஒளிப் பதிவு திரையிடப்பட்டது.

இயற்றமிழையும் இசைத் தமிழையும் நாடகத் தமிழையும் உள்ளடக்கிய இந்த முப்பெரும் விழா, முத்தமிழ் அஞ்சலியாக இன்னும் சொல்லப் போனால் நாற்றமிழ் அஞ்சலியாக அமைந்தது.

'மீரா யாத்திரை', 'தாகூர்

• நடனம்



• யோகா



• சுப்ர பாலன்



தரிசனம்', 'அதிர்ஷ்ட கவசம்' ஆகிய மூன்று நூல்களும் அமரர் கல்கியின் உரைநடைச் சிறப்புக்குச் சின்னங்களாக வெளிவர, அவரது பாடல்களை உள்ளடக்கிய 'காற்றினிலே வரும் கீதம்' நிகழ்ச்சி நாடக அமைப்பில் இசைத் தமிழைப் போற்ற, முத்தமிழுக்கும் மேடை கிடைத்துவிட்டது... 'நான்காவது தமிழ் ஏது?' என்கிறீர்களா..? அன்றைய தினம் மேடையில் முதல் பிரதிகளைப் பெற்றுக் கொண்டு நூல் அறிமுகம் செய்த பாரதி பாஸ்கரின் உரை, 'பேச்சுத் தமிழ்' என்ற நமது செம்மொழியின் நான்காவது பரிமாணத்துக்கு இலக்கணமாக அமைந்தது என்றே சொல்ல வேண்டும்!

'அங்கைகொடு மலர் தூவி, அங்கமது புளகிப்ப, அன்பினால் உருகி விழிநீர்...' என்று சிறுமி ஐச்வர்யா தீர்க்கமாக உச்சரித்து, சுருதி சுத்தமாக இறை வணக்கம் பாட, நிகழ்ச்சி சரியாக மாலை ஆறு மணிக்குத் தொடங்கியது. இறை வணக்கத்தில் இணைந்து மனம் குவிந்த பார்வையாளர்கள், பாடிய சிறுமி எம்.எஸ்.ஸின் கொள்ளுப் பேத்தி (ராதா விச்வநாதனின் பேத்தி) என்று அறிந்ததும் 'முப்பெரும் விழாவில் மூன்றாவது தலைமுறை முத்திரை பதித்துவிட்டது' என்று இரட்டிப்பு மகிழ்ச்சி அடைந்தனர்.

நிர்வாக அறங்காவலர் கல்கி ராஜேந்திரன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்க, மற்றொரு அறங்காவலர் வி.கோபாலன் வரவேற்புரை வழங்கினார். அதில் முக்கியச் செய்தியாக, 'வட்டி விகிதங்கள் குறைந்துவிட்டதால் அறக்கட்டளையின் வருமானம் பாதிக்கப்பட்டாலும் எப்படியோ முயன்று சென்ற ஆண்டைப் போலவே ரூபாய் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான மதிப்புள்ள கல்வி உதவித் தொகைகள், படிப்பிற் சிறந்த ஏழை மாணவர்களுக்கு வினியோகிக்கப்பட்டதைக் குறிப்பிட்டார். கல்வி அறக்கட்டளைகளின் வைப்பு நிதிக்குக் கூடுதல் வட்டி தர அரசு முன் வரவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார் அவர்!

அமரர் கல்கி நூல்களின் தொகுப்பாசிரியர் சுப்ர.பாலன், பதிப்பாளர் வானதி திருநாவுக்கரசு, 'அதிர்ஷ்ட கவசம்' நூலின் அட்டையை வடிவமைத்த ஓவியர் நடனம், புகைப்படக் கலைஞர் யோகா ஆகியோரை மேடைக்கு அழைத்துக் கௌரவித்தது அறக்கட்டளை. இவர்களுக்குச் சால்வை போர்த்தி வாழ்த்திவிட்டுப் பேச வந்தார் நீதியரசர்.

எம்.எஸ்.ஸின் இசைச் சிறப்பு, அவரது எளிமை, கணவரிடம் அவர் கொண்ட பக்தி, அந்தத் தம்பதியின் மனிதநேயம் மிக்க கொடைத்தன்மை என்று வரிசைப் படுத்தி நினைவு கூர்ந்து, "எம்.எஸ்.ஸை இசையுலகின் மகாத்மா



• பார்வையாளர்கள்

என அழைப்பது தகும்" என்றார். கைதட்டலுக்குக் கேட்கவா வேண்டும்!

ஆண் வேடம் ஏற்பதில் சற்றும் விருப்பமில்லாவிட்டாலும் சாவித்திரி படத்தில் 'நாரதர்' பாத்திரத்தை ஏற்றார் எம்.எஸ். எதற்கு..? கல்கி பத்திரிகையைத் தொடங்குவதற்கு மூலதனம் சம்பாதித்துத் தருவதற்கு...! அந்தத் தியாகத்தின் பலத்திலும் அமரர் கல்கியும் கல்கி சதாசிவமும் அமைத்த தேசிய உணர்வு என்னும் அஸ்திவாரத்திலும்தான் கல்கி இதழ் இன்றைக்கும் நடுநிலையும் கண்ணியமும் காத்து வருகிறது என்று சுட்டிக்காட்டினார் நீதியரசர் கே.எஸ்.பக்தவத்சலம். அமரர் கல்கியின் நகைச்சுவையுணர்வு சாதுர்ய

பீர்பாலும் தெனாலிராமனும் இணைந்தது போன்ற நேர்த்தி கொண்டிருப்பதாகச் சொன்னார்.



• நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது

மூன்று நூல்களையும் கரைத்துக் குடித்து விட்டு வந்திருந்தார் பாரதி பாஸ்கர்.

'மீரா யாத்திரை'யின் பக்தியுணர்வு, 'தாகூர் தரிசனம்' கட்டுரைகளின் நகைச்சுவை கலந்த தீர்க்கதரிசனம், 'அதிர்ஷ்ட கவசம்' புத்தகத்தின் அட்டைகளிடையே பக்கத்துக்குப் பக்கம் பொதிந்து கிடக்கும் நையாண்டி கலந்த நகைச்சுவை என கூர்ந்த கவனிப்புடன் அமைந்த அவரது உரையிலும் நகைச்சுவைக்குக் குறைவில்லை. ரசிகர்களைச் சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்த அவ்வுரை உணர்ச்சிகரமான கட்டங்களில் அவர்களைச் சூள் கொட்டவும் கை தட்டவும் வைத்ததுடன், அவர்களது கண்களையும் குளமாக்கியது! 'தியாக பூமி' நாவலின் கதாநாயகி சாவித்திரியைப் படைத்த அமரர் கல்கியை வியந்து வியந்து அவர் பேசியதும், எம்.எஸ்.ஸின் எளிமைக்கும் தூய உள்ளத்துக்கும் எடுத்துக் காட்டாக அவர் விவரித்த வாழ்க்கைச் சம்பவங்களும் நேரம் செல்வது தெரியாமல் பார்வையாளர்களைக் கட்டிப்போட்டன. உச்சரிப்பு சுத்தமும், உணர்ச்சி மிகுதியும், எடுத்துக்கொண்ட பொருளை / தலைப்பை தீர அலசி ஆராய்ந்து பேசிய நேர்த்தியும் மேடைப் பேச்சுத் தமிழ் என்ற நான்காவது தமிழுக்கு இலக்கணமாக விளங்கின. இன்றைக்கு அனைத்து நெறிகளையும் தொலைத்துவிட்டுத் தள்ளாடிக் கொண்டிருக்கும் தமிழ்ப் பேச்சு மேடைக்கு இவ்வாறு பாரதி பாஸ்கர் வழி காட்டியதைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்தபோது, அமரர் கல்கி எழுதியதுதான் ஞாபகம் வந்தது :

'அடாடா! இவ்வளவு அழகான திப்பு சுல்தான் சமாதியைக் காண திப்பு சுல்தான் இல்லையே!' என்று எழுதினார் அவர்! பாரதி பாஸ்கர் பேச்சைக் கேட்க கல்கியும், எம்.எஸ்.ஸும் சதாசிவமும் இல்லையே என்று தோன்றியது.



உரைகள் முடியவே இரவு எட்டு மணி ஆகிவிட்டது எனினும் பின் தொடர்ந்த 'காற்றினிலே வரும் கீதம்' நிகழ்ச்சியைப் பலர் காத்திருந்து கண்டு மகிழ்ந்தனர். திருப்பூர் கிருஷ்ணனும் அனுராதா கண்ணனும் இணைப்புரை வழங்க, கலாக்ஷேத்ரா மாணவர்களும் இசைக் குழுவினரும் நடனங்கள் வழங்க, இசையுலகின் இளம் நட்சத்திரக் கலைஞர்கள் கல்கி பாடல்களைப் பாட, தேசியமும் பக்தியும், இலக்கியச் சுவையும் மேலிட்ட அந்த நிகழ்ச்சியின் வீடியோ பதிவைப் புதிதாகக் கண்டவர்கள் வியந்து மகிழ்ந்தார்கள்; ஏற்கெனவே ஜூலை 24, 1999 அன்று நேரில் கண்டு களித்தவர்கள் அந்த நினைவுகளையும் மீட்டெடுத்து வந்து இரு மடங்காக ரசித்தார்கள்!

தொகுப்பு : ச.ந. கண்ணன், அலமு

படங்கள் : யோகா



'அண்ணாமலை

நீங்கள் கேட்டவை – தராசு

● அ.கஹைல் ரஹ்மான், திருச்சி - 21

? வேலூர் சிறையிலிருந்து வெளிவந்த 'சிறைப் பூக்கள்' மாத இதழ் முதல் இதழுடன் நிறுத்தப்பட்டுவிட்டதாமே?

! சிறைக்குள் இருந்தபடியே பத்திரிகை நடத்த விதிமுறைகள் இடம் தராததால் 'பூ' வாடியிருக்கலாம். ஆனால், எழுத்தார்வம், இலக்கிய ஆர்வமுள்ள கைதிகள் சிறைக்கு வெளியே நடத்தப்படும் பத்திரிகைகளுக்குத் தங்கள் படைப்புகளை அனுப்பலாமே. உதாரணமாக, 1999ல் நடந்த அமரர் கல்கி நூற்றாண்டு விழா சிறுகதைப் போட்டிக்குத் தமது சிறுகதையை அனுப்பி முதல் பரிசு பெற்றார், பாளையங்கோட்டை சிறைவாசியாயிருந்த இரா.கண்ணன். இன்று கண்ணன் சுதந்திரப் பறவை என்பது நமக்குக் கூடுதல் மகிழ்ச்சி.

பி.ராஜசேகரன், மதுரை - 16

? பீஹாரில் காங்கிரஸ் கட்சி தனித்துப் போட்டியிடுவது பற்றி...?

! லாலு கட்சிக்கும் சோனியா கட்சிக்கும் தொகுதி உடன்பாடு உண்டு என்கிறார்கள். ஆனாலும் இது கூட்டணிக்கு ஈடாகாது. பி.ஜே.பி.யும் இன்று அவ்வளவாகச் செல்வாக்குடன் இல்லை என்பது காங்கிரஸுக்கு ஆறுதலான விஷயம்.

● வே.சித்ரா, கும்மிடிப்பூண்டி

? ஹிந்து மதச் சாமியார்கள் மட்டும்தான் முறைகேடுகளில் ஈடுபடுகிறார்களா..?

! முறைகேடுகளில் ஈடுபடுவோரில் சிலர் சாமியார்களாக இருக்கிறார்கள் - எல்லா மதங்களிலும். ஆனால், ஹிந்து மதத்தைச் சேர்ந்த சாமியார்கள் தவறு செய்யும்போது, அதனால் ஹிந்துக்களுக்கு ஏற்படும் மனக் கிலேசம் அதிகம்.

● எஸ்.முரளி, குறிஞ்சிப்பாடி

? ராதிகாவின் 'அண்ணாமலை' கிளைமேக்ஸ் எப்படி....?

! மகா சொதப்பல்! பக்தி என்ற போர்வையில், சில திரைப்படங்களில்தான் கடவுள் வந்து பேசுகிற நம்ப முடியாத காட்சிகள் இருக்கும். சின்னத்திரையில் ராதிகா அதனை முதன்முதலாக அரங்கேற்றிவிட்டார். அவசர அவசரமாக முடிக்கப்பட்ட, இயல்பேயில்லாத இறுதிக் காட்சிகளில் மக்கள் ஒன்றியிருப்பார்களா என்பது சந்தேகம்தான். 'செல்வி'யிலாவது 'சித்தி' இருக்கட்டும்.



● மும்மடங்கு வெற்றி!

● ஆர்.மாதவராமன், கிருஷ்ணகிரி

? நாட்டிலுள்ள மருத்துவமனைகள் நூற்றைம்பது கோடி செலவில் நவீனப்படுத்தப்படப்போவதாக அறிவித்துள்ளாரே அன்புமணி..?

கிளைமேக்ஸ் எப்படி?

! அரசு மருத்துவர்கள், மருத்துவமனை ஊழியர்களின் அணுகுமுறையை முதலில் நவீனப்படுத்தட்டும்... இல்லாவிட்டால் இதெல்லாம் வேஸ்ட்தான்.

● சியாமளா ஈஸ்வரன்,
தேவூர் மேட்டுக்கடை ▢

? அரசியல் தலைவர்கள் படுகொலைச் சம்பவங்கள் அதிகரித்து வருவது எதைக் காட்டுகிறது?

! முந்தைய அரசியல் தலைவர்கள் பிரச்னையென்றால் பேசித் தீர்த்துக் கொண்டார்கள். இப்போதைய தலைவர்கள், தீர்த்துவிட்டுப் பேசாதிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது.

● டி.ஜே.குமரன்,
சென்னை - 73

? ஆஸி. ஓப்பன் டென்னிஸ் மூன்றாவது சுற்று ஆட்டத்தில் செரீனாவுடன் இந்திய வீராங்கனை சானியா மிர்ஸா விளையாடத் தகுதி பெற்றது குறித்து...?

! தகுதி பெற்றது முதல் வெற்றி. செரீனாவிடம் துவண்டு தோற்காமல் போராடி, அவரது பாராட்டைப் பெற்றது இரண்டாவது வெற்றி. காலில் சுளுக்கு உபாதையுடன் போராடினார் என்பது கவலையும் தரும் மூன்றாவது வெற்றி!

● நகை தி.மகராசன்,
சின்னமனூர்

? காஞ்சி உத்திராதி மட மேலாளர் கொலை எதைக் காட்டுகிறது...?

! ஓர் அநீதி நடந்து விட்டதாகக் கருதினால், சட்டத்தின் துணையை நாடாமல், தாங்களாகவே தீர்ப்பு வழங்கிக் கொலை செய்வது அல்லது கொலையைத் தூண்டுவது என்பது இன்று சர்வ சகஜமாகி விட்டது என்பதையே காட்டுகிறது. நீங்கள் குறிப்பிடும் சம்பவம் மற்றுமோர் உதாரணம். இதற்கு என்ன காரணம்? மீடியாவா? காவல்துறையின் லஞ்ச - ஊழல், மெத்தனப்போக்கா? நீதித் துறையின் தாமதப் போக்கா...? ஆய்வு தேவை.

● ஜி.குப்புசாமி,
சென்னை - 26

? ராம்நாட் என்பது (ராம் 'not') 'ராமன் இல்லை' என்ற பொருளைக் குறிக்கிறதே... ஆதலால் அதை மாற்ற வேண்டும் என்கிறாரே பா.ஜ.க. எம்.எல்.ஏ. ராஜா...?

* தயங்கித் தொலைத்தது!



* முடியாத காரியம்






* நழுவிய வாய்ப்பு



★ அவசர முடிவு




★ விரும்பா விளம்பரம்

! 'Ramnad' என்பது ஆங்கிலேயர்கள் தங்கள் உச்சரிப்பு வசதிக்காக ஏற்படுத்தியது. நாம் Ramanathapuram என்றே எழுதலாம்; பேசலாம். யார் தடுக்கிறார்கள்!

● ஆர்.கர்ணன், தனக்கர்குளம்

? எந்த நடிகனாலும் இனி ஆட்சியைப் பிடிக்க முடியாது என்கிறாரே சத்யராஜ்?

! இப்போதைக்கு அவர் கூறுவது சரிதான். ரஜினி வாய்ப்பைத் தவறவிட்டு விட்டார்; கமலுக்கு விருப்பம் இல்லை; விஜயகாந்த் தயங்கித் தடுமாறியே பின்னணிக்குப் போய்விட்டார். சத்யராஜால் நிச்சயம் முடியாது. இன்னொரு எம்.ஜி.ஆர். வரக்கூடும்.



★ நவீண(ன) முயற்சி!

● ஆர்.எம்.இ.மலை, அக்ரஹாரம் ★

? கிராம சபை உறுப்பினர்களும் தலைவர்களும் திருப்திகரமாகப் பணியாற்றாவிடில் அவர்களுடைய பதவியைப் பறிக்கும் உரிமையை மக்களுக்குத் தர, மஹாராஷ்டிர அரசு சட்டம் இயற்றப் போகிறதாமே...?

! சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அதே சட்டம் கொண்டு நீக்க முடிந்தால் ஓ.கே.தான்!

● ஜி.நீலாம்பாள், மன்னார்குடி

? சல்லியன், சகுனி, திருதராட்டிரன், ராவணன், கும்பகர்ணன், கைகேயி, கூனி... இந்தப் பெயர்களை வைத்துக் கொண்டால் என்ன தப்பு? நல்ல பெயரை வைத்துக்கொள்வோரும் தவறுதானே செய்கிறார்கள்?

! பெயர் வைக்கும் பெற்றோர், தங்கள் குழந்தைகள் சகுனி, கும்பகர்ணனாகவோ, கூனி, கைகேயியாகவோ விளங்க வேண்டும் என்று விரும்பி வைப்பதில்லை. நல்ல பெயர் வைத்துக் கொண்டாலும் பலர் தப்பு செய்கிறார்கள் என்பது உண்மைதான். இவர்களுக்கு அசுரப் பெயர்களை வைப்பதால் தப்பே செய்யமாட்டார்கள் என்ற உத்தரவாதமும் இல்லையே!

● கே.வி.ராமன், சென்னை - 73

? கும்பகோணம் வீரசைவ மடத்தை அரசு தன்வசம் எடுத்துக் கொண்டது குறித்து...?

! எடுத்துக்கொண்ட வேகத்தில் தவறை உணர்ந்து திருப்பியும் கொடுத்துவிட்டதே! வரவேற்போம்.

● ஆர்.நாகராஜன், சென்னை - 117

? சட்டமும் நீதியும் ஒன்றுதான் என்றால் ஒரே வழக்கில் உயர்நீதி மன்றமும் உச்சநீதிமன்றமும் வெவ்வேறு தீர்ப்புகள் சொல்வது ஏன்?

! சட்டமும் நீதியும் ஒன்றல்ல ஐயா! நீதி பரிபாலனத்துக்கு உதவும் விதிகள்தான் சட்டம். சட்டத்தின் விதிகளை அர்த்தம் பண்ணிக்கொண்டு அமல்படுத்தும் முயற்சியில் கருத்து மாறுபாடுகள் இருக்க வாய்ப்பு உண்டு. அதனால்தான் நீதித் துறையில் நான்கு நிலைகள் ஏற்படுத்தி அலசச் சொல்கிறார்கள். நீதி நிலைக்க வேண்டும்; அநீதி தவிர்க்கப்பட வேண்டும் என்பதே நோக்கம். ●

❑ ரூ.100 பரிசு பெறுபவர் :
சியாமளா ஈஸ்வரன்,
தேவூர் மேட்டுக்கடை,
சேலம் - 637 104.

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
ஆர்.எம்.இ.மலை,
நல்லான்பட்டி,
அக்ரஹாரம் பி.ஓ.,
குடியாத்தம் - 632 601

வட்டமேஜை



✉ பழுத்த எழுத்தாளர்கள் (அனுராதா ரமணன், சுஜாதா) இருவரின் எழுத்தை 'கல்கி'யில் படிக்கும் பொழுது சந்தோஷமாயுள்ளது.
கோவை, என்.கணேஷ்

✉ அரசியல்வாதி ஆகிவிட்டாரா அனுராதாரமணன்! 'எம்.பி... எம்.பி...' என எம்.டி. ராமனாதனைக் குறிப்பிட்டுள்ளாரே! (பிழைதிருத்துவோர் கவனக் குறைவுதான், ஸாரி - ஆர்.)
சென்னை-26, ஈரோடு அனுராதா

✉ நட்புக்கு இலக்கணமாக விளங்கும் எழுத்தாளர்கள் சுபாவின் 'நண்பன் ஐ.பி.எஸ்.' சிறு கதை சிறப்பான வாழ்க்கைப் பாடம்.
திருவண்ணாமலை, ஆர்.ஆர். சாமி

✉ 'ஜோதிகாவின் புலம்பல்', 'பிரபுதேவாவின் ஏக்கம்' ஆகிய போஸ்ட்கார்டு சிறு கதைகளுக்கு சம்பந்தப்பட்ட பெயருள்ள நட்சத்திரங்களின் படங்களைப் போட்டுச் சிறக்க வைத்துவிட்டீர்களே!
நெய்வேலி, சு.ஸ்ரீகாந்த்

✉ 'பிரதமரின் பலம், அறிவுரை கூறுவது. நம் முதல்வரின் பலம், அந்த அறிவுரையை மீறுவது' என்ற 'தராசு'வின் பதிலைப் படித்ததும், எங்களையும் மீறி சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது!
வேலூர், வே.ந.கதிர்வேல்

✉ வாயில்லா ஜீவன்களையும் 'செல்லக் குட்டி... புஜ்ஜு¬குட்டி'... என அழைத்து நட்பு ஸ்பெஷலில் ஜமாய்ச்சுட்டீங்களே!
நெய்வேலி, எஸ்.கண்ணன்

✉ ஆயுதம் - பட விமர்சனத்தில் சிரிப்பழகி சினேகாவைப் பற்றி ஒரு வரிகூட எழுதவில்லை... அப்படியென்ன அவர் மேல் கோபம்!
ஈரோடு, ரேவதிப்ரியன்

✉ முத்துராமன் - செல்வம் - ஜார்ஜ் சந்திப்பு எங்கள் கண்களிலும் நீரை வரவழைத்துவிட்டது. நட்பு என்றால் இது வல்லவா நட்பு!
சென்னை, வே. முருகேசன்

✉ 'எங்க ஊர் பிள்ளையார்' அருமையான நல்ல தொடர். 'நரமுக விநாயகர்' ஆலயம் பற்றிய விவரத்தில் மட்டும் சிறு பிழை. 'சிலா' என்றால் எள் என்று கூறப்பட்டுள்ளது. 'திலம்' என்றால் தான் எள். 'சிலா' என்றால் கல். 'தில தர்ப்பணபுரி' என்றுதான் இருக்க வேண்டும்.
திருச்சி, வி.ராஜகோபாலன்

✉ பக்கத்துக்குப் பக்கம் பிரபலங்களுடைய 'நட்பூ'க்களை மலரச் செய்த விதம் சிறப்பூ!
அயன்புரம், த.சத்தியநாராயணன்

✉ கலைஞரின் துணைவியாரும், அம்மாவும் அடித்த கற்பனை லூட்டிதான் ஹைலைட்டாய் மிளிர்ந்தது!
பள்ளிப்பாளையம், ரஞ்சனிப்ரியன்

✉ நட்பு ஸ்பெஷலுக்காக கல்கியார் வி.ஐ.பி.களின் பக்கம் மட்டுமே பார்வையைச் செலுத்தாமல் சாமான்யர்களின் பக்கமும் வலம் வந்தது நெகிழ வைத்தது.
கும்பகோணம், சாமிநாத மூர்த்தி

கல்கி வழங்கும்

சென்னை ஸ்டேஜ்

க்ளிக்ஸ்: பப்பி

வெரைட்டி



• சித்ரா - மதுமிதா



• தரணி - பரத்



'வெரைட்டி' விருது வழங்கும் விழாவில் 'காதல்' கட்டையாண்டிக்குத்தான் ஏக மவுசு. இங்கு பிஸியாக ஆட்டோகிராஃப் போடுகிறார் பாருங்கள்.

செம

"பக்...பக்...பக்...பக்... மாடப்புறா!"

'ஹே... லஜ்ஜாவதி என்ன 50 வருஷத்துக்கு முன்னாடி போயிட்ட'ன்னு கேட்காதீங்க!

தங்களோட 50 வருஷ நினைவுகளை பகிர்ந்துக்கிட்டாங்க 'தி மெட்ராஸ் ப்ளேயர்ஸ்' அப்படீங்கற சென்னையோட சீனியர் தியேட்டர் குரூப். அதான் இந்த எஃபெக்ட்.



1955ல ஆரம்பிச்சு, இப்ப 50 வயசைக் கடந்த இவங்க, ஆரம்பத்துல ரிகர்சல் பண்ண இடம் இல்லாம கார் ஷெட்ல எல்லாம் ரிகர்சல் பண்ணுவாங்களாம். வாவ்! என்ன ஒரு ஆர்வம்! 'கருணைக் கொலை' - ஆமா, சிவசங்கரியோட கதைதான்! அதை 'மெர்சி' (mercy) ன்னு இங்கிலீஷ் டிரெஸ் போட்டு மேடையேத்தப் போறாங்க. எப்போ தெரியுமா, பிப்ரவரி 24, 25, 26ல, மியூசியம் தியேட்டர்ல வைச்சு. நான் கண்டிப்பா மிஸ் பண்ணவே மாட்டேன். ஏன் தெரியுமா? ப்ளேல ஸோலோவா 'தெறம' காட்டப் போறது பி.சி. ராமகிருஷ்ணா. மனுஷருக்கு என்னா வாய்ஸ் தெரியுமா! அவரு பேசறப்போ ஏதோ நம்ம மனசுக்குள்ளேயே உட்கார்ந்து பேசறாப்ல 'எக்கோ' அடிக்குது. இன்னொரு முக்கிய மானவர் யாரு தெரியுமா? 'ப்ளாட்ஃபார்ம்' ஸ்ரீகுமார் வர்மா.





• அஸின்

க்ளிக்ஸ்!

எல்லோரையும் போல் அடிக்கடி சந்தித்துக் கொள்பவர்கள் அல்ல திரையுலகைச் சார்ந்தவர்கள். ஏதாவது விழாக்களில் சந்திக்கும் பொழுதுதான் 'ஹாய்', 'பை' என்று நலம் விசாரிப்பார்கள். 'வெரைட்டி' விருது விழாவில் அப்படி நிகழ்ந்த சந்திப்புகள்தான் இவை...

• எஸ்.ஜே. சூர்யா • விஜய்



கூத்து!

ஹலோ... 'ப்ளாட்பார்ம்'ங்கிறது அவரு ஜனவரி 29, 30, 31-ல சென்னை மியூசியம் தியேட்டர்ல வைச்சு பண்ணப்போற 'ப்லே'வோட நேம்! ஒரு 'ரயில்வே ப்ளாட் ஃபார்ம்'தான் கதைக் களம். ஸ்டேஷன் மாஸ்டர், ஸ்டோர் கீப்பர், போலீஸ்மேன் இவங்களைச் சுத்தி மூவ் ஆகும் கதை! செம கூத்தா இருக்கப் போகுது.

தியேட்டர் ஆர்டிஸ்ட்களில் செம க்யூட்டான ஆளு... யாரு.. யாரு.. கி..கி.. கிரிஷ் கர்னாட்தான். வாவ் மனுஷன் என்னமா கலக்குவாரு தெரியுமா! அவரை சென்னையில் தரிசிக்க, அதுவும் அவரோட ஃபெர்பார்மன்சை ரசிக்க செம சான்ஸ் கிடைக்கப் போகுதுங்கோ. ஆனா அதுக்கு இன்னும் 10 மாதம் தவமிருக்கணும். ப்லே பேரு 'ஹயவதனா'. நவம்பர் 22 -27ல நடக்கப் போகுது மியூசியம் தியேட்டர்ல. வாரே வாவ்!

இந்த வருஷத்துல நிறைய ப்லே நடக்க இருக்கு. எல்லாத்தையும் தெரிஞ்சுக்க, themadrasplayers.com-க்கு போய்ப் பாருங்க டியர்ஸ்!

சொல்ல முடியாது... 'ஆல் இன் ஆல்' லஜ்ஜாவதி கூட திடீர்னு ஸ்டேஜ்ல தோன்றலாம்!. 'யாரங்கே?' அப்படின்னு வசனம் பேசி அசத்தலாம்.

"பக் பக் பக் பக்."

• லஜ்ஜாவதி தி கிரேட்



• ஸ்ரீகுமார் வர்மா



• பி.சி.ராமகிருஷ்ணா



• சிவசங்கரி





• பேஸ்டர்நாக்

டாக்டரின் காதலி!

உலக இலக்கியத்தில் யாராலும் மறக்க முடியாத ஒரு கதாபாத்திரம் டாக்டர் ஷிவாகோ. யார் அந்த ஷிவாகோ?

தனது திருமணத்திற்குப் பின்பு மருத்துவராகப் பணிபுரிய போர்க்களத்திற்கு போகிறான் டாக்டர் ஷிவாகோ. அங்கு லாரா எனும் நர்ஸை சந்திக்கிறான். லாராவும் மணமானவள்தான். தனிமை இருவரையும் இணைக்கிறது. காதல் பூ மலர்கிறது. ஆனால், இருவரும் தங்களை வெளிக்காட்டாமல் இருந்து விடுகிறார்கள்.

போர் நிறைவடைகிறது. டாக்டர் வீடு திரும்புகிறான். யுரால் எனும் இடத்தில் தன் குடும்பத்தாருடன் இணைகிறான். ஆனால், காதல் இவனை துரத்திக்கொண்டு வருகிறது. ஒரு நூலகத்தில் லாராவைச் சந்திக்கிறான். இம்முறை இருவருடைய சம்மதமுமின்றி காதல் தன்னைத்தானே அறிவித்துக் கொள்கிறது.

புரட்சி நடந்து கொண்டிருக்கும் பொழுது காதலுக்கு எங்கே இடமிருக்கும்? இருவரும் ஒரு ரகசிய இடத்தில், ரகசிய அறையில் தங்களை அடைத்துக் கொள்கிறார்கள். காதல், ஒரு பேனா, சில கவிதைகள் இவை தவிர வேறு எதற்கும் அந்த வீட்டில் இடமில்லை.

இந்நிலையில் லாராவின் உறவினர் ஒருவர் இருவரிடமும், பதுங்கியிருந்தால் கண்டுபிடித்து விடுவார்கள் என்று கூறி லாராவைப் பிரித்து அழைத்துச் செல்கிறார். (இவன் ஒரு மோசக்காரன், லாராவை சிறு வயதில் வஞ்சித்தவன்).

லாராவின் பிரிவால் மனமுடைந்த டாக்டர் ஷிவாகோ, மாஸ்கோவிற்குச் செல்கிறான். தன் தம்பியின் உதவியால் ஒரு மருத்துவமனையில் சேர்கிறான். சில கவிதைகள் எழுதுகிறான். ஒரு நாள் ட்ராலியைத் தள்ளிக்கொண்டு போன அவன் தம்பி, ஷிவாகோவின் பிரேதத்தைக் காண்கிறான்....

லாரா ஓடோடி வந்து சேர்கிறாள். உடைந்து போகிறாள். அவன் விட்டுச் சென்ற கவிதைகளை நடுங்கும் கைகளுடன் எடுத்து வாசிக்கிறாள். அதில் நிரம்பியிருந்தது காதலும் லாராவும் மட்டுமே. ஷிவாகோவின் தம்பியுடன் இணைந்து அவன் படைப்புகளை தொகுக்கத் தொடங்குகிறாள்...

டாக்டர் ஷிவாகோவை எழுதியவர் போரிஸ் பேஸ்டர்நாக். இப்புத்தகத்தை எழுதி முடித்தவுடன் அவர் ஒரு பிரதியை ருஷ்ய அரசுக்கு அனுப்பினார். போன வேகத்தில் திரும்பி வந்தது. கூடவே அதற்கான தடையும். ருஷ்ய புரட்சியைப் பற்றிய பேஸ்டர்நாக்கின் வெளிப்படையான கருத்துகள்தான் தடைக்குக் காரணம்.

பின்னர் இப்புத்தகம் இத்தாலிக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கு பதிப்பிக்கப்பட்டது. ஆங்கில, இத்தாலிய மொழியில் மொழிபெயர்ப்புகள் வரத் தொடங்கின. படித்தவர்கள் புருவம் உயர்த்தினர்.

1958ல் பேஸ்டர்நாக்கிற்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஆனால், இதை அவர் ஏற்கக் கூடாது என்று சோவியத் ருஷ்யா பிரசாரம் செய்தது. பத்திரிகைகள் இவரை அவமதித்து எழுதின. மிரட்டல்கள் வரத் தொடங்கின. கலக்கமடைந்த பேஸ்டர்நாக், ஸ்வீடனிலுள்ள நோபல் கமிட்டிக்கு தந்தியனுப்பினார். 'என்னால் இந்த பரிசை ஏற்க முடியாது. மன்னிக்கவும்.'

- மருதன்

எழுத்தாணி



ரூல்ஸ் தெரியாத சென்னை!

“லைசென்ஸ், ஆர்.சி புக் எல்லாம் இருக்கும். ஆனா அவசரத்துல யூனிஃபார்ம் போடாம வந்துடுவோம். பிடிச்சா உடனே ஸ்பாட் ஃபைன் போட்டுடுவாங்க. எல்லாமே கரெக்டா இருந்துச்சுன்னா வாயை ஊதச் சொல்லி, தண்ணி போட்டுக்கிட்டு வண்டி ஓட்டினதாச் சொல்லி ஃபைன்.” -இது ஆட்டோக்கார முருகனின் குமுறல்.


“ஆபீசுக்கு லேட் ஆயிடுச்சேன்னு கொஞ்சம் ஸ்பீடா வந்துட்டா ஓவர் ஸ்பீடுல வந்ததா ஃபைன். ஏதோ ஒரு சிந்தனையில தெரியாம சிக்னல் போட்ட பிறகு மஞ்சள் கோட்டைத் தாண்டினா ஃபைன். டிராஃபிக்தான் இல்லையே, எதுக்குத் தேவையில்லாம சுத்திட்டுப் போகணும்னு ஒரு 'U' டர்ன் போட்டா, ஸ்பாட் ஃபைன்.” - இது பொதுமக்களின் புலம்பல்.

இப்படி அடிக்கடி மாட்டிக்கொண்டு, விழி பிதுங்குபவர்கள் பெரும்பாலும் ரூல்ஸ் பற்றி அ-ஆ கூடத் தெரியாத அதே சமயம், வண்டி மட்டும் ஓட்டத் தெரிந்த அப்பிராணி மனிதர்கள்தாம்.... சரி... இவர்களுக்கு என்னதான் வழி!

சென்னை போக்குவரத்துக் காவல் துறை துணை ஆணையர் ரவி ஐ.பி.எஸ். அவர்களிடம் கேட்டபோது, “முதல்ல எங்களுக்கு ரூல்ஸே தெரியாதுன்னு சொல்றதே சட்டப்படி தப்பு” என்று சூடாக ஆரம்பித்தார்.

“இப்போதைக்கு பஸ், ஆட்டோ, டூவீலர்னு ஒவ்வொன்றுக்கும் தனித்தனி ஸ்பீடு லிமிட் இருக்கு. ஆனா, அதை யாரும் கடைப்பிடிக்கறது இல்ல. அதனால எல்லாருக்கும் பொதுவா குழப்பமில்லாம இருக்கட்டுமேன்னு சராசரியா 30km/Hrனு ஸ்பீடு லிமிட்டைப் மாத்தப் போறோம். தனியார் தண்ணீர் லாரிகள் பகல் நேரத்துல சிட்டிக்குள் அனுமதி இல்லை. ஆனா வந்துடறாங்க. இது தப்பு. பொது மக்கள் சுகாதாரத் துக்காக இப்போ கொஞ்ச நாளா 'பொல்யூஷன் கிளியரன்ஸ் சர்டிஃபிகேட்' வாங்கணும்னு சொல்லியிருக்கோம். இதை பொதுமக்கள் வசதிக்காக பிரைவேட்ல கூட வாங்கலாம்னு சொல்லியும் பலபேர் இதுல அக்கறை காட்டுறதில்லை.

அடுத்து முக்கியமான விஷயம் போக்குவரத்து விதிமுறைப்படி - பாதசாரிகளுக்குத்தான் முன்னுரிமை. அவங்க சாலையைக் கடந்த பிறகுதான் மற்ற வாகனங்கள் போகணும். ஆனா இதை எத்தனை பேர் ஃபாலோ பண்றாங்க? பொதுமக்களுக்கும் சரி, தனியார் வாகன ஓட்டிகளுக்கும் சரி, சமுதாயம் மீது ஒரு பொறுப்பு இருக்கணும். ஆனா அது இல்ல. நாங்களும் பொது மக்கள், வாகன ஓட்டிகள் குறிப்பா, ஆட்டோ டிரைவர்களுக்கு பயிற்சி வகுப்பு, விழிப்புணர்வு முகாம், நன்னடத்தைப் பயிற்சி, முதலுதவிப் பயிற்சி என தொடர்ந்து தந்துகொண்டே வருகிறோம். பள்ளி மாணவர்களுக்குக் கூட போக்குவரத்து விதிமுறைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த தனியார் சேவை நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றி வருகிறோம்... ஆங்காங்கே விதிமுறைகள் பற்றிய விளம்பரங்களைப் பெரிய அளவில் செய்து வருகிறோம். சிம்பிளா சொல்லணும்னா நான் மேலே சொன்ன ரூல்ஸை ஒழுங்கா கடைப் பிடிச்சா ஃபைன் கட்டாம தப்பிக்கலாம்” என்று புன்னகையுடன் விடை கொடுத்தார் ரவி ஐ.பி.எஸ்.



• ரவி ஐ.பி.எஸ்.

- முத்து

கௌரவம் கம்பீரம்

"வாராவாரம் மருத்துவச் செய்திகளுக்கும் முக்கியத்துவம் தருவதே கல்கியின் சிறப்பியல்பு. எங்கள் குடும்பம் முழுவதும் கல்கியைப் பல ஆண்டுகளாக நேசித்து வருகிறது. ஒரு பத்திரிகை இத்தனை ஆண்டுகளாகத் தனது கௌரவத்தையும், கம்பீரத்தையும் காப்பாற்றுவது அத்தனை சுலபமல்ல."

- டாக்டர் ரவி ராமலிங்கம்



படம் : ஸ்ரீஹரி



S.V.முதியோர் இல்லம்



Charitable Trust (Reg)

இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப்படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் டாக்டர்களும், நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எல்லா எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.



மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளிகளுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

முதிய பருவத்தில் மறதி நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.



உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

முதியோர் சேவை பெரியது!

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

S.V. HOME FOR AGED

Charitable Trust (Reg)

50 / 88, Panchali Amman Kovil Street, Arumbakkam, Chennai - 600 106.
(Near Panchali Amman Temple) Tel. Off: 044 - 2475 5700, 2475 6700,
2475 7777 2475 5799,
e-mail:svhome@vsnl.net

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka